www.padippakam.com

# தமிழர் கண்ணோட்டம்

கோப்பு : 14 திபி. 2031 : மீனம்-மேழம்
மடல் : 3-4 கி.பி. 2000 : மார்ச்-ஏப்ரல்

விலை ரூ.5.00



படிப்பகம்

www.padippakam.com



# நிறை குறை

## காலத்தில் வரவேண்டும்

தமிழர் கண்ணோட்டம் காலம் தாழ்ந்து வருவது சரியல்ல. ஒரு இதழை நிறுத்தியாவது தாமதம் இன்றி இனி ஒவ்வொரு மாத இதழும் முந்தைய மாதம் 25ஆம் தேதியே தமிழ் நாட்டில் கிடைக்கும் படியும் வெளிநாடுகளில் முதல் தேதியில் கிடைக்கும்படியும் செய்யுங்கள்.

-ந. அப்துல் இரகுமான், ஆங்காங்.

(தாமதத்திற்கு வருந்துகிறோம். இனி குறை வாராமல் பார்த்துக் கொள்வோம்) (ஆ.ர்)

## அட்டைப்படம் அருமை

ஆர்.எஸ்.எஸ் பற்றிய அட்டைப்படம் வெகு அருமை, தி.மு.க.விற்கு எந்தக் கொள்கையும் கிடையாது. குதிரை கீழே தள்ளியதும் இல்லாமல், குழியும் பறித்தது போல திமுக கொள்கையை விட்டதும் இல்லாமல் ஆர்.எஸ்.எஸ்.க்கு அரி தாரம் பூசிக் கொண்டிருக்கிறது.

-இனியன், திருச்சி -13.

## பூணூல் எங்கே?

ஆர்.எஸ்.எஸ். பையன் உடம்பில் ஏன் பூணூல் இல்லை. நழுவலா?

- கண்ணன், திருவாரூர்.

## பேச்சாளர்கள் எல்லாம் தலைவர்கள் ஆவதில்லை

ம.செந்தமிழன் "உயர்வுக் கோட்பாடு" கட்டுரையில் சிறந்த மேடைப்பேச்சாளர், சிறந்த தலைவர் என்ற கருத்து பரவலாக இருக்கிறது என்றும் கட்சிகளின் களப்பணியாளர்களை விட உயர்ந்தவர்களாக மேடைப் பேச்சாளர்கள் அறியப்படுகிறார்கள் என்றும் கூறப்பட்டிருப்பது ஏற்றுக் கொள்ளும்படி இல்லை. சிறந்த மேடைப் பேச்சாளர்களாக இல்லாத மூப்பனார், டாக்டர் இராமதாஸ் போன்றோர் தலைவர்களாக ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்கிறார்கள். வலம்புரி ஜான் போன்றோர்கள் பேச்சாற்றல் பெற்றிருந்தும் தலைவர்களாக வரமுடியவில்லை.

-கு. இராமகிருட்டினன், தஞ்சை-1

## நடைமுறைக்குகந்தது

பரிமுதல்வனின் "தமிழ்த்தேசிய நீரோட்டமும், அதன் கட்டுமானங்களும்" என்ற கட்டுரை நடைமுறை தேவைக்குரியதாகவுள்ளது. நல்ல தமிழில் பேச வேண்டும் அதே நேரத்தில் புழக்கத்தில் இல்லாத தூய தமிழ் சொற்கள் சிலவற்றை பேசி தனிமைப்பட்டுவிடக் கூடாது என்ற எச்சரிக்கை கவனிக்கத்தக்கது.

-பொ.மாயவன், சென்னை - 83.



## த.தே.பொ.க. ஊர்தி நிதி

### நன்கொடை அளித்தோர் பட்டியல்

| | | ரூ. கா. |
|---|---|---|
| 1. | திரு சா. சந்திரேசன்<br>தலைவர், தமிழ்ச் சிந்தனையாளர் பேரவை, சென்னை. | 5000.00 |
| 2. | திரு ந. அப்துல் ரகுமான், நீடூர். | 1000.00 |
| 3. | தோழர் இரா. பாலசுப்ரமணியம்,<br>சென்னை. | 1000.00 |
| 4. | தஞ்சை நகர த.தே.பொ.க. | 9900.00 |
| 5. | திருத்துறைப்பூண்டி ஒன்றிய<br>த.தே.பொ.க. | 4950.00 |
| 6. | திருவையாறு ஒன்றிய த.தே.பொ.க. | 4400.00 |
| 7. | பூதலூர் ஒன்றிய த.தே.பொ.க. | 1750.00 |
| 8. | தஞ்சை ஒன்றிய த.தே.பொ.க. | 1400.00 |
| 9. | தோழர் ப.ந. ஆறுமுகம்,<br>பக்தவச்சலம் நகர், சென்னை. | 500.00 |
| 10. | தோழர் இராமச்சந்திரன்,<br>அசோக்நகர், சென்னை. | 500.00 |
| 11. | தோழர் கருணாநிதி,<br>அசோக்நகர், சென்னை. | 500.00 |
| 12. | திரு கா. கஜேந்திரன்<br>கலைஞர் நகர், தஞ்சை. | 500.00 |
| 13. | திரு இரா. நாகராசு<br>பட்டுக்கோட்டை. | 100.00 |
| 14. | திரு செ. குருமூர்த்தி<br>பட்டுக்கோட்டை. | 100.00 |
| 15. | திருமகள் நிதியகம்,<br>மருத்துவக் கல்லூரி தஞ்சை. | 100.00 |
| 16. | தோழர் ம. வெங்கடேசுவரக்குமார்,<br>கலைஞர் நகர், தஞ்சை. | 100.00 |
| | | 31,800.00 |

www.padippakam.com

தமிழர் கண்ணோட்டம்

மார்ச்- ஏப்ரல் 2000

தன்னுரிமைப் போருக்கு முன்னுரிமை கொடுப்போம்
தமிழ்த் தேச வரலாற்றில் புதுயுகம் படைப்போம்

# பெரியார் அணை உரிமை மீட்க தேர்தல் கட்சிகளை நம்பிப் பயனில்லை!

கடந்த 5.4.2000 அன்று திருவனந்தபுரம் சென்று தமிழக முதலமைச்சர் கலைஞர் கருணாநிதி கேரள முதலமைச்சர் ஈ.கே. நாயனாருடன் பெரியார் அணை தொடர்பாக பேச்சுவார்த்தை நடத்திவிட்டு தோல்வி முகத்துடன் சென்னை திரும்பியுள்ளார். 152 அடி உயரத்திற்குத் தண்ணீர் தேக்க வேண்டிய அணையில் 136 அடிக்குமேல் தேக்கக் கூடாது என்று கேரள அரசு பிடிவாதமாக மறுத்துவிட்டது.

பக்கத்து மாநிலம் இப்படி நடந்து கொள்கிறதே என்று செய்தியாளர்கள் ஆதங்கத்துடன் கேட்ட போது, “என்ன செய்வது, தமிழ் நாட்டிற்குப் பக்கத்தில் ஆந்திரப்பிரதேசம், கர்நாடகம், கேரளம் ஆகிய மாநிலங்கள் இருக்கின்றன” என்று பொருள் பொதிந்த ஏமாற்றத்துடன் முதலமைச்சர் விடையிறுத்தார்.

இல்லாத இந்திய தேசியம் போலவே, இட்டுக்கட்டிக் கொண்ட திராவிட தேசியமும் தமிழ் நாட்டை வஞ்சிக்கிறது. கோடி கோடியாய்த் தமிழகம் கொட்டிக் கொடுத்ததால் வெட்டப்பட்ட தெலுங்கு கங்கைக் கால்வாயில் கிருஷ்ணாநீரைத் தர ஆந்திரம் சண்டித்தனம் செய்கிறது. வரலாற்றுக் காலம் தொட்டு தமிழகத்தின் உரிமையாய் இருந்து வரும் காவிரியை மறிக்கிறது கர்நாடகம். பெரியார் அணையில் 152 அடி தண்ணீர் தேக்காமல் தடுக்கிறது கேரளம்.

காவிரி நடுவர் மன்ற இடைக்காலத் தீர்ப்பை செயல்படுத்துவது தொடர்பாக புதுதில்லியில் 1998 ஆகஸ்ட் 6,7 நாட்களில் பிரதமர் வாஜ்பாயி முன்னிலையில் நான்கு மாநில முதல்வர்கள் கூட்டம் நடந்தபோது, ஒரு கருத்தும் தெரிவிக்காமல் வாயை மூடிக்கொண்டிருந்தவர் கேரள முதல்வர் நாயனார். அவர் திருவனந்தபுரம் திரும்பும் வழியில் சென்னை விமான நிலையத்தில் செய்தியாளர்களிடம், பெரியார் அணைப் பிரச்சினையில் கேரளாவுக்குச் சாதகமாக தமிழக அரசு நடந்து கொண்டால் நானும் காவிரிப் பிரச்சினையில் தமிழகத்திற்கு ஆதரவாகக் குரல் கொடுப்பேன் என்றார். இதுதான் இந்திய தேசியம்! இவர்கள் கடைபிடிக்கும் சர்வதேசியம்! எல்லா முனைகளிலும் வஞ்சிக்கப்பட்டு நிற்கிறது தமிழகம்.

தமிழகத்தை ஒட்டிய குமுளி - தேக்கடிக்கு அருகே, கேரள எல்லைப் பகுதியில் இருப்பதாகச் சொல்லப்படும் முல்லைப் பெரியார் அணை 1895 ஆம் ஆண்டு அக்டோபர் 10 ஆம் நாள் திறக்கப்பட்டது. அன்று முதல் 999 ஆண்டுகளுக்கு செல்லுபடியாகத் தக்க பெரியார் அணை ஒப்பந்தம் ஒன்றை அப்போதைய பிரித்தானிய இந்தியக் கவுன்சில் செக்ரட்டரியேட்டும் திருவிதாங்கூர் சமஸ்தானமும் செய்து கொண்டன. அதன்படி பெரியார் அணையில் 152 அடி உயரத்திற்குத் தமிழகம் தண்ணீரைத் தேக்கி, தனது விவசாயத்திற்குப் பயன்படுத்திக் கொள்ளலாம். பெரியார் அணை தமிழக அரசின் பொறுப்பில் இருக்கும்.

அனைத்துத் தொடர்புகளுக்கும்
**பெ. மணியரசன்**
ஆசிரியர்,
53(அ) சமீன்தார் குடியிருப்பு,
புது ஆற்றுச் சாலை,
தஞ்சாவூர் - 613 001.
தொ.பே. : **32994**

அச்சிட்டோர்
**நீட் பிரிண்டர்ஸ்,**
சென்னை - 600 003.

வடிவமைப்பு
**காவிரி கணிப்பொறி அச்சு,**
தஞ்சாவூர் - 613 001.
தொலைபேசி: 70018

❖❖❖

அட்டைபடம்: சோமாலியா பஞ்சம்
ஓவியர் புகழேந்தி



படிப்பகம்

www.padippakam.com

152 அடி உயரத்திற்கு தண்ணீர் தேக்கினால் ஆபத்து என்று கேரளாவில் திட்டமிட்டு பீதியூட்டப்பட்ட நிலையில் 1979ஆம் ஆண்டு, மத்திய நீர்வள ஆணையத் தலைவராக தாமஸ் என்ற மலையாளி இருந்தபோது ஒரு தலைப்பட்சமாக பெரியார் அணையில் 136 அடி வரைதான் தண்ணீர் தேக்க வேண்டும் என்றும் அணை பலவீனமாக உள்ளது என்றும் அந்த ஆணையம் அறிவித்தது. அதன்பிறகு தமிழக அரசு அணையை வலுப்படுத்தியது. மத்திய நீர் வள ஆணையம் பார்வையிட்டு முதல் கட்டமாக 145 அடி உயரம் தண்ணீர் தேக்கலாம் என்று சான்று அளித்தது.

ஆனால் கேரளாவில் காங்கிரஸ் கூட்டணி அரசு இருந்தாலும் இடதுசாரிக் கூட்டணி அரசு இருந்தாலும் 152 அடி உயரத்திற்குத் தண்ணீர் தேக்க விடுவதில்லை என்பதில் குறியாக இருக்கின்றன.

152 அடி தண்ணீர் தேக்க முடியாததால், திருபுவனம், திருப்பத்தூர், சிங்கம்புணரி, மானாமதுரை, பரமக்குடி பகுதிகளில் வைகை நீரின்றி வேளாண்மை பாழ்பட்டு கோடிக்கணக்கான ரூபாய் நட்டம் ஏற்படுகிறது. குடிநீர்த்தட்டுப்பாடு ஏற்படுகிறது. தமிழக அரசுக்குச் சொந்தமாய் பெரியார் அணையில் உள்ள மின் உற்பத்தி நிலையம் பாதிக்கப்படுகிறது. கடந்த 20 ஆண்டுகளில் விளைபொருள் இழப்பு ரூ.150 கோடிக்கும் மின் உற்பத்தி இழப்பு ரூ.90 கோடிக்கும் ஏற்பட்டுள்ளதாகத் தமிழக முதல்வர் கேரளாவிடம் கூறியுள்ளார். கல்நெஞ்சக்காரர்களிடம் கருணை பிறக்கவில்லை.

காவிரி நீர் உரிமைக்கு ஒரு துரோக ஒப்பந்தத்தைப் போட்டார் கலைஞர் கருணாநிதி (1998). இவர் முல்லைப் பெரியார் அணையை மீட்டு விடுவார் என்று நம்புவதற்கு நப்பாசை மட்டுமே ஆதாரமாய் இருக்க முடியும்.

உறுதியான, கட்டுக்கோப்பான, போர்க்குணம் மிக்க தமிழ்த் தேசிய எழுச்சி புதிய அலைவீச்சாக எழுந்தால், கர்நாடக, கேரள மாநிலங்களுக்குத் தக்க பதிலடி கொடுத்து நம் உரிமைகளை நிலை நாட்ட முடியும். இப்பொழுதுள்ள எந்தத் தேர்தல் கட்சியும், நாற்காலித்தலைவரும் தமிழன் இழந்த உரிமைகளை மீட்டுத் தரத் திறனற்ற சக்திகள் என்பதை அறிந்து கொள்ள வேண்டும்.

கேரளத்தில் மலையாள தேசிய இறுக்கமும் கர்நாடகத்தில் கன்னட தேசிய வெறியும் தமிழ்நாட்டின் நலன்களுக்குத் தீங்கிழைப்பதைப் பார்த்துக் கொண்டிருக்கும் தமிழர்களே, உங்களின் உரிமையான தமிழ்த் தேசிய உணர்வைப் பெறுங்கள். விரைந்து கட்டி எழுப்புங்கள் தமிழ்த் தேசியத்தை! இருப்பதைக் காப்போம்! இழந்ததை மீட்போம் ●

# தமிழ்நாட்டில் தேவையற்றது தெலுங்குப் புத்தாண்டு விடுமுறை

**சா. சந்திரேசன்**
**தலைவர், தமிழ்ச் சிந்தனையாளர் பேரவை**

தெலுங்குப் புத்தாண்டு பிறந்த நாளுக்கு 05.04.2000 அன்று நடுவண் அரசும் தமிழக அரசும் விடுமுறை விட்டுள்ளன. முன்பு சென்னை இராச்சியம் என்ற பெயரில் நான்கு மாநிலங்கள் சேர்ந்து ஆட்சி புரிந்தது நினைவு கூரத்தக்கது. இதற்கிடையே மொழியின் அடிப்படையில் 1956 உடன் தமிழ்நாடு, கேரளா, ஆந்திரா, கர்நாடகா என்று தனித்தனி மாநிலங்களாக - தேசங்களாக அவை பிரிந்துவிட்டன. இதற்குப்பிறகும் தமிழ்நாட்டில் தெலுங்குப் புத்தாண்டுக்கென்று (உகாதி பண்டிகை) தமிழ்நாடு அரசும் - மய்ய அரசும் விடுமுறை அறிவித்திருப்பது தேவையற்ற ஒன்று என்று கருதுகிறோம். இதனால் எவ்வளவு தொழில் வணிக முடக்கம் - உற்பத்தி இழப்பு - பல்வேறு வகையில் வேலை இழப்பு கல்வி பயிலும் இழப்பு போன்ற வாய்ப்புக் கேடுகள்!

இதன் மூலம் தமிழ்ப்பிஞ்சு உள்ளங்களில் இங்கு நடந்த தெலுங்கு மன்னர்களின் ஆட்சியை நினைவு படுத்தி அடிமை எண்ணங்களைப் புகுத்திடும் உளவியல் தீங்கு உண்டாகும். நமது தமிழ்ப் புத்தாண்டிற்குத் தெலுங்கு தேசத்தில் மாநில மைய அரசு அலுவலகங்களுக்கு இப்படி அரசு விடுமுறை உண்டா? இல்லையே!

புதுவையில் மலையாள தேசத்தில் தெலுங்குப் புத்தாண்டிற்கு அரசு விடுமுறை கிடையாதே!

தேசிய ஜனநாயக முன்னணி ஆட்சியில், பணம் கொடுத்தும் குடிப்பதற்குக் கிருட்டிணா தண்ணீர் கிடைக்கவில்லை என்பதையும் கவனிக்க வேண்டும். எனவே தமிழ் நாட்டில் தெலுங்குப் புத்தாண்டிற்கு அரசு விடுமுறை தேவையற்றது; கூடாது! இனியேனும் தமிழக முதல்வர் கலைஞர் கருணாநிதி இவ்விடுமுறையை நிறுத்தவேண்டும். தமிழ்நாட்டில் வாழும் தெலுங்குச் சிறுபான்மை மக்கள் தங்கள் குடும்ப விழாவாக தெலுங்குப் புத்தாண்டைக் கொண்டாடிக் கொள்வதில் நமக்கு மறுப்பு இல்லை. ஆனால் அரசு விடுமுறை நாளாக அதை அறிவிக்கக் கூடாது என்பதே நமது நிலைபாடு.



படிப்பகம்

www.padippakam.com



# தனியாருக்கு 'தாரை வார்க்க' இருக்கும் சேலம் உருக்காலை

- இராசேந்திரசோழன்

"சேலம் ஸ்டீல்ஸ்" என அழைக்கப்படும் "சேலம் உருக்காலை" 1970 ஆம் ஆண்டு 181 கோடி ரூபாய் மூலதனத்தில் தொடங்கப் பெற்று இன்று 1,100 கோடி ரூபாய் முதலீடு கொண்ட மிகப்பெரிய நிறுவனங்களுள் ஒன்றாக வளர்ச்சியடைந்துள்ளது. அதனுடைய தற்போதைய சந்தை மதிப்பு சுமார் 4,000 கோடி ரூபாய் எனப்படுகிறது. இந்த ஆலையைத் தான் இப்போது தனியாருக்குத் தாரை வார்க்க தில்லி அரசு திட்டமிட்டுள்ளது.

தமிழகத்துக்குப் பெருமை சேர்க்கும் தனிப் பெரும் தொழில்களுள் ஒன்றாக விளங்குவது சேலம் உருக்காலை. இவ்வுருக்காலை உற்பத்தி செய்யும் 'நிலை வெள்ளி' (ஸ்டெயின்லெஸ் ஸ்டீல்-எவர்சில்வர்) க்கு உலகச் சந்தையில் ஒரு தனியிடமும் மதிப்பும் உண்டு. இது இந்தியப் பொருளாதாரத்தில் பெருமளவு அந்நியச் செலாவணியையும் ஈட்டித் தருகிறது.

இப்படிப்பட்ட பெருமைகளோடும், சிறப்புக்களோடும் சுமார் இருபதாண்டுகளுக்கும் மேலாக இலாபகரமாக இயங்கி வந்த இந்த ஆலை கடந்த இரண்டு மூன்று ஆண்டுகளாக நட்டத்தில் இயங்குவதாகச் சொல்லப் படுகிறது.

காரணம், தில்லி அரசின் திறந்த சந்தை, தாராளமயமாக்கல் கொள்கை காரணமாக வெளிநாடுகளிலிருந்து ஏராளமான நிலை வெள்ளித் தகடுகள் இந்தியாவுக்கு இறக்குமதியாயின. அதனோடு போட்டியிட வேண்டிய நிலையில் சேலம் உருக்காலை தன் உற்பத்திச் செலவைக் குறைத்துக் கொள்ள வேண்டிய கட்டாயத்துக்கு உள்ளாகியது.

> **இது பற்றி தமிழக ஆட்சியாளர்கள் எதுவுமே கவலைப்பட்டுக் கொள்ளாமலிருப்பது தான் விசித்திரமாயுள்ளது. அல்லது இவர்களும் தனியார் மயமாதலுக்கு விலை போய் விட்டிருப்பார்களோ என்கிற அச்சத்தையூட்டுகிறது.**

இதற்காக சேலம் உருக்காலையை சற்று விரிவாக்கி, உற்பத்திக்கு தேவைப்படும் எஃகு உருக்குப் பிரிவை (ஸ்டீல் மெல்டிங் ஷாப்-எஸ்.எம்.எஸ்) இங்கேயே நிறுவிக் கொண்டால், உருக்காலைக்கு வேண்டிய மூலப்பொருளை இங்கேயே தயார் செய்து கொள்ளலாம். இதற்கு ரூ 300 கோடி மூலதனம் தேவைப்படும் என்றாலும் இதன் மூலம் உற்பத்திச் செலவு கணிசமாகக் குறையும் என்கிற ஆலோசனை முன் வைக்கப்பட்டது.

கூடவே மற்றொரு ஆலோசனையும் கூறப்பட்டது. தற்போது சேலம் உருக்காலைக்குத் தேவையான 200 கிரேடு ஸ்லாபுகளை மேற்குவங்கம் துர்க்காபூர் ஆலை வழங்கி வருகிறது. இதற்கு அடுத்த 300,400 கிரேடு ஸ்லாபுகளுக்கு கூடுதல் தரம் தேவைப்படுவதால் அவை வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்படுகின்றன.

இப்படி வெளிநாடுகளில் இருந்து இறக்குமதி செய்வதை நிறுத்தி அதே தரத்தில் அதே கிரேடு ஸ்லாபுகளை துர்க்காபூர் உருக்காலையிலிருந்து பெற வேண்டுமானால், துர்க்காபூர் உருக்காலையை சற்று மேம்படுத்த வேண்டும். இதற்கு 50 கோடி ரூபாய் செலவாகும்.

ஆக, சேலம் உருக்காலையை நட்டமின்றி இயங்கச் செய்ய வேண்டுமானால் ஒன்று சேலத்தில் 300 கோடி ரூபாய் செலவிட வேண்டும் அல்லது துர்க்காபூரில் 50 கோடி ரூபாய் செலவிட வேண்டும். இந்த இரண்டில் ஏதாவதொன்றைச் செய்து சேலம் உருக்காலையை நட்டத்திலிருந்து காப்பாற்றலாம். அதன் தரத்தையும் கூடுதலாக மேம்படுத்தலாம் என்பது முன் வைக்கப்பட்ட ஆலோசனை.

இந்தியாவில் உள்ள அனைத்து இரும்பு உருக்காலைகளையும் 'செயில்' (Steel Authority of India Ltd - SAIL) என்னும் அமைப்பு தன் கட்டுப்பாட்டில் வைத்து நிர்வகித்து வருகிறது. பல்வேறு சந்தர்ப்பங்களில் வட நாட்டில் உள்ள இரும்பு உருக்காலைக்ளை யெல்லாம் விரிவாக்கம் செய்து வளர்ச்சியடையச் செய்த இந்த 'செயில்' சேலம் உருக்காலையின் முன்னேற்றத்தில் மட்டும் அக்கறையெடுத்துக் கொள்ள வில்லை. அது ஏன் அக்கறை எடுத்துக் கொள்ள வில்லை என்றும் கேட்பாரில்லை. இப்படிப்பட்ட நிலையில் தான் சேலம் உருக்காலையை விரிவு



படிப்பகம்

www.padippakam.com

படுத்தத் தேவைப்படும் 300 கோடி ரூபாய் தன்னிடம் இல்லை என்று சொல்லி, அதைத் தன்னுடன் சேர்ந்து கூட்டாக அமைக்கத் தனியாருக்கு அழைப்பு விடுத்து டெண்டர் கோரியது 'செயில்'.

இப்படிப்பட்ட சந்தர்ப்பங்களுக்காகவே காத்திருக்கும் பன்னாட்டு நிறுவனங்களுள் ஒன்றான, அமெரிக்க நாட்டைச் சார்ந்த மெக்கன்சி நிறுவனம், கூடவே உருக்காலைத்தொழில்மறு சீரமைப்புக்கான ஆலோசனையையும் இலவசமாக வழங்குவதாகச் சொல்லிக் கொண்டு முன்வந்தது.

இது வழங்கிய ஆலோசனைகளில் மிக மிக முக்கிய மானதும் அடிப்படை யானதுமான ஒன்று, இந்தியா முழுமையும் உள்ள உருக்காலைத் தொழிலாளர்களில் 75,000 பேரை கட்டாய ஒய்வு கொடுத்து வீட்டுக்கு அனுப்ப வேண்டும் என்பதுதான்.

இப்படி தொழிலாளர்களை திடுதிப்பென்று வீட்டுக்கு அனுப்புவதானால் அவர்களுக்கு நட்ட ஈடு தரவேண்டும் என்று கணக்குப் பார்த்து அதற்கு 1,500/- கோடி ரூபாய் செலவாகுமே என்ன செய்வது என்றால், அதற்கு தில்லி அரசு உடனடியாக முன் வந்து இந்த 1,500/- கோடி ரூபாயை செயிலுக்கு வட்டியில்லாத கடனாக அளிக்கத் தயார் என்று சொல்லி இந்த ஆலோசனைக்குத் துணை நின்றது.

அதாவது சேலம் உருக்காலை எஸ்.எம்.எஸ். பிரிவுக்கு 300 கோடி ரூபாய் ஒதுக்க முடியாத, துர்க்காபூர் உருக்காலையை விரிவு படுத்த 50 கோடி ரூபாய் ஒதுக்க முடியாத தில்லி அரசு 75,000 தொழிலாளர்களை வீட்டுக்கு அனுப்ப மட்டும் 1,500/- கோடி ரூபாயை வட்டியில்லாத கடனாகத் தர முன் வந்தது.

விளைவு. எஸ்.எம்.எஸ் பிரிவை மட்டும் தனியாரோடு சேர்ந்து கூட்டாக அமைக்க டெண்டர் கோரிய செயில், சேலம் உருக் காலையின் பெரும்பான்மைப் பங்குகளையே தனியாருக்கு அளிக்கத் தயார் என்று அறிவித்து, இதற்காக உலக அளவிலான டெண்டரும் கோரியது.

இப்படிப்பட்ட டெண்டரில் ஹரியானா மாநிலம் ஹிசார் பகுதியில் செயல்படும் 'ஜிண்டால் ஸ்டிரிப்ஸ் லிமிடெட்' - "ஜி.எஸ்.எல்" என்னும் நிறுவனமும் வேறு மூன்று தனியார் நிறுவனங்களும் சேர்ந்து போட்டி போட்டு சேலம் உருக்காலையைத் தங்கள் வசப்படுத்திக் கொள்ளும் முயற்சியில் இறங்கியுள்ளன.

இப்போட்டியில், டாடா அயர்ன் அன்ட் ஸ்டீல் கம்பெனி மற்றும் ஓர் அமெரிக்க நிறுவனம், ஜெர்மன் நிறுவனம் ஆகியவற்றைப் பின்னுக்குத் தள்ளி, இந்த "ஜிண்டால் ஸ்டிரிப்ஸ் லிமிடெட்" நிறுவனமே முன்னணியில் இருப்பதாகச் சொல்லப் படுகிறது.

காரணம், இந்த ஜி.எஸ்.எல் நிறுவனம் பா.ஜ.க.வைச் சார்ந்தது. தில்லியில் தகவல் தொழில் நுட்பத்துறை அமைச்சராக இருக்கும் பிரமோத் மகாஜனின் உறவினர்களுக்குத் தொடர்புடையது எனப்படுகிறது.

அதோடு சேலம் உருக்காலையின் எதிர்காலம் குறித்து முன்னமேயே அறிந்த பல உயர் அதிகாரிகள் சேலம் உருக்காலையிலிருந்து விருப்ப ஓய்வில் வெளிவந்து அப்படியே ஜி.எஸ்.எல் நிறுவனத்தில் போய் சேர்ந்து சேலம் உருக்காலையின் வரைபடம், ஆவணங்கள், தொழில் நுட்ப ரகசியங்கள், அதன் சிறப்புகளையெல்லாம் விளக்கி சேலம் உருக்காலைக் கபளீகரத்துக்கு உறுதுணையாக இருந்து வருகிறார்கள் என்பதும் தகவல்.

அதாவது நாட்டு முன்னேற்றம் கருதி, மக்கள் வரிப்பணத்தில் வெளிநாடு அனுப்பப்பட்டு அங்கு தொழில் நுட்பம் பயின்று வந்தவர்கள் அந்தத் தொழில் நுட்பங்களையும், ரகசியங்களையும் தனியாருக்குத் தாரை வார்த்து சுயநலவாதிகளாய்ச் செயல்பட்டு வருகிற கொடுமையும் ஒரு புறம் நிகழ்ந்து வருகிறது.

சேலம் உருக்காலைக்கு அதன் எதிர்கால வளர்ச்சியையெல்லாம் உத்தேசித்து அப்போது ஒதுக்கப்பட்ட நிலப்பரப்பு 4,000 ஏக்கர். இதில் வெறும் 1,000 ஏக்கர் மட்டுமே தொழிற்சாலைக்காகப் பயன்படுத்தப்பட்டது. மீத முள்ளதில் தொழிலாளர் குடியிருப்புக்காக 800 ஏக்கரும், மோகன் குமாரமங்கலம் மருத்துவக் கல்லூரிக்காக 150 ஏக்கரும் ஆக மொத்தத்தில் சுமார் 2000 ஏக்கர் போக, எஞ்சியுள்ள 2,000 ஏக்கர் நிலமும் பயன்படுத்தப்படாமல் சும்மாவே கிடக்கிறது.

இந்த 4,000 ஏக்கர் நிலமும் காலம் காலமாக அப்பகுதியில் வசித்து வந்த விவசாய மக்களுடையது. தங்கள் பகுதியில் இப்படி ஒரு தொழிற்சாலை அமைந்தால் தங்களுக்குத் தானே நல்லது என்று கருதியோ, அல்லது தங்கள் சந்ததியினருக்கு வேலை வாய்ப்புக் கிடைக்காதா என்று நம்பியோ அவர்கள் இந்த நிலத்தை அடிமாட்டு விலைக்கு, அப்போது ஏக்கர் ரூ 1500/- விலைக்கு அரசுக்குத் தந்திருக்கிறார்கள். அது தற்போது நூறுமடங்கு அதிகரித்து இன்று ஏக்கர் 1½ லட்சம் வரை விலை மதிப்பிடப்படுகிறது. இந்த 60 கோடி ரூபாய் மதிப்புள்ள அடி நிலமும் சேர்ந்தே தனியார் கைக்குப் போக இருக்கிறது.

அதோடு, இந்த உருக்காலையில் பணியாற்றும் இரண்டாயிரத்து நூறு தொழிலாளர்கள், அதாவது நிலைத் தொழிலாளர்கள் 1300 பேர், ஒப்பந்தத் தொழிலாளர்கள் 500 பேர் அலுவலர்கள் அதிகாரிகள் 300 பேர், ஆகியோரின் குடும்பங்களது எதிர் காலமும் கேள்விக்குள்ளா கியுள்ளது.

எனில், இது பற்றி தமிழக ஆட்சியாளர்கள் எதுவுமே கவலைப்பட்டுக் கொள்ளாமலிருப்பதுதான் விசித்திரமாயுள்ளது. அல்லது இவர்களும் தனியார்



படிப்பகம்

www.padippakam.com

மயமாதலுக்கு விலை போய் விட்டிருப்பார்களோ என்கிற அச்சத்தையூட்டுகிறது.

சேலம் உருக்காலை அமைந்துள்ள இடம், தற்போதைய தமிழக வேளாண்துறை அமைச்சராக உள்ள சேலம் வீரபாண்டி ஆறுமுகத்தாரின் தொகுதிக்கு உட்பட்டது. அவர் இது பற்றி இதுவரை ஏதும் வாய்திறக்க வில்லை.

தமிழகத்தில் ஆளும் கட்சியாகவும், தில்லியில் ஆளும் கூட்டணியில் உறுப்பு வகிக்கும் கட்சியாகவும் உள்ள தி.மு.க வைச் சார்ந்த தொழில் மற்றும் வர்த்தகம் ஆகிய இரண்டு துறைகளுக்குமே பொறுப்பேற்றிருக்கும் மத்திய அமைச்சர் முரசொலி மாறன் இதற்கான எந்த முயற்சியும் மேற்கொள்ளவில்லை.

சேலம்உருக்காலைத் திறப்பு விழாவின்போது பிரதமராக இருந்த இந்திரா காந்திக்கு, அப்போதும் தமிழக முதல்வராக இருந்து சேலத்துக்கே சிறப்பான மாம் பழத்தை தங்கத்தாலேயே செய்து இந்திராகாந்திக்கு பரிசாக அளித்து தி.மு.க அரசுக்குப் பெருமை சேர்த்துக் கொண்ட கருணாநிதி, சேலம் உருக்காலையைக் காப்பாற்ற எந்த தீவிர முயற்சியும் மேற் கொள்ளவில்லை. ஒப்புக்கு தமிழக சட்ட மன்றத்தில் ஒரு மனதாக ஒரு தீர்மானம் நிறைவேற்றியதோடு சரி, இந்தத் தீர்மானத்தையும் அவரின் மனசாட்சியாக விளங்கும் மாறன் கசப்போடு விமர்சனம் செய்ததாகவும் கேள்வி.

ஆக தமிழகத்தில் சேலம் உருக்காலையை காப்பாற்ற உருப்படியான முயற்சிகள் மேற் கொள்ளப்படாத நிலையில் தான் வேறு வழியின்றி அத் தொழிலாளர்கள் பல கட்ட போராட்டங்கள் நடத்தி சேலம் நகர மக்களின் ஆதரவுடன் கடந்த 4.3.2000 அன்று கடைஅடைப்பும் நடத்தி இருக்கிறார்கள்.

சேலம் உருக்காலையைத் தனியார் மயமாக்குவதை எதிர்த்து கேரள முதல்வர் ஈ.கே.நாயனாரும், மேற்குவங்க முதல்வர் ஜோதி பாசுவும், தங்கள் கண்டனங்களை வெளிப் படுத்தியுள்ளனர்.

எனில், தமிழக அரசிடம் இருந்து முதல்வர் கருணாநிதியிடம் இருந்து தான் இதுவரை வலுவான எந்த எதிர்ப்பும் இல்லை.

எல்லாம் தில்லியோடு கூட்டணி சேர்ந்ததால் வந்த வினை என்று சிலர் கருதலாம்.

தெலுங்கு தேசம் கூடத்தான் ஆட்சியில் பங்கு பெறாவிடினும் பா.ஜ.க வுக்கு ஆதரவு தந்து வருகிறது. அது விசாகப்பட்டினம் உருக்காலைக்காக கடந்த ஆண்டு தில்லி அரசோடு போராடி 1,300 கோடி ரூபாய் நிதியுதவி பெற்று ஆலையை விரிவு படுத்தியுள்ளது. சுமார்18,000 பேர்பணிபுரியும் இந்த உருக்காலையையும் எங்கே தனியாருக்குத் தாரை வார்ப்பார்களோ என்று அஞ்சி தெலுங்கு தேச எம்பிக்கள் நாடாளுமன்ற மக்களவையில் குரல் எழுப்பியுள்ளனர். இதற்கும் சரி இதே போன்று சேலம் உருக்காலைப் பிரச்சினை வந்த போதும்சரி ம.தி.மு.க வினரும், திரிணாமுல் காங்கிரசாரும் ஆளும் கூட்டணியில் இருந்தாலும் பா.ஜ.க அரசின் தனியார் மயமாக்கல் கொள்கையை எதிர்த்து குரல் கொடுத்து வருகிறார்கள்.

இப்படியிருக்க, தமிழக தி.மு.க மட்டும் மௌனம் சாதிப்பது வெறும் நாற்காலி ஆசையாலோ, பதவிப்பித்தாலோ மட்டும் அல்ல, இதையும் தாண்டிஅது ஏதோ பலன் பெறுகிறது; தில்லி அரசின் தனியார் மயமாக்கல் கொள்கை ஒரு புறமிருக்க அக்கொள்கையால் பயன்பெறும் சில தனிப்பட்ட சக்திகளின் பங்காளிகளாகவும் அது மாறிப்போயிருக்கிறது என்கிற சந்தேகத்தை வலுப்படுத்துவதாக உள்ளது.

இது குறித்து அ தே தொடர்புடையவர்கள் சிந்திக்க வேண்டும். தவிர இப்பிரச்சினை ஏதோ அப்பகுதி தொழிலாளர் பிரச்சினை தொழிற் சங்க வாதிகள் சம்பந்தப்பட்ட பிரச்சினை என்பதாகக் கருதாமல்,இது தமிழகத்தின் உரிமைப்பிரச்சினை தமிழகத்துக்கு தொழில் வளம் சேர்க்கும், முக்கிய தொழிற்சாலை ஒன்றின் எதிர்காலம் பற்றிய பிரச்சினை என்பதைக் கவனத்தில் கொண்டு, இவ்வுருக்காலை தனியார் மயமாவதை எதிர்த்து அனைத்து தமிழ் உணர் வாளர்களும், தமிழ்த் தேசப் பற்றாளர்களும் ஒருமித்து குரல் கொடுக்க வேண்டும். அதற்கான போராட்டத்திலும் தங்களை ஈடுபடுத்திக் கொள்ள வேண்டும்●

## பகத்சிங் நினைவாக சிதம்பரத்தில் த.இ.மு. திறந்தவெளிக் கருத்தரங்கம்

*தமிழ்நாட்டு இளைஞர்களின் எதிர்காலம் என்ற பொதுத் தலைப்பில் பகத்சிங் நினைவாக தமிழக இளைஞர் முன்னணி கருத்தரங்கம் நடத்தியது. ஏப்ரல் 2 அன்று தெற்கு சன்னதியில் திறந்த வெளிச் கருத்தரங்கமாக இது எழுச்சியுடன் நடைபெற்றது.*

*த.இ.மு. மையக்குழு உறுப்பினர் தோழர் மணிவண்ணன் தலைமை தாங்க, த.இ.மு. சிதம்பரம் நகரச் செயலாளர் தோழர் பா.பிரபாகரன் வரவேற்புரை நிகழ்த்தினார்.*

*இளைஞர்களின் பிரச்சினைகள் குறித்து தோழர் ம.செந்தமிழன் (பொதுச்செயலாளர், தமிழக மாணவர் முன்னணி) உரையாற்றிய பின் அரசியல் எதிர்காலம் பற்றி பேரா. த. செயராமன் எழுச்சியுரையாற்றினார். பொருளியல், பண்பாட்டு எதிர்காலம் பற்றி தோழர் பெ. மணியரசன் (பொதுச்செயலாளர், த.தே.பொ.க.) பேசினார். தோழர் சௌந்தரராசன் நன்றி நவின்றார்.*


படிப்பகம்

www.padippakam.com

## கிளிண்டனே திரும்பிப் போ!

ஈழத் தமிழர்களை திட்டமிட்டு இனப்படுகொலை செய்து வரும் சிங்கள ராணுவத்திற்கு நவீன ஆயுதங்களை வழங்குவது என அமெரிக்க அரசு செய்துள்ள முடிவிற்கு தமிழர்களின் கடும் எதிர்ப்பைத் தெரிவிக்கும் வகையில் சென்னையில் மார்ச் 20ல் அமெரிக்க துணை தூதுவர் அலுவலகத்திற்கு முன் ஆர்ப்பாட்டம் நடத்துவது என தமிழீழ விடுதலை ஆதரவாளர் ஒருங்கிணைப்புக்குழு அறிவித்திருந்தது.

உலகம் முழுக்க ஆயுதம் விற்று மரண வியாபாரம் செய்யும் அமெரிக்க அதிபர் கிளிண்டன் இந்தியாவிற்கு வருகை தந்த வேளையில் இந்த ஆர்ப்பாட்டம் அனைவரின் கவனத்தையும் கவர்ந்தது. வள்ளுவர் கோட்டத்திலிருந்து திரு பழ. நெடுமாறன் (தலைவர், தமிழீழ விடுதலை ஆதரவாளர் ஒருங்கிணைப்புக்குழு) தலைமையில் ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் ஒன்று கூடி அமெரிக்க துணைத் தூதுவர் அலுவலகத்திற்கு ஊர்வலமாகச் செல்ல முயன்றபோது காவல் துறை அவர்களைத் தடுத்து நிறுத்தி கைது செய்தது.

தோழர்கள் பெ. மணியரசன் (பொதுச் செயலாளர், த.தே.பொ.க.) சுப.வீரபாண்டியன் (தலைவர்,தமிழ் தமிழர் இயக்கம்) வே.ஆனைமுத்து (மார்க்சிய பெரியாரிய பொதுவுடைமைக் கட்சி) ஆனூர் ஜெகதீசன் (பெரியார் தி.க.) கோவை இராமகிருட்டினன்( தமிழ்நாடு தி.க.) உட்பட பல்வேறு அமைப்புகளைச் சார்ந்தவர்கள் கைது செய்யப்பட்டு எழும்பூரில் உள்ள இராசரத்தினம் விளையாட்டு அரங்கத்திற்குக் கொண்டு செல்லப்பட்டு அங்கு காவலில் வைக்கப்பட்டனர்.

மாலையில் அனைவரும் விடுதலை செய்யப்பட்டனர்.

### பாராட்டுகள்

நெய்வேலி தோழர் இரெ. சிவலிங்கம் விருப்ப ஓய்வு பெற்றதை ஒட்டி அவருக்கு நெய்வேலி நிலக்கரிச் சுரங்கம் மற்றும் அனல் மின் நிலைய தொழிலாளர்கள் சிறப்பாக பிரியா விடை நிகழ்ச்சி நடத்தினர். அப்போது தமிழர் கண்ணோட்டம் வளர்ச்சிக்கு ரூ.500/- தோழர் சிவலிங்கம் அன்பளிப்பாக வழங்கினார்.

நாமக்கல் பாவலர் நிறைமதி தமிழர் கண்ணோட்டத்திற்கு ரூ.100/- நன்கொடை வழங்கினார். இருவருக்கும் நமது பாராட்டுகள்.

- ஆசிரியர்

## ஈழத் தமிழர் ஆதரவு எழுச்சி மாநாடு

தமிழீழ விடுதலை ஆதரவாளர் ஒருங்கிணைப்புக்குழு சார்பில் திருவாரூரில் 19.2.2000 அன்று மிகச் சிறப்பாக நடைபெற்றது.

திரு. நா. அருணாசலம் (நிறுவனர், தமிழ்ச் சான்றோர் பேரவை) தலைமை தாங்கினார். திரு பழ. நெடுமாறன் மாநாட்டை தொடங்கி வைத்து சிறப்புரையாற்றினார்.

அன்பு தென்னரசன் குழுவினரின் அகதி என்ற ஓரங்க நாடகமும், தோழர் கி. வெங்கட்ராமன் தலைமையில் ஈழ விடுதலையின் வெற்றிப் பாதைக்கு பெரிதும் காரணம் போராளிகளின் போர்த்திறனே! ஈழத் தமிழ் மக்களின் ஆதரவே! என்னும் பொருளில் பட்டி மன்றமும், கவிஞர் இன் குலாப் தலைமையில் என்னை எழுதென்று சொன்னது ஈழம் என்னும் தலைப்பில் கவிஞர்கள் வாணியம்பாடி இக்பால், அறிவுமதி பச்சியப்பன், கபிலர் பங்கேற்ற கவியரங்கமும் மிகச் சிறப்பாக நடைபெற்றது.

திரு ஆனூர் ஜெகதீசன் தலைமையில் நடைபெற்ற நிறைவரங்கத்தில் தோழர்கள் பெ. மணியரசன், தியாகு, சுப.வீரபாண்டியன், விடுதலை இராசேந்திரன், புதுகை பாவாணன் ஆகியோர் சிறப்புரையாற்றினர்.

முன்னதாக திரு. மு. பெரியசாமி (மாநாட்டு அமைப்பாளர்) வரவேற்புரையாற்றினார்.

தோழர் ச. கலைச்செல்வன் நன்றி கூறினார்.

## மைய அரசும் - மதவாதமும் கருத்தரங்கம்

சென்னை தமிழ்ச் சிந்தனையாளர் பேரவை சார்பில் 9.4.2000 அன்று மைய அரசும் - மதவாதமும் என்ற பொருளில் கருத்தரங்கம் சந்திரேசன் மாளிகையில் (காசி தியேட்டர் அருகில்) நடைபெற்றது.

தோழர் நிர்மலா தலைமை தாங்கினார். தோழர்கள் ம. செந்தமிழன் முத்துக்குமார் ஆகியோர் தொடக்கவுரை நிகழ்த்தினர்.

மைய அரசும்-மதவாதமும் என்ற பொருளில் தோழர் நா.வைகறை (பொதுச் செயலாளர், த.இ.மு.) கருத்துரை வழங்கினார்.

திருசா.சந்திரேசன் (காப்பாளர், தமிழ்ச் சிந்தனையாளர் பேரவை) வரவேற்றார். திரு பொ. மாயவன் (அமைப்பாளர், த.சி. பே.) நன்றி கூறினார்.



படிப்பகம்

www.padippakam.com

# அமெரிக்கத் தலையீட்டிற்கு ஒரு ரத்தினக் கம்பளம்

- வடமலை

அன்பான உபசரிப்பும், அடிமைத்தனமான பல்லிளிப்பும் அடிப்படையிலேயே வேறுபட்டவை. தனது அழைப்பை ஏற்று வருகை தரும் நட்பு நாட்டுத் தலைவருக்கு ஒரு அரசு வரவேற்பு அளிப்பது புரிந்து கொள்ளக் கூடியதே. ஆனால் அமெரிக்கக் குடியரசுத் தலைவர் கிளிண்டனின் வருகையின்போது நடந்தது வேறு.




தமக்குக் கட்டுப்பட்டதொரு பாளையப்பட்டில் பவனிவரும் சுல்தானைப் போல், கிளிண்டன் இந்தியாவில் பயணம் செய்தார். தில்லி, ஆக்ரா, ஜோத்பூர், ஜெய்ப்பூர், ஐதராபாத், மும்பை என்று அவர் பயணம் செய்த இடங்களெல்லாம், அவர் பயணம் முடியும் வரையில் அமெரிக்கக் காவல்துறையின் கட்டுப்பாட்டுக்கு மாறின, மார்ச் 19 ஆம் நாள் கிளிண்டன் வந்து இறங்கும் போது தில்லி பாலம் விமான நிலையப் பாதுகாப்பு அதிகாரிகளும், இந்திய இராணுவத்தினரும் அகற்றப்பட்டு, விமான நிலையம் முழுக்க முழுக்க அமெரிக்க அதிகாரிகளின் கட்டுப்பாட்டுக்கு மாறியது.

சின்ன எசமானியின் பின்னால் ஓடும் பண்ணை கணக்குப்பிள்ளையாக மாறி கிளிண்டன் மகள் செல்சியா பின்னால் ஓடினார் இந்திய வெளியுறவுத்துறை அமைச்சர் ஜஸ்வந்த் சிங். கிளிண்டன் குடும்பத்தினர் ஹோலி பண்டிகையில் கலந்து கொள்ள ஜோத்பூர் சென்றபோது அவர்கள் பின்னாலேயே சென்றார் ஜஸ்வந்த் சிங். சாதாரண ஒரு அதிகாரி இருக்க வேண்டிய இடத்தில் இந்திய வெளியுறவு அமைச்சரை அனுப்பி, தமது விசுவாசத்தைக் காட்டிக் கொண்டது வாஜ்பாய் அரசு.

> நாடாளுமன்ற மைய மண்டபத்தில் மார்ச் 22 - அன்று உரையாற்றிவிட்டு வெளியே வந்த கிளிண்டனை அருகிலிருந்து பார்க்கவும், அவருடன் கைகுலுக்கவும், எம்.பிக்கள் முண்டியடித்துக் கொண்ட காட்சி அருவருப்பாக இருந்தது.

நாடாளுமன்ற மைய மண்டபத்தில் மார்ச் 22 - அன்று உரையாற்றிவிட்டு வெளியே வந்த கிளிண்டனை அருகிலிருந்து பார்க்கவும், அவருடன் கைகுலுக்கவும், எம்.பிக்கள் முண்டியடித்துக் கொண்ட காட்சி அருவருப்பாக இருந்தது.

கிளிண்டனின் பயணம் அறிவிக்கப் பட்டதிலிருந்து இந்தியப் பத்திரிகைகளும், தொலைக்காட்சிகளும் இதைப் பற்றிய செய்திகளையே முதன்மைப்படுத்தி வந்தன. அதே சமயம் அமெரிக்கப் பத்திரிகைகள் இது பற்றி பரபரப்பு ஏதும் காட்டவில்லை. ஏனெனில் கிளிண்டனின் பதவிக்காலம் இன்னும் சில மாதங்களே இருக்கின்றன. அங்கு அடுத்த குடியரசுத் தலைவர் யார் என்பதே முக்கியச் செய்தி.



படிப்பகம்

www.padippakam.com

கிளிண்டனின் தெற்காசியப் பயணம் அறிவிக்கப்பட்டதிலிருந்து, பாகிஸ்தானை விட இந்தியாவே அமெரிக்காவுக்கு மிகவும் 'வேண்டிய' நாடு என்று உறுதி செய்து கொள்ள படாதபாடுபட்டது பா.ஜ.க. அரசு. பாகிஸ்தானை 'பயங்கரவாத நாடு' என அறிவிக்குமாறு வலியுறுத்திப் பார்த்து, அது நடக்காதபோது, கிளிண்டன் பாகிஸ்தானுக்குச் செல்லக் கூடாது என்று கெஞ்சிப் பார்த்தது. அதுவும் முடியவில்லை. இப்போது "கிளிண்டன் இந்தியாவில் நான்கு நாள் தங்கினார்; பாகிஸ்தானில் நான்கு மணி நேரம் தான் இருந்தார்" என்று திருப்திபட்டுக் கொள்கிறது.

எனவே, பாகிஸ்தானோடு போட்டி போட்டுக்கொண்டு அமெரிக்கா பக்கம் சாய்கிறது இந்திய அரசு. ஆயினும் இதனால் கூடுதல் பலனடைவது அமெரிக்க முற்றாதிக்கமே ஆகும். கிளிண்டன் - வாஜ்பாய் கூட்டறிக்கை இதனை உறுதி செய்கிறது.



நீண்ட காலமாகவே, பாகிஸ்தான் எதிர்ப்பு என்பது இந்திய வெளியுறவுக் கொள்கையின் முக்கிய கூறு என்றாலும், அண்மைக் காலமாக இப்போக்கு தீவிரப்பட்டுள்ளது. (அதுபோல், பாகிஸ்தான் அரசுக்கு இந்திய எதிர்ப்பு என்பதே முக்கிய கொள்கை) பாரதீய ஜனதாவின் இஸ்லாமிய எதிர்ப்பு கொள்கை ஆகியவற்றிற்கு ஏற்றதாகவும் இப்போக்கு உள்ளது. இன்றைய நிலையில் இஸ்லாமிய அடிப்படை வாதமே தமது முக்கிய எதிரி என்று அமெரிக்கா அறிவித்துள்ளது. இஸ்லாமிய எதிர்ப்பு என்ற புள்ளியில் இந்திய அரசும், அமெரிக்க வல்லரசும் அரசியல் வழியில் நெருங்கி வரலாம் என்று பா.ஜ.க. அரசு கணக்கு போடுகிறது.

## கிளிண்டனே திரும்பிப் போ!
## நாடு முழுவதும் கண்டன ஆர்ப்பாட்டம்

இந்திய அரசு கிளிண்டனை தெண்டனிட்டு வரவேற்ற போதிலும், நாடு முழுதும் பல்வேறு அமைப்புகள் கிளிண்டன் வருகைக்கு எதிர்ப்பு தெரிவித்து ஆர்ப்பாட்டங்கள் நடத்தின.

மார்ச் 20-ஆம் நாள் தமிழீழ விடுதலை ஆதரவாளர் ஒருங்கிணைப்புக்குழு சென்னையில் ஆர்ப்பாட்டம் நடத்தியது. சிங்களப் பேரினவாத அரசுக்கு அமெரிக்க வல்லரசு நவீன ஆயுதங்களை வாரி வழங்கி முன்வந்து தமிழினப் படுகொலைக்குத் துணை செய்கிறது. இதனைக் கண்டிக்கும் வகையில் தமிழீழ ஆதரவாளர்கள் 'கிளிண்டனே திரும்பிப் போ!' என முழங்கினர். கைதாகி மாலை விடுதலை செய்யப்பட்டனர்.

சி.பி.எம், சி.பி.ஐ. உள்ளிட்ட இடது சாரிக் கட்சிகளும், லாலு பிரசாத் யாதவின் ராஷ்ட்ரிய ஜனதா தளமும் கிளிண்டன் உரையாற்றிய நாடாளுமன்ற கூட்டுக் கூட்டத்தைப் புறக்கணித்தன.

சி.பி.எம்., சி.பி.ஐ., சி.பி.ஐ.(எம்.எல்), எஸ்.யு.சி.ஐ., ஆர்.எஸ்.பி., பார்வர்ட் ப்ளாக் உள்ளிட்ட பல்வேறு இடதுசாரி கட்சிகள் கூட்டாகவும் தனித்தனியாகவும் கண்டன ஆர்ப்பாட்டங்களை நடத்தின. "இந்திய நாடு விற்பனைக்கல்ல, கிளிண்டனே திரும்பிப்போ!" என்று நாடு முழுதும் பல்வேறு நகரங்களில் இக் கட்சிகள் முழக்கம் எழுப்பின. தில்லியில் ஆர்ப்பாட்டங்கள், கூட்டங்கள் [illegible] தடை விதிக்கப்பட்டது. தடையை மீறி பேரணியாக வந்தவர்கள் மீது காவல்துறை தடியடி நடத்தியது.

ஆக்ராவில் கிளிண்டன் வருவதையொட்டி நகரமே சிறைக்கூடம்போல மாற்றப்பட்டதை எதிர்த்து "கிளிண்டனே திரும்பிப் போ" என உள்ளூர்வாசிகள் ஆர்ப்பாட்டம் செய்தனர். கிளிண்டன் வருகையை எதிர்த்து காந்திய வாதிகளும், பல்வேறு மகளிர் அமைப்புகளும் கூட ஆர்ப்பாட்டம் செய்தனர்.

போபால் நச்சு வாயுக் கசிவினால் பாதிக்கப்பட்ட குடும்பத்தினர் போபாலில் நான்கு நாட்களும் கண்டன ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். [illegible] தலைமையில் சுற்றுச் சூழல் அமைப்பினர் கண்டன உண்ணாவிரதம் நடத்தினர்.

இந்திய - அமெரிக்க உறவு : 21-ஆம் நூற்றாண்டுக்கான தொலை நோக்கு" என்ற பெயரில் (சுருக்கமாக தொலைநோக்கு அறிக்கை **Vision Statement**) மார்ச் 21-ஆம் நாள் இக் கூட்டறிக்கை தில்லியில் வெளியிடப்பட்டது.

"புதிய நூற்றாண்டில் இந்தியாவும் அமெரிக்காவும் அமைதிக் கூட்டாளிகளாக இருப்போம். இரு நாடுகளுக்கும் இந்த மண்டலத்தின் பாதுகாப்பு (**Regional Security**) மற்றும் சர்வதேச பாதுகாப்பு ஆகியவற்றில் பொதுத் தேவையும், ஒத்திசைந்த பொறுப்பும் (**Common interest and complementary responsibility**) இருக்கிறது. ஆசியாவிலும், அதற்கப்பாலும் தொலை நோக்கு நிலைத்தன்மை (**Strategic**



படிப்பகம்

www.padippakam.com

**stability)** நிலவ நாம் அடிக்கடி தொடர்ந்து ஆலோசனை செய்வோம்; நாம் நமக்குள் சேர்ந்தும் மற்றவர்களுடன் சேர்ந்தும் செயல்படுவோம் என்கிறது 'தொலைநோக்கு' அறிக்கை.

கிட்டத்தட்ட இது ஒரு இராணுவ கூட்டு ஒப்பந்தம் போல் உள்ளது. இதன் மூலம் தெற்காசியப் பகுதியில் அமெரிக்கா தலையிடுவதை இந்தியா ஏற்றுக் கொள்வது உறுதி செய்யப்படுகிறது. இந்தக் கூட்டறிக்கையில் வேறொரு இடத்தில் "தெற்காசிய சிக்கல்களைத் தெற்காசிய நாடுகளே தீர்த்துக் கொள்ளமுடியும்" என்று கூறப்பட்டிருப்பதை மேற்கண்ட பின்னணியில் புரிந்து கொள்வது அவசியம். அமெரிக்க வல்லரசின் கண்காணிப்பில், அதன் வழிகாட்டுதலுக்கு உட்பட்டு பேசிக் கொள்வது என்பதே இதன் பொருள்.

தெற்காசியாதான் "உலகில் மிக அபாயகரமான பகுதி" என்று அமெரிக்க அரசு வர்ணித்து வருவதன் உள்நோக்கம் இதுதான்.

"பயங்கரவாதத்தை முறியடிப்பதில் இரு நாடுகளும் ஒத்துழைக்க வேண்டும்" என்று கூட்டறிக்கை கூறுகிறது. இந்தியா விடுதலைப் புலிகள் அமைப்பைத் தடைசெய்து வருகிறது. அமெரிக்காவும் புலிகளை பயங்கரவாத அமைப்பாக அறிவித்துள்ளது. இந்த நிலையில் இந்த அறிக்கைகளின் விளைவுகள் ஆராயத் தக்கவை.

அணு வெடிப்பு சோதனைத் தடை (CTBT) ஒப்பந்தம் பற்றி அமெரிக்காவுக்கும், இந்தியாவுக்கும் இருக்கும் கருத்து வேறுபாட்டை இந்தத் "தொலைநோக்கு" அறிக்கை ஏற்றுக் கொள்கிறது. பொக்ரானில் இந்திய அரசு அணு வெடிப்பு சோதனை நடத்தியது தேவையற்றது; பா.ஜ.க. அரசின் சொந்த அரசியல் தேவைகளுக்காக செய்யப்பட்டது என்பதே நமது கருத்து. ஆயினும், அணு வெடிப்பு சோதனையை கைவிடுமாறு அமெரிக்கா வலியுறுத்துவது ஆதிக்க உள்நோக்கம் கொண்டது. உலகில் தன்னைத் தவிர வேறு யாருமே அணு ஆயுதம் வைத்திருக்கக் கூடாது என்பதே அமெரிக்க வல்லாட்சியின் கொள்கை. அதற்காகவே சி.டி.பி.டியில் கையொப்பமிடுமாறு இந்தியாவை வலியுறுத்துகிறது.

வரம்புக்குட்பட்டு அணு ஆயுதம் வைத்திருக்க வேண்டிய தேவை இந்தியாவுக்கு இருப்பதாக கூட்டறிக்கையில் குறிப்பிட்டிருந்தாலும், அடுத்த நாளே வாஜ்பாயின் குரல் மாறியது. நாடாளுமன்ற மைய மண்டபத்தில் பேசும்போது, சி.டி.பி.டியில் கையெழுத்திட மாட்டோம் என்று கூறுவதற்கு மாறாக, "நாட்டுக்குள் இப் பிரச்சினையில் கருத்தொற்றுமை ஏற்பட்ட பிறகே, அணு வெடிப்பு சோதனைத் தடை ஒப்பந்தத்தில் கையொப்பம் இட முடியும்" என்றார் வாஜ்பாய். தனது நிலைப்பாடு என்ன என்பதைத் தெளிவு படுத்துவதற்கு மாறாக, அடுத்த கட்சிகளின் மேல் பொறுப்பைத் தள்ளிவிடுகிற வேலை இது.

**வரம்புக்குட்பட்டு அணு ஆயுதம் வைத்திருக்க வேண்டிய தேவை இந்தியாவுக்கு இருப்பதாக கூட்டறிக்கையில் குறிப்பிட்டிருந்தாலும், அடுத்த நாளே வாஜ்பாயின் குரல் மாறியது. நாடாளுமன்ற மைய மண்டபத்தில் பேசும்போது, சி.டி.பி.டியில் கையெழுத்திட மாட்டோம் என்று கூறுவதற்கு மாறாக, 'நாட்டுக்குள் இப் பிரச்சினையில் கருத்தொற்றுமை ஏற்பட்ட பிறகே, அணு வெடிப்பு சோதனைத் தடை ஒப்பந்தத்தில் கையொப்பம் இட முடியும் என்றார் வாஜ்பாய். தனது நிலைப்பாடு என்ன என்பதைத் தெளிவு படுத்துவதற்கு மாறாக, அடுத்த கட்சிகளின் மேல் பொறுப்பைத் தள்ளிவிடுகிற வேலை இது.**

"உலக ஜனநாயக சமூகம் என்ற கூட்டமைப்பை இந்த ஆண்டே துவங்க இருநாடுகளும் ஒத்துழைப்போம்" என்கிறது 'தொலைநோக்கு' அறிக்கை. கருத்துக்களத்தில் அமெரிக்க சார்பு பிரச்சாரத்தைக் கட்டவிழ்த்து விடுவதே இதன் உள்நோக்கம்.

அறிவு சார் தொழில்களிலும், உயிர் தொழில் நுட்ப அரங்கிலும், இருநாடுகளும் ஒத்துழைக்க உறுதி பூண்டிருப்பதாக கூட்டறிக்கை கூறுகிறது. ஏற்கெனவே மைக்ரோ சாஃப்ட் நிறுவனமும், மொன்சன்டோ முதலான உயிர் தொழில் நுட்ப (Bio-tech) நிறுவனங்களும் இந்தியாவை ஆக்கிரமித்துள்ள நிலையில், இந்த கூட்டறிக்கை அமெரிக்க நிறுவனங்களுக்கு இந்திய சந்தையை இன்னும் அகலத்திறந்து விடுவதை விரைவுபடுத்தும் நோக்கத்தை வெளிப்படுத்துகிறது. உள்நாட்டுத் தொழில்கள் நசுக்கப்படும். இந்திய வேளாண்மை மேலும் மேலும் அமெரிக்க நிறுவனங்களைச் சார்ந்திருக்க வேண்டி வரும்.

கூட்டறிக்கை வெளியான மறுநாளே "இறக்குமதி விதிகள் மேலும் தளர்த்தப்படும்" என்று நிதியமைச்சர் யஸ்வந்த் சின்கா கூறியிருப்பது கவனிக்கத் தக்கது. கிளிண்டன் வருகையின் போது ஒத்துழைப்பு ஒப்பந்தம் ஏற்பட்டிருப்பதும், இருதரப்பு வர்த்தகப் பேச்சு வார்த்தை குறித்த அடிப்படைகள் வரையறுக்கப்பட்டிருப்பதும் நினைவு கூரத்தக்கது.

உலக வர்த்தக அமைப்பு மாநாடு சியாட்டில் நகரில் நடந்தபோது இந்தியாவைப் பொருத்து எவையெல்லாம் அமெரிக்காவுக்குத் தடங்கலாக இருந்தனவோ, அவற்றில் பெரும்பாலானவை நீக்கப்பட்டுள்ளன என்பதே இவற்றின் சாரமான உண்மை.

'சுதேசிவாதம்', 'இந்திய தேசியப் பெருமிதம்' என்று வாயொழுகப் பேசினாலும் நடை முறையில் அமெரிக்கசார்புக் கொள்கையிலேயே பாரதிய சனதா நடைபோடுகிறது.

கிளிண்டனின் இந்தியப் பயணம் இதையே உறுதி செய்கிறது ○


படிப்பகம்

www.padippakam.com

தமிழ் வழியில் படித்தோர்க்கு உயர்கல்வியில் இட ஒதுக்கீடு, வேலைவாய்ப்பில் முன்னுரிமை கோரி

# தமிழக மாணவர் முன்னணி ஆர்ப்பாட்டம்

1. பன்னிரண்டாம் வகுப்பு வரை தமிழ் வழியில் படித்தவர்கள் அவர்களின் மொத்த எண்ணிக்கைக்கேற்ற விகிதத்தில் மருத்துவம், பொறியியல், வேளாண்மை, சட்டம் போன்ற தொழிலியல் படிப்பில் சேர்வதற்கு இடம் வழங்க வேண்டும்.

2. தமிழ் வழியில்படித்தவர்களுக்கு வேலை வாய்ப்பில் முன்னுரிமை வழங்க வேண்டும்.

3. கல்லூரியில் தமிழ் வழியில் படிப்பவர்களுக்கு தற்போது அரசு வழங்கும் ஊக்கத்தொகையை உயர்த்தி ஒரு பருவத்திற்கு ரூபாய். 1000/- வீதம் ஓர் ஆண்டிற்கு ரூ.2000/- வழங்க வேண்டும்.

4. கல்லூரியில் தமிழ்வழியில் படிப்பவர்களுக்குரிய பாடப்புத்தகங்களை உடன் அச்சிட்டு வெளியிட வேண்டும் என்பது உள்ளிட்ட ஆங்கில ஆதிக்க ஒழிப்பு, தமிழ் உரிமைக் காப்பு மாநாட்டு தீர்மானங்களை வலியுறுத்தி தமிழக மாணவர் முன்னணி சார்பில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

தஞ்சாவூர்

3.3.2000 வெள்ளி மாலை தொடர் வண்டி நிலையம் அருகில் தோழர். சி. குணசேகரன் தலைமையில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. கோரிக்கைகளை விளக்கி தோழர் அ. வில்லியம் (துணைப் பொதுச் செயலாளர், த.மா.மு.) மற்றும் முன்னனி தோழர்கள் உரையாற்றினர்.

சிதம்பரம்.

8.3.2000 புதன் மாலை சிதம்பரம் மேலவீதியில், (அண்ணாசிலை எதிரில்) தோழர்.பா.ரெங்கசாமி தலைமையில் தொடர் முழக்கப் போராட்டம் நடைபெற்றது. போராட்டத்தை விளக்கி தோழர்கள் கி.வெங்கட்ராமன் (தலைமைச் செயற்குழு, த.தே.பொ.க.)



சிதம்பரம்

அ.வில்லியம் பா.பிரபாகரன் (நகரச் செயலர் த.இ.மு.) கணேசமூர்த்தி இராசகோபால் மற்றும் திரு.இராம.ஆதிமூலம் (துணைத்தலைவர், தமிழ் காப்பணி) முனைவர் சி. இரா. இளங்கோவன், திரு பெ. மணிவாசகம் (ஆளவை உறுப்பினர் அண்ணாமலைப் பல்கலைக்கழகம்) ஆகியோர் உரையாற்றினர். தோழர் இராஜரெத்தினம் நன்றி கூறினார்.

திண்டிவனத்தில் ஆர்ப்பாட்டம்

பாரதிய சனதா அரசின் பார்ப்பனிய பாசிச வெறியைக் கண்டித்து திண்டிவனம் வட்டாட்சியா அலுவலகம் முன்பு 25/2/2000 அன்று நடைபெற்றது. த.தே.பொ.க. திண்டிவனம் நகர செயலர் தோழர் மு. கந்தசாமி தலைமையில் நடைபெற்ற இவ்வார்ப் பாட்டத்தில் தோழர்கள் பா. கல்யாணி, ப. பாபு, இரா. மணி, தி.அ. நசீர், க. செங்கழனி வழக்குரைஞா இரா. பார்த்திபன், க.மு. தாஸ் நவா. எழுமலை மற்றும் ச. பழனிவேலு ஆகியோர் கண்டன உரையாற்றினர்.

சென்னை

பனகல் பூங்கா அருகே தமிழக மாணவா முன்னணியின் தலைவர் அருவி தலைமையில் கல்வி கோரிக்கைகளை முன்வைத்து ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. மாணவர் முன்னணி பொதுச் செயலாளர் ம.செந்தமிழன், துணை பொதுச் செயலர் அ. வில்லியம் ஆகியோரும் தமிழ்ச் சிந்தனையாளர் பேரவைத் தலைவர் திரு. சா. சந்திரேசன், த.தே.பொ.க. பொதுக்குழு உறுப்பினர் தோழர் அ. பத்மநாபன், த.இ.மு. தலைவர் தோழர் ச. யோகநாதன் ஆகியோரும் உரையாற்றினர்.



படிப்பகம்

www.padippakam.com

# நேரான் விடைகள்

☞ சிரிமாவோ, இந்திராகாந்தி, சந்திரிகா, ஜெயலலிதா என பெண்கள் தேர்தல் மூலம் ஆட்சித் தலைவர்களாக வரும் நிலை இருக்கிறது. இந்நிலையில் பெண்களுக்கு நாடாளுமன்ற சட்டமன்றங்களில் இடஒதுக்கிடு தேவை இல்லையே?

- சு. மணிமாறன், எரியோடு.

❍ நீங்கள் குறிப்பிடுகின்ற பெண்கள் எல்லாம் அவர்கள் சார்ந்திருந்த ஆண் செல்வாக்கின் நிழலில் வெற்றி பெற்றவர்கள்தாம். இவ்வெற்றிகளைத் தாங்களே சுயமாக ஈட்டினார்கள் என்று சொல்ல முடியாது.

இலங்கைப் பிரதமர் பண்டார நாயகா கொலை செய்யப்பட்ட பின் அவர் மீது விழுந்த அனுதாபத்தில் அவர் மனைவி சிரிமாவோ அங்கு பிரதமராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். பூட்டோ தூக்கிலிடப்பட்டதால் ஏற்பட்ட அனுதாபத்தில் அவர் மகள் பெனாசீர் பிரதமராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். வங்காள தேச குடியரசுத் தலைவர் முஜிபுர் ரகிமான் சுட்டுக் கொல்லப்பட்ட அனுதாபத்தில் அவர் மகள் ஹசினா பேகம் அங்கு பிரதமர் ஆனார். பிலிப்பின்சில் திருமதி அக்கினோ குடியரசுத் தலைவர் ஆனதும் கொல்லப்பட்ட அவர் கணவரின் செல்வாக்கு நிழலில்தான்.

நேருவின் வாரிசு என்ற முறையில் இந்திராகாந்தியும் எம்.ஜி.ஆரின் வாரிசு என்ற முறையில் ஜெயலலிதாவும் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள். இந்தப் பெண்கள் ஆட்சியைப் பிடித்ததே ஆணாதிக்கத்தின் நீட்சியாகத்தானே உள்ளது. மார்க்ரெட் தாட்சர் போன்று ஒரு சிலர் சுயமாக வளர்ந்து ஆட்சியைப் பிடித்திருக்கலாம். ஆனால் அது சராசரி இல்லையே!

எனவே, பெண்களுக்கு நாடாளுமன்ற, சட்மன்ற அவைகளில் இடஒதுக்கீடு வழங்குவது மிகமிக அவசியமானது; அவசரமானது.

☞ பின் நவீனத்துவம் என்பதை சுருக்கமாக விளக்க முடியுமா?

-க. செல்வராசு, மயிலாடுதுறை

❍ ஒரு வரியில் சொல்வதெனில், நுனிப்புல் மேய்வது என்று கூறலாம். பின் நவீனத்துவவாதிகள் பட்டியல் இடும் ஒடுக்குமுறைக் கருவிகளில் மொழியும் ஒன்று. தமிழ் மொழியில் தீட்டு, மாதவிலக்கு போன்ற சொற்கள் இருக்கின்றனவாம். இவைகள் பெண்ணை ஒடுக்கும் கருத்துடையவை எனவே தமிழும் ஒடுக்குமுறைக் கருவிதான் என்கிறார்கள். (சன் டி.வி.யில். அ. மார்க்ஸ் நேர்காணல், வணக்கம் தமிழகம் 6.4.2000)

ஒரு மொழியில் ஒடுக்குமுறைச் சொற்கள் விடுதலைச் சொற்கள் உயர்வு தாழ்வு குறித்த சொற்கள் சமநிலை குறித்த சொற்கள் அடிமைத்தனம் பற்றிய சொற்கள் புரட்சி பற்றிய சொற்கள் என எல்லாம் தாம் இருக்கும். சமூக வளர்ச்சிக்கேற்ப மொழியும் வளரும்.

ஒடுக்கு முறைக்கான மொழி என்றும் விடுதலைக்கான மொழி என்றும் ஒரு மொழியை ஒட்டு மொத்தமாகப் பார்ப்பதே அவர்கள் கூறிக்கொள்ளும் கூறு கூறாக பிரித்துப் பார்க்கும் அணுகு முறைக்கும் இது முரணான பார்வையாகும்.

... "யாவரும் கேளிர்" "பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்" என்ற சொற்றொடர்கள் உள்ள தமிழில்தான் தீண்டாமை என்ற சொல்லும் இருக்கிறது.

தமிழுக்கும் எதிரானது தான் பின் நவீனத்துவம்.

☞ கருணாநிதி தி.மு.க. தலைவராக எட்டாவது முறையாகத் தேர்ந்தெடுக்கப்பட்டதற்கு டாக்டர் ராமதாஸ் தொடங்கி வ.செ. குழந்தைசாமி வரை பாராட்டுத் தெரிவித்துக்' கொண்டிருக்கிறார்களே, அது அப்படி என்ன சாதனை?

- த. பழநியப்பன், தூத்துக்குடி-1.

❍ என்னதான் கம்பெனி முதலாளியாக இருந்தாலும் எம்.டி.யாகத் தேர்ந்தெடுக்கப்படவேண்டிய சட்டக் கடமை இருக்கிறதல்லவா? மீண்டும் மீண்டும் எம்.டி.யாகத் தேர்ந்தெடுக்கப்படும் போது பங்குதாரர்களும் ஊழியர்களும் அவரால் பயனடைவோரும் அவருக்குப் பாராட்டுத் தெரிவிப்பது வழக்கம்தான். தி.மு.க. என்பது கலைஞர் கருணாநிதி குடும்பத்தின் லிமிடெட் கம்பெனி!

☞ தாராளமயம் என்பது காலத்தின் கட்டாயமா, அல்லது தனி நபர் சுயலாபமா?

- அரிமா நெஞ்சன், தஞ்சை.

❍ காலத்தின் கட்டாயம் போல் தோற்றம் உருவாக்கப்பட்ட தனி நபர் சுயலாபம் தான் தாராள மயம். தனியார் மயம் என்பதன் முகமூடி தாராள மயம். தனி நபர் கொள்ளை லாபம் என்பதன் முகமூடி தனியார் மயம்.

அரிசி, கோதுமை, சர்க்கரை, பருத்தி, பால், இறைச்சி என இங்கு கிடைக்கும் பொருட்களை வெளி நாட்டிலிருந்து இறக்குமதி செய்வது காலத்தின் கட்டாயம் இல்லை இந்திய மற்றும் பன்னாட்டு முதலாளிகள் கொள்ளையடிக்க உருவாக்கிக் கொண்ட தாராளமயம் இது.

தொழில் நுட்பப் புரட்சியின் பயன்கள் வெளி நாடுகளில் தனியார் வசம் இருக்கின்றன. அவர்கள் அத் தொழில் நுட்பங்களை இந்தியாவில் அரசுத் துறைக்குத் தரமாட்டார்கள்; தனியார் துறைக்குத்தான் தருவார்கள். எனவே இது காலத்தின் கட்டாயம் என்று ஒரு வாதம் வைக்கப்படுகிறது. இது முழு உண்மையல்ல. சீனநாடு, பெருமளவு பொதுத் துறையை வைத்துக் கொண்டு சிறிதளவு தனியார் துறையை பன்னாட்டு


படிப்பகம்

www.padippakam.com

நிறுவனங்களுக்கு அனுமதித்து முன் மாதிரியை உருவாக்கி வருகிறது. அதை ஆய்வு செய்துபார்க்கலாம்.

இது முழு உண்மையாக இருந்தாலும் வெளிநாட்டு முதலாளி, இந்தியாவில் முதலாளியம் வளர்வதற்கு மட்டுமே செயல்பட வருவார் என்பது முதலாளிய சூழ்ச்சி ஆகும்.

உயிர் ஈட்டுறுதித் துறையில் (LIC) வெளி நாட்டு முதலாளிகளை விடுவதில் என்ன பெரிய தொழில் நுட்பப் பிரச்சினை இருக்கிறது? முதலாளியமா, சமதர்மமா என்ற கொள்கைப் பிரச்சினைதான் இருக்கிறது.

● ஜெயலலிதா தனக்கு நெருக்கமாக இருந்த இரண்டாம் நிலைத் தலைவர்கள் மற்றும் மாவட்டச் செயலாளர்கள் அனைவரையும் தூக்கி வீசியிருப்பது சர்வாதிகாரமில்லையா?

- கு. தமிழேந்தி, புதுவை-2.

○ சசிகலாவைத் தவிர மற்றதெல்லாம் மாறும் என்பது ஜெ.யிசம். அத் தத்துவத்தை ஏற்றுக் கொண்டவர்களுக்கு மட்டுமே அ.தி.மு.க.வில் வேலை. சமையல் பாத்திரங்களை மாற்றிக் கொள்ளக்கூட வீட்டு எஜமானிக்கு உரிமையில்லையா?

## பாரதிய ஜனதா அரசின் பார்ப்பனிய பாசிச வெறியை எதிர்த்து கண்டன ஆர்ப்பாட்டம்

ஈரோடு மாவட்டம் சத்தியமங்கலத்தில் 2000 பிப் 12,13 ல் நடைபெற்ற பொதுக்குழுவில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களின் படி த.தே.பொ.க. சார்பில் 25.02.2000 அன்று தமிழகத்தில் பல்வேறு பகுதிகளில் பாரதிய ஜனதா அரசின் பார்ப்பனிய பாசிச வெறியை எதிர்த்து கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.



சத்தியமங்கலத்தில்

### தஞ்சை நகரம்

தஞ்சாவூர் சிவகங்கை பூங்கா அருகில் தோழர் பா. சந்திரசேகர் (நகரச் செயற்குழு த.தே.பொ.க) தலைமையில் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. தோழர் இராசேந்திர சோழன் (தலைமைச் செயற்குழு த.தே.பொ.க) பழ. இராசேந்திரன் (நகரச் செயலாளர் த.தே.பொ.க) ரெ.சிவராசு (மாவட்டத்தலைவர் த.இ.மு) குணசேகரன் (த.மா.மு) ஆகியோர் கண்டன உரையாற்றினார்கள்.

### சத்தியமங்கலம்

25.2.2000 அன்று சத்தியமங்கலம் பேருந்து நிலையம் அருகில் பா.ஜ.க. அரசின் பார்ப்பனிய - பாசிச வெறியை எதிர்த்து த.தே.பொ.க. பொதுக் குழு உறுப்பினர் தோழர் ச. அர. மணிபாரதி தலைமையில் ஆர்ப்பாட்டம் நடந்தது. தோழர் கி.வெங்கட்ராமன்(த.தே.பொ.க., த.செ.) தோழர் மு. கோவிந்தராசு (த.த.இ. கோபி. செயலர்) ஆகியோர் பேசினர். தோழர்கள் நல். தமிழ்நாடன், செந்தமிழ் ஸ்டாலின்(த.மா.மு.), அ. மணி, திருப்பூர் லோகநாதன், ஈரோடு சன்முகம் உள்பட ஏராளமான தோழர்கள் ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டனர்.

### சிதம்பரம்

25.2.2000 அன்று சிதம்பரம் தெற்கு வீதியில் தோழர் சிவஞானம் தலைமையில் கண்டனக் கூட்டம் நடைபெற்றது. தோழர்கள் நாவைகறை, கு. சிவப்பிரகாசம் (நகரச் செயலாளர், த.தே.பொ.க.) ஆகியோர் கண்டன உரையாற்றினர்.

### பூதலூர்

பூதலூர் ஒன்றிய த.தே.பொ.க. சார்பில் 25.2.2000 அன்று தோழர் குழ. பால்ராசு (ஒன்றியச் செயலாளர், த.தே.பொ.க.) தலைமையில் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. பா.ஜ.க. அரசின் பார்பன -பாசிச வெறியைக் கண்டித்து தோழர் ம.செந்தமிழன் (பொதுச் செயலாளர், த.மா.மு.) உட்பட பலர் உரையாற்றினர்.

### சென்னை

சென்னை பல்லவபுரத்தில் 25.2.2000 அன்று நடந்த பொதுக் கூட்டத்தில் தோழர்கள் பெ. மணியரசன், அ.பத்மநாபன், இரா.பாலசுப்ரமணியம், ப.ந.ஆறுமுகம், வில்லியம், நிர்மலா ஆகியோர் பேசினர்.



படிப்பகம்

www.padippakam.com



எஸ்.வி.ராஜதுரை

# அயர்லாந்து விடுதலைப் போராட்டம்-15

## ஐரிஷ் பண்பாட்டுத் தேசியம்

1798, 1803,1867 ஆம் ஆண்டுகளில் அயர்லாந்தில் நடைபெற்ற ஆயுதமேந்திய கிளர்ச்சிகள்,1916 ஆம் ஆண்டு ஈஸ்டர் கிளர்ச்சி ஆகியன, ஒன்று போதிய தயாரிப்பின்மை காரணமாகவோ அல்லது வஞ்சகச் செயல்களின் காரணமாகவோ தோல்வியடைந்தன. இக்கிளர்ச்சிகளை நடத்தியவர்கள் யாருமே குடிமைச் சமுதாய நிறுவனங்களையோ அல்லது அதிகாரப்பரவலை உறுதிப்படுத்தும் உள்ளூராட்சி அமைப்புகளையோ நிறுவுவதில் கவனஞ் செலுத்தவில்லை. மாறாக இரகசிய சங்க மரபும் இராணுவ வாதமும் வளர்ச்சியடைவதற்கே உரமிட்டன.

1913 முதல் 1923 வரையிலான காலகட்டத்தில் இராணுவவாதம் உச்ச நிலையை அடைந்தது. ஆண்மை, சகோதரத்துவம் (**brotherhood**), ஒற்றுமை ஆகியன பெரும்பண்புகளாகப் போற்றப்பட்டன. இந்த 'ஒற்றுமை' என்பது உலகளாவிய கருத்தொற்றுமையல்ல; மாறாக சுதந்திர அயர்லாந்து என்ற தலையாய குறிக்கோளை அடைவதற்காக, பிற எல்லா எண்ணங்களையும் வேட்கைகளையும் இலக்குகளையும் கைவிடுவது ஆகும். தேசிய இயக்கத்தில் இராணுவவாதம் மேலோங்கியவுடனேயே, அந்த இராணுவவாதமும் அதன் கட்டமைப்புகளும் குடிமைச் சமுதாய நிறுவனங்களைத் தமக்குக் கீழ்ப்பட்டவையாகச் செய்து விடுகின்றன அல்லது சில சமயம் அவற்றை முற்றாக அழித்தொழித்து விடுகின்றன. ஆணாதிக்கச் சமுதாய சிந்தனையும் இராணுவவாதமும் உழைக்கும் மக்கள், பெண்கள், மதச் சிறுபான்மையினர் ஆகியோரை எவ்வாறு பாதித்தன என்பதைப் பின்னர் காண்போம்.

குடிமைச் சமுதாயத்தில் ஐரிஷ் குடியரசுவாதத்தின் தாக்கம் பண்பாட்டுத் துறையில் அழுத்தமாக இருந்தது. ஐரிஷ் பண்பாட்டுத் தேசியத்தை வளர்ப்பதில் குடியரசுவாதம் முனைப்புக் காட்டியது. எனினும் ஐரிஷ் பண்பாட்டு தேசியவாதம் என்பது முழுக்க முழுக்க குடியரசுவாதிகளால் மட்டுமே உருவாக்கப்பட்டது என்று கூற முடியாது. அதன் வரலாறு பன்முகத்தன்மை கொண்டது ஆகும்.

ஏகாதிபத்திய நாடுகளால் அடிமையாக்கப்பட்ட காலனி நாடுகள் பலவற்றில் மக்களைத் தேசியவுணர்வின் அடிப்படையில் ஒன்று திரட்டி நடத்தப்பட்ட அரசியல் போராட்டங்களுக்கு முன்னோடியாக பண்பாட்டுத் தேசியம் (**Cultural Nationalism**) உருவாவதை வரலாற்றில் நாம் காணலாம். இந்தப் பண்பாட்டுத் தேசியம் என்பது, குறிப்பிட்ட தேசத்தின் பண்பாட்டுக் கூறுகளை, அதன் வரலாற்று மரபை, மொழியை, சமய நம்பிக்கையை வலியுறுத்துவதையும் அதன் பழம்பெருமைகளை மீட்டெடுப்பதையும், குறிக்கோளாகக் கொண்டிருக்கிறது. காலனியாதிக்கம் ஏற்படுவதற்கு முன்பு அந்தக் குறிப்பிட்ட தேசத்தில் இருந்ததாகச் சொல்லப்படும் இலட்சிய நிலையிலான சமூக அமைப்பையும், அந்நியராட்சியால் களங்கப்பட்டுப்போன பண்பாட்டு மரபையும் வாழ்க்கை முறையையும் பற்றி இந்தப் பண்பாட்டுத் தேசியம் பேசுகிறது. அதன் பொருட்டு வரலாற்றில் பின்னோக்கிச் சென்று, தொன்மைக் காலத்திலோ அல்லது காலனியாதிக்கவாதிகளின் வருகைக்கு முன்போ இருந்ததாகச் சொல்லப்படும் கறைபடியாத, களங்கமற்ற, ஒரு பொற்காலத்தைக் கற்பிதம் செய்து கொள்கிறது.

அயர்லாந்தைப் பொறுத்தவரை, பண்பாட்டுத் தேசியம் என்பது அங்கு நடந்த பல்வேறு அரசியல் போராட்டங்களுக்குப் பிறகே தோன்றியது. அதுமட்டுமின்றி அந்தப் பண்பாட்டுத் தேசியத்தை உருவாக்குவதில் முதன்மைப் பாத்திரம் வகித்தவர்களாக இருந்தவர்கள் புரொடெஸ்டெண்டு அறிவு ஜீவிகளும் அவர்களது புரவலர்களுமாவர். ஆங்கிலோ-ஐரிஷ் பிரபுக் குலத்தினர் பதினெட்டாம் நூற்றாண்டிலேயே குடியேற்றவாதிகளின் தேசியத்தை உருவாக்கிக் கொண்டிருந்தனர். 1802இல் ஏற்பட்ட ஒன்றியத்தின் காரணமாக தங்களிடமிருந்து அரசியல் அதிகாரம் இலண்டனுக்கு மாற்றப்பட்டிருந்ததால் எரிச்சலடைந்திருந்தனர். அதே சமயம் தம்மால் ஒடுக்கப்பட்டும் சுரண்டப்பட்டும் வந்த கத்தோலிக்க வெகுமக்களின் சினத்திலிருந்தும், சீற்றத்திலிருந்தும் தம்மைப் பாதுகாத்துக் கொள்ள வேண்டிய நிலையிலிருந்தனர். தங்களது வர்க்க மேலாட்சியைக் கைவிடாமலேயே, பரந்துபட்ட ஐரிஷ் மக்களின் வாழ்வைப் பாதிக்கின்ற சில விஷயங்களில் அவ்வப்போது அக்கறை செலுத்த வேண்டிய அவசியம் அவர்களுக்கு ஏற்பட்டது. கத்தோலிக்கர் விடுதலை, பார்னெலின் ஹோம்ரூல் கோரிக்கை போன்ற விஷயங்களில் அவர்கள் அக்கறை காட்ட வேண்டியதாயிற்று. அரசியல் ரீதியாகவும் பொருளாதார ரீதியாகவும் பிளவுபட்டிருந்த ஆங்கிலோ-ஐரிஷ் மேட்டுக்குடியினரையும் கத்தோலிக்க வெகு மக்களையும் ஒன்றிணைப்பதற்கான அரசியல் சாதனம் ஏதுமில்லாதிருந்த நிலையில் அந்த இணைப்பைச் செய்கின்ற பணியை பண்பாட்டுத் தேசியம் மேற்கொள்ள முனைந்தது.(166.)



படிப்பகம்

www.padippakam.com

அந்தப் பண்பாட்டுத் தேசியத்தை உருவாக்குவதில் முக்கியப் பங்காற்றியவர்களிலொருவர்தான் உலகப் புகழ்பெற்ற கவிஞர் **W.B.** யேட்ஸ். யேட்ஸ் புரொடெஸ்டெண்டாகப் பிறந்தாலும் தமது இளமைக் காலத்திலேயே அந்த நம்பிக்கையைக் கைவிட்டு விட்டார். பிரம்மஞானம் (**Theosophy**) , இந்துமதம், கிறிஸ்துவ அனுபூதிவாதம், ஆன்மீக வாதம் ஆகியவற்றில் அக்கறை காட்டினார். ஆயினும் தமது சமூக அடையாளத்தை புரொடெஸ்டெண்ட் அயர்லாந்துதான் வடிவமைத்ததாக வாழ்நாள் நெடுகக் கருதிவந்தார். அவரது குடும்பம் நிலப் பிரபுவர்க்கத்தைச் சேர்ந்ததல்ல. எனினும் யேட்ஸ் ஆங்கிலோ-ஐரிஷ் நிலப்பிரபு வர்க்கத்தோடேயே தன்னை அடையாளப் படுத்திக் கொண்டார். அவர்களது ‘தேசியத்தை’யே பகிர்ந்து கொண்டார். அவரைப் போலவே, தொன்மைக்கால ஐரிஷ் நாட்டார் வழக்கியலையும் தொன்மங்களையும் தேடிக் கண்டுபிடிப்பதில் ஆர்வம் காட்டியவர், அவரது புரவலராக விளங்கியவர் அகஸ்தா கிரிகோரி அம்மையார் என்பவராவார். அந்த அம்மையாரின் கணவர் வில்லியம் கிரிகோரி பிரபு 1846ஆம் ஆண்டு அயர்லாந்துப் பெரும் பஞ்சத்தால் பாதிக்கப்பட்ட கத்தோலிக்க ஏழை விவசாயிகளுக்கும் பெரும் தீங்கு இழைத்தவர். பஞ்ச நிவாரணம் பெறுவதற்கு யாரும் ¼ ஏக்கர் நிலத்திற்கு மேல் வைத்திருக்கக் கூடாது என்ற கொடிய சட்டத்தை இயற்றியவர் அவர். அவர் இழைத்த கொடுமைக்குக் கழுவாய் தேடவோ என்னவோ கிரிகோரி அம்மையார் ஐரிஷ் நாட்டார் வழக்கியல், கிராமியப் பாடல்கள், ஐரிஷ் தொன்மங்கள் ஆகியவற்றைத் திரட்டுவதிலும் டப்ளினில் ‘மக்கள் நாடக அரங்கம்’ என்பதை நிறுவி, அயர்லாந்தின் பழம் பெருமையைப் பறை சாற்றும் யேட்ஸ், ஸிங்கே (**Synge**) ஆகியோரின் நாடகங்கள் நிகழ்த்தப்படுவதிலும் ஈடுபட்டு வந்தார். எனினும் இவர்களின் பண்பாட்டு முயற்சிகள் யாவும் ஆங்கில மொழியிலேயே செய்யப்பட்டன.

“நாட்டார் மரபைத் தன் வலுவான கால்களாகக் கொண்ட வெகு மக்கள் பண்பாடு உருவாக்கப்பட வேண்டும்” என்று தனது பண்பாட்டு தேசிய முயற்சியைத் தொடங்கிய யேட்ஸ் பின்னர் படிப்படியாக ‘மக்கள் பண்பாடு’, ‘மக்கள் நாடக அரங்கு’ என்று கருத்துகளைப் படிப்படியாகக் கைவிட்டு விட்டார். பண்டைய ஐரிஷ் பெருமையைப் பற்றிப் பேசும் அவரது நாடகமொன்றை வரவேற்ற கத்தோலிக்க நடுத்தர வர்க்கத்தினர், அவரது பிற நாடகங்களிலும் ஸிங்கேவின் நாடகமொன்றிலும் பழங்கால ஐரிஷ் வாழ்க்கை சித்தரிக்கப்பட்டிருந்த விதத்தை ஏற்றுக் கொள்ளவில்லை. அதற்குக் காரணம், யேட்ஸ் போன்ற புரொடெஸ்டெண்ட் அறிவுஜீவிகளிடம் அறிவொளி மரபின் தாக்கம் இருந்ததும் கத்தோலிக்கர்களிடம் பிற்போக்குக் கருத்துகளும் இருந்தன என்பது மட்டுமல்ல புரொடெஸ்டெண்ட் அறிவுஜீவிகள் பழங்கால ஐரிஷ் சமுதாயம் எவ்வாறு இருந்தது என்று ‘கற்பிதம்’ செய்து கொண்டிருந்தார்களோ அதே போலத்தான் கத்தோலிக்க மத்தியதர வர்க்கத்தினரும் ஒரு இலட்சியபூர்வமான பண்டைய ஐரிஷ் வாழ்க்கையைப் பற்றிய ஒரு ‘கற்பிதம்’ செய்து கொண்டிருந்தனர். இரு சமூகங்களுக்கிடையில் இருந்த நீண்டகாலப் பிணக்குகள் இருவகைக் ‘கற்பிதங்களுக்கு’ இடையிலான முரண்பாடாக வெளிப்பட்டது (168)

எனினும் இந்தக் கற்பிதங்களுக்கு - குறிப்பாக கத்தோலிக்கர்களில் ஐரிஷ் குடியரசுவாதிகளின் பண்பாட்டு தேசியக் கற்பிதங்களுக்கு ஒரு அரசியல் முக்கியத்துவம் இருந்தது. பிரிட்டிஷ் பேரரசின் அரசியல், பொருளியல், பண்பாட்டு ஆதிக்கச் சுமையின் கீழ், நசுங்குண்டு ஏறத்தாழ அழிந்து போயிருந்த ஐரிஷ் பண்பாட்டை உயிர்ப்பிப்பது என்பது பிரிட்டிஷ் ஆதிக்கத்திற்கு எதிரான போராட்டத்தின் முக்கிய கூறாகியது. அரசியல், இராணுவப் போராட்டங்களுடன் பண்பாட்டுப் போராட்டங்களும் இணைந்தே சென்றன. 1840களில் ஆயுதக் கிளர்ச்சியிலீடுபட்ட இளம் அயர்லாந்தினர், தாங்கள் காண விரும்பிய சுதந்திர ஐரிஷ் குடியரசுக்கான ஒரு கொடியை வடிவமைத்தனர். விடுதலைக் கவிதைகளையும் பாடல்களையும் இயற்றினர். 1916ஆம் ஆண்டு ஈஸ்டர் எழுச்சியில் தலைமைப் பாத்திரம் வகித்தவர்களில் சிலர் கவிஞர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. இவ்வாறு கெய்லிக்(ஐரிஷ்) பண்பாட்டு மீட்பியக்கத்திற்கும் ஈஸ்டர் கிளர்ச்சிக்குமிடையே உயிரோட்டமிக்க தொடர்பு இருப்பதைக் காணலாம். ஐரிஷ் மொழியைக் கற்றுக் கொள்ளவும் கற்பிப்பதற்குமான முயற்சியிலிருந்து மரபான ஐரிஷ் விளையாட்டுகளைப் புதுப்பித்து அவற்றை இளைஞர்கள் விளையாடும்படி செய்வது வரை, பண்பாட்டு தேசியம் பல வடிவங்களில் தன்னை வெளிப்படுத்திக் கொண்டது. (169)

ஆனால் இந்தப் பண்பாட்டுத் தேசியத்தில் ஆணாதிக்கச் சிந்தனை செல்வாக்குச் செலுத்தியது. விளையாட்டும் வீரமும் ஆண்களின் பண்புகளாகச் சித்தரிக்கப்பட்டன.

(தொடரும்...)

குறிப்புகள்


166. **REGGIE SRIWARDENA** — **Nationalism, Class and Culture; The strange case of W.B. Yates, The Thatched patis, Colombo, July-August 1993, P.45, 46**

167. **IBID** — **pp 45,48**

168. **IBID** — **pp49,50**

169. **BILL ROLSTON** — **Culture as a Battle Field: Political Identity and the State in the North Ireland, Race & Class, 39, 4(1998), London P.25,27.**




படிப்பகம்

www.padippakam.com

# விடுதலை புலிகளின் வெற்றி ரகசியம்

**திரை கடலான்**

ஓயாத அலைகளின்வீச்சு ஒஸ்லோ வரை அதிர்வுகளை ஏற்படுத்தியிருக்கிறது என்றால், சிறிலங்காவின் ஆட்சியாளர்கள் ஆடிக்காற்றில் அம்மி போல பறப்பதில் ஆச்சரியமென்ன? இதற்கு எல்லாம் மூலகாரணமாக அமைவது தலைவரால் சமர்களுக்கெல்லாம் "தாய்ச்சமர்" என வர்ணிக்கப்பட்ட "ஜயசுக்குறுய்" ஆகும். "ஜயசுக்குறுய்" ஆக்கிரமிப்பாளரின் பிரதேசத்திலிருந்து பாரிய, பெரும் எடுப்பிலான படை நகர்வை தமிழர் பூமியில் குறிப்பிட்ட இலக்கை வைத்து உந்தப்பட்ட வேகமான வேட்டை எனலாம். இதில் ஆக்கிரமிப்பாளருக்கு இரண்டு கனவுகள் இருந்தன.

ஒன்று புலிகளை பாரிய யுத்தத்திற்கு இழுத்து அழிப்பது, இரண்டாவது இங்குள்ள இராணுவ விநியோகத்தை ஏற்படுத்துவது ஆகும்.

இந்த இரண்டு கனவுகளுக்கும் அடிப்படை "சூரியக்கதிரின்" போது புலிகளின் வன்னி நோக்கிய தந்திரோபாய, திட்டமிட்ட நகர்வை தமது வெற்றி எனக் கருதியமையே ஆகும். ஆனால் சூரியக்கதிரின் பின்னரான ஓயாத அலைகள் ஒன்றை முற்றாக மறந்து விட்டது ஆட்சியாளரின் அவசர புத்தி என்பது வேறு விடயம்.

ஜயசுக்குறு சமருக்கான தயார்ப்படுத்தல் யாவும் நடந்து கொண்டிருக்கும்போது அதனை வெகு உன்னிப்பாக புலிகள் அவதானித்தனர். ஆனால் அவசரப்பட்டு சீர் குலைப்புத்தாக்குதல் ஒன்றையும் நடத்தவில்லை என்பது முக்கிய நிகழ்வு. மாறாக படையினரின் நகர்வும் அவர்களது கணிப்புகளும் எப்படி, எவ்வாறு இருக்கும் என்பதும், படையினரை வழிநடத்தும் அதிகாரிகளின் கவனம், அவர்களுக்குப் பயிற்சி கொடுத்த "நலன் விரும்பி" நாடுகள், நிபுணர்களதும், இராணுவ விமர்சகர்களினதும் நிலைப்பாடு எவ்வாறு இருக்கும் என்பதை ஊகித்து வலுவான மாற்றுத் திட்டம் தீட்டி ஆக்கிரமிப்பாளரை அசரவைப்பது புலிகளின் உத்தி.

இதற்கு சிறந்த எடுத்துக்காட்டாக தாண்டிக்குளத் தாக்குதலை எடுக்கலாம். இவ் ஊடறுப்புச் சமரின் இராணுவ ஆழ, அகலம் ஆட்சியாளருக்குப் பயத்தை ஏற்படுத்தினாலும் "நிலம் பிடிக்கும்" ஆசை நிகழப்போகும் பல விபரீதங்களை விழுங்கி விட்டது.

தாண்டிக்குளத்தில் கிடைத்த அடி பலமானதல்ல,தாக்கப்பட்டது "வால்" பகுதியேதான் என்பது அனுருத்தரத்வத்தையினால் அப்போது அறிவிக்கப்பட்டது எவ்வளவு பெரியபொய் என்பது ஓயாத அலைகள் மூன்றில் வெளுத்துவிட்டது.

புலிகளால் கொடுக்கப்பட்ட அடியில் தாக்கப்பட்ட பகுதி "வால்" என்றால் வன்னிக்குள் நுழைந்தது, தமிழர் பூமியை அபகரிக்க பேராசை கொண்ட "விலங்கு" என்பது அனுருத்தரத்வத்தையினால் அன்றே ஒப்புக்கொள்ளப்பட்ட விடயமாகும் எனலாம்.

ஆனால் புலிகள் தாக்கிய பகுதி பாரிய இராணுவ, மைய வழங்கல் பகுதியாகும். இதுவே முன்னேறும் இராணுவத்தின் இருதயப்பகுதி என்பது உண்மை. தேசியத் தலைவர் கூறுவதுபோல் எதிரியின் பெரிய பலத்தில் எங்கு பலயீனம் இருக்கோ அங்கு ஓங்கியடிக்கவேண்டும். அப்படியான ஒரு "ஓங்கியடிப்பே" தாண்டிக்குள ஊடறுப்புச் சமர் எனலாம்.

எனவேதான் புலிகள் ஜயசுக்குறுவின் மையப்பகுதி தாக்கப்பட்டதாக அறிவித்தனர். ஆனால் "வால்" பகுதி என அரசு அறிவித்தது. வால் பகுதி என்றால் - வால் உடையது எவ்வகை விலங்கு என்பதும், அவ்விலங்கின் வால்பகுதி எந்தளவிற்கு அத்தகைய விலங்கிற்கு முக்கியம் என்பதும் கூர்ந்து கவனிக்கப்படவேண்டும். உதாரணமாக பெரிய திமிங்கிலத்திற்கு வால் துண்டிக்கப்பட்டால் தலையிருந்தும் அதற்கு வேலையில்லை.

எனவே ஜயசுக்குறுய் என்ற திமிங்கிலம் வால் துண்டிக்கப்பட்டதால் திசை தெரியாது தடுமாறியது. ஆகவே, விலங்கை அடையாளம் கண்டு அதன் முக்கிய "செயற்படு" பகுதிக்கு வைத்த குறிதான் புலிகளின் தலைமையின் கால் நூற்றாண்டுகால யுத்த அனுபவம் ஆகும்.

மையப்பகுதி தாக்கப்பட்டதால் ஜயசுக்குறுவின் ஒவ்வொரு அசைவிற்கும் அரசு தரப்பு புலிகளிடம் செலுத்திய விலை பன்மடங்காகும். அத்துடன் புலிகளின் பலம் இரண்டு விதமாக ஜயசுக்குறுவினால் வளர்ச்சியடைந்தது. அதாவது மரபுப்போர், கரந்தடிப்போர் ஆகிய இரண்டிலும் தேர்ச்சி பெறவும், பாரிய கனரக ஆயுதங்களைப் புலிகளது சகல அணிகளும் தேவை, எதிர்பார்ப்புக்கு அதிகமாக பெற்றுக் கொள்ளவும் இந்த ஜயசுக்குறுய் வழி வகுத்தது என்றால் மிகையில்லை. இது பல புதிய புலி அணிகளின் உருவாக்கத்தையும் ஏற்படுத்தியதுடன் அதன் ஆட்பல சக்தியை நிர்ணயிக்கவும் இழப்பைக் குறைக்கவும் உதவியதோடு ஆயுத சக்தியையும் பெருக்க உதவியது.

தாண்டிக்குள ஊடறுப்புச் சமரில் புலிகளுக்குக் கணிசமான ஆட்பல இழப்பு ஏற்பட்டபோதும், மிகப்பெரிய படை ஒன்றை அதன் ஆரம்ப இடத்தில் "துண்டித்த" நிகழ்வு புலிகளின் போரியல் நுட்பத்தை எதிரிக்கு உணர்த்திய தெனலாம்

இதைவிட உள்வாங்கப்பட்ட இராணுவத்திற்கு


படிப்பகம்

www.padippakam.com

எதிர்கால இராணுவ புதிர்களை விதைத்த பெருமையும் இத் தாக்குதலுக்குரியதாகும்.

இலங்கை யுத்த வரலாற்றில் முதன்முதலாக தாண்டிக்குளத்தாக்குதலிலேயே ஒரு இராணுவத்தினர் "தலைதெறிக்க" ஓடி உடைமாற்றித் தப்பித்த நிகழ்வு நடந்தது. இதுவும் புலிகளால் எதிர்காலப் புதிராகவே விட்டுவைக்கப்பட்டது.

இதே நிகழ்வு பின்னர் ஓயாத அலைகள் மூன்றில் இறுதியாக நடந்தது. ஆகவே ஜயசுக்குறுவின் ஆரம்பமும் முடிவும் ஒரே பின் விளைவுகளை இராணுவத்திற்கு ஏற்படுத்தியது என்றால் பின்னரான சம்பவங்களை முற்கூட்டியே "தனது பாசையில்" விளங்கவைத்த தலைவரின் தீர்க்கதரிசனம் யாருக்கு இருக்கும்!

அமெரிக்க இந்தியப் பயிற்சியும் அபரிமிதமான ஆயுதபலமும், ஆட்பலமும் இருந்தும் வாங்கிய அடிகள்- முன் நகர்வின்- பின்னடைவுகள் உலகை வியக்கவைத்த சம்பவங்கள். சுமார் இரண்டரை வருடகால இத் "தாய்ச்சமர்" இரண்டு மாதங்களில் அதன் சுவடு தெரியாமல் மறைந்த அதிசயம் தான் ஓயாத அலைகள் மூன்றின் புதிர். தோல்விக்கான காரணம் எது என்றால், மேலும் மேலுமான அவசர நகர்வு முயற்சி அரசுக்கு "தேர்தல் தேவை" காரணமாக ஏற்பட்ட உந்துதலின் விளைவே என்று சிங்கள பேரினவாதம் விமர்சனம் செய்தது.

ஆனால் உண்மை அதுவல்ல. சமரும், சமருக்கான களமும் பற்றிய உண்மைகளை உணரத்தவறிவிட்டமையே தோல்வியின் காரணமாகும்.

ஒரு இராணுவத்தின் ஆக்கிரமிப்புப் பண்புக்கும், விடுதலைப் போரின் பண்புக்கும் உள்ள பாரிய வித்தியாசத்தை எந்தவொரு ஆக்கிரமிப்பு இராணுவமும் ஒரு போதும் விளங்கிக்கொள்ளத் தவறுவது தான் காரணமாகும். மேலும் மிகச்சிறிய காலத்துள் பெற்ற வெற்றிகளை(?) வைத்து (அதிலும் பல முறை தந்திரமாக உள்வாங்கப்பட்டது. ஒட்டிசுட்டான் சிறந்த உதாரணம்) இவ்வளவு பாரிய இராணுவத்தை வன்னிக்குள் உட்செலுத்திய நகர்வுக்குப் பின்னால் இருந்தது ஆசையே தவிர அரசியல், யுத்த தந்திரம் ஒன்றும் இல்லை.

ஆனால் மறுபுறத்தில் புலிகளோ விலங்குகளுக்கான இரையைத் தமது வசதிக்கேற்ப உள்வாங்கிவிட்டு (தற்போது தென்மராட்சி) தாக்குதல் நடத்தி வெற்றி பெற்ற நிதானம், எதிர்கொள்ளும் நெருக்கடிகள், எதிரியின் அடுத்தகட்ட நகர்வு எங்கே? எப்படி? போன்ற துல்லியமான தீர்க்கதரிசனமான கணிப்புக்களுடனேயே எதிரியை எதிர்கொள்ளுகின்றனர் என்பது கவனிக்கப்படவேண்டும்.

இத்தகைய கணிப்புகளுடன் இந்திய இராணுவத்துடனான சமரிலும், ஜெயசுக்குறு, ரணகோச சமர்களிலும் பெற்ற அனுபவங்களின் ஒட்டுமொத்த வடிவமே ஓயாத அலைகள் 3 ஆகும்.

ஆகவே, ஆக்கிரமிப்பு இராணுவத்திற்கு "வன்னி புதைகுழியாகும்" என்ற தலைவரின் கூற்று ஓயாத அலைகள் மூன்று மூலம் தெளிவாகியது.

தாண்டிக்குளச் சமர் தொட்டு ஓயாத அலைகள் - 3 வரையும் சரணடையும் இராணுவம், உயிர் தப்பியோடும் இராணுவம் மீதான "யுத்தவிதிகள்" சீராகக் கடைப்பிடிக்கப்பட்டமையே இன்று இராணுவம் அதனது "இயங்குசக்தியை" இழந்து நிற்கக் காரணமாகும். இதுவும் புலிகளின் புதிரே.

இதன் காரணமாகவே 15,000 பேர் படை திரட்டும் நிகழ்வு, பெருமளவிலான பிரச்சார தந்திரோபாயங்களுக்குப் பின்னரும் தோல்வியில் முடிந்தது. 1000 பேர் வரை கூட திரட்ட இயலாத "வங்குரோத்து" நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளது.

இவ்வாறான ஒரு போக்கு, மந்தநிலை இனவாத அரசின் இராணுவ ஆட்பல வழங்கு சக்திக்கு ஏற்பட்டதற்குக் காரணம் தமிழீழ தேசியத் தலைமை, எதிரி யார் என்று சரியாகக் கணிப்பிட்டு அதனைப் புறச்செயல்கள் மூலம் பெரும்பான்மையின மக்களுக்குப் புரியவைத் திருப்பதனாலாகும்.

தற்போதைய உண்ணாவிரதமும் அதனது அதிர்வலையும் இதற்குச் சான்றாகும். இன்று அரசின் சாயம் வெளுத்துவிட்டது. இதை தென்னிலங்கை பெரும்பான்மை மக்களும் புரிந்துகொண்டுவிட்டனர். இதனால்தான் அண்மைய ஆட்சேர்ப்பு ஆட்டம் கண்டு நிற்கின்றது.

ஆகவே 15 இராணுவத்தின் உண்ணாவிரத நிகழ்வு 15,000 இராணுவத்தை ஆட்திரட்டும் வேட்டைக்கு வேட்டு வைப்பதாகவே உள்ளது.

இது புலிகளின் அரசியல், உளவியல் சாந்த போரின் பெருவெற்றி. இத்தகைய ஒரு நிலையின் ஆரம்பம் தாண்டிக்குள ஊடறுப்புச் சமரில் எதிரியை "தப்பி ஓட" விட்ட தந்திரத்தை வைத்து செயற்படுத்தப்பட்ட வினைத்திறனின் விளைவு அல்லது அறுவடையே எனலாம்.

- நன்றி: உலகத்தமிழர் மார்ச் 3-9, 2000

## சாலையார் கருத்தரங்கம்

*திருச்சி திருவெறும்பூரில் 19.2.2000 சாலையார் பண்பாட்டு மையம் கருத்தரங்கம் நடைபெற்றது. முனைவர் சாலினி இளந்திரையனார் தலைமை வகித்தார். தோழர் மேகநாதன் வரவேற்புரை நிகழ்த்தினார். திருவள்ளுவர் தவச்சாலை இரா. இளங்குமரனார் சாலையாரின் உருவப்படத்தை திறந்து வைத்தார். மேலும் திரு பழ. நெடுமாறன் முனைவர்கள் இளவரசு, திருமாறன், இளமுருகன் உள்ளிட்டோர் கருத்துரை வழங்கினர்.*

*சாலையாரின் பேராற்றலை விளக்குவதாகவும் தமிழ்த் தேசிய உணர்வாளர்களுக்கு ஊக்கம் ஊட்டுவதாகவும் இக்கருத்தரங்கம் அமைந்தது.*



படிப்பகம்

www.padippakam.com



# விவசாயிகளை ஒடுக்கும் மாநிலங்களை வஞ்சிக்கும் பா.ஜ.க. வரவு – செலவுத் திட்டம்

இந்தியா, இருபத்தோராம் நூற்றாண்டில் பொருளாதார வல்லரசாக மாறப் போவதை கடந்த இரண்டு குறுகிய ஆண்டுகளில் உலகுக்கு அறிவித்துள்ளது. உலகத்தின் கண்களெல்லாம் நம்மையே நோக்குகின்றன என்று வழக்கமான தனது வாய் வீச்சோடு 2000-01ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டத்தை இந்திய நிதியமைச்சர் யஸ்வந்த் சின்ஹா முன் வைத்துள்ளார்.

இந்த வெற்று ஆரவாரத்தை விலக்கிப் பார்த்தால், வரும் ஆண்டுக்கான வரவு-செலவுத்திட்டம் விலையேற்றத்தை உண்டாக்கப் போவது, விவசாயிகளுக்கு விரோதமானது, 'மாநில'ங்களுக்கு எதிரானது, பன்னாட்டு முதலாளிகளுக்குச் சார்பானது, நிதி நெருக்கடியை ஏற்படுத்தப் போவது என்பது எளிதில் விளங்கும்.



மக்கள் மீது 6904 கோடி ரூபாய் புதிய வரிச்சுமை ஏற்றப்பட்டுள்ளது. இதற்கு முன்னதாக தொடர்வண்டித் துறையில் மம்தா பானர்ஜி அவர் பங்கிற்கு சரக்குக் கட்டணமாக உயர்த்தி உள்ள ரூ.600 கோடிக்கு மேல் இந்த வரிச்சுமை என்பதை நினைவில் கொள்ள வேண்டும்.

உற்பத்தி வரிச் சீரமைப்பு என்ற பெயரில் அனைத்துப் பொருட்களின் மீதும் 8% முதல் 16% வரை வரி உயர்த்தப்பட்டுள்ளதும், கச்சா எண்ணெய், மண்ணெண்ணெய் ஆகியவற்றின் மீதான மேல்வரி கூடுதலாகியுள்ளதும், சரக்குக் கட்டண உயர்வும் சேர்ந்து கடும் விலையேற்றத்தையே கொண்டு வரும்.

உணவு மானியம் 2800 கோடி ரூபாய் வெட்டப்பட்டு பொது விநியோகத் திட்டம் சீர்குலைக்கப்படுகிறது. ஏற்கெனவே மாதம் ரூ.1000க்குக் கீழ் குடும்ப வருமானம் உள்ளவர்கள் மட்டுமே வறுமைக் கோட்டிற்குக் கீழ் உள்ளதாகவும், ரூ.1000க்கு மேல் வருமானம் இருப்பவர்கள் அனைவருமே வறுமைப்பட்டவர்களில்லை என்றும் தன்னிச்சையாக - மக்கள் விரோதமாக குடும்ப அட்டைகள் வகை பிரிக்கப்பட்டுள்ளன.

இந்த வரவு-செலவுத் திட்டத்தில், வறுமைக் கோட்டிற்குக் கீழ் உள்ளவர்களுக்கு (சிவப்பு அட்டை குடும்பங்களுக்கு) மாதாந்திர அரிசி 10 கிலோவிலிருந்து 20 கிலோவாக கூட்டியிருந்தாலும், தாறுமாறாக விலையை ஏற்றியுள்ளது பா.ஜ.க. அரசு. கிலோ ரூ.3.50க்கு விற்கப்படும் அரிசியின் விலையை ஒரேயடியில் 69% உயர்த்தி, ரூ.5-89 ஆக அறிவித்துள்ளது. வறுமைக் கோட்டுக்கு மேல் உள்ளவர்களுக்கு (மஞ்சள் அட்டைக் குடும்பங்களுக்கு) இந்த அரிசி விலை உயர்வு 32% ஆகும். இது வெளிவிலைக்குக் கிட்டத்தட்ட சமமாகும்.

இக் காரணங்களால் தமக்குள்ள முழு அளவையும் பல குடும்பங்கள் வாங்க முடியாமல் போகும். இது ஒருபுறம் அரிசித் தேக்கத்தை ஏற்படுத்தி, கிட்டங்கி செலவைக் கூட்டும். பயனின்றி மானியச் செலவு அதிகரிக்கவே செய்யும். இன்னொருபுறம், மக்களுக்குச் சேர வேண்டிய அரிசி கடத்தப்பட்டு, ஊழல் நடப்பதற்கு வழிவகுக்கும்.

அதே போல் நியாயவிலைக் கடை சர்க்கரை விலை கிலோவுக்கு ஒரு ரூபாய் உயர்த்தப்பட்டுள்ளது.

வாஜ்பாய் அரசின் இந்த வரவு-செலவுத் திட்டம் விவசாயிகளைக் குறி வைத்துத் தாக்குவதாக அமைந்துள்ளது. வேளாண்மானியம் ரூ.4000 கோடி வெட்டப்படுகிறது.யூரியா மீது 15% வரி கூடுதலாக்கப்பட்டுள்ளது. மற்ற உரங்களின் மீதும் வரி ஏற்றப்பட்டுள்ளது. எவ்வளவு கடுமையான காலத்திலும் உரம், கால்நடைத் தீவனம் ஆகியவற்றிற்கு சரக்குக் கட்டண உயர்விலிருந்து விலக்கு அளிக்கப்படும். இந்த தொடர்வண்டித் துறை வரவு-செலவுத் திட்டத்தில் உரம், கால்நடைத் தீவனம், கால் நடைகள் ஆகியவற்றின் மீதான சரக்குக் கட்டணமும் உயர்த்தப்பட்டுள்ளது.

வேளாண்மைக்கு ஒதுக்கப்படும் நிதி சென்ற ஆண்டை விட 16% குறைக்கப் பட்டுள்ளது.

அதே நேரத்தில் எண்ணெய், சர்க்கரை, பால் பொருட்கள் உள்ளிட்ட விவசாயம் சார்ந்த பொருட்கள் தாராள இறக்குமதி பட்டியலில் சேர்க்கப்பட்டு, வரிவிலக்கு அளிக்கப்பட்டுள்ளன.

**கி.வெங்கட்ராமன்**



படிப்பகம்

www.padippakam.com

மொத்தத்தில் விவசாயிகள் நசுக்கப்படுகிறார்கள். தமிழ்நாட்டைப் பொருத்தவரை, வேளாண்மை என்பது கடும் நெருக்கடியில் உள்ளதால், விவசாயத் தொழிலாளிகள் பிழைப்புக்காக அண்டை மாநிலங்களுக்குச் செல்வது அதிகரித்து வருகிறது. இவர்களில் பெரும்பாலோர், குடும்பத்தைச் சொந்த கிராமத்திலேயே விட்டுச் செல்கின்றனர். இது, ஒரு பக்கம் பெண்கள் மீது குடும்பச்சுமையைக் கடுமையாகக் கூட்டுகிறது. இன்னொருபக்கம், குடும்ப உறவுகளில் குழப்பத்தையும், சமூக சிக்கல்களையும் உருவாக்குகிறது.

விவசாயிகள் மேலும் மேலும் கடனாளியாவது, கொடுபடாத கூட்டுறவுக் கடன்கள் கூடுவதற்கே வழிவகுக்கும். இது 'மாநில' அரசின் நிதிச்சுமையை அதிகரிக்கும். நியாய விலைக் கடைகளில் வழங்கப்படும் அரிசி விலை உயர்வை தமிழ்நாடு அரசு ஏற்றுக் கொண்டுள்ளது. இதனால் தமிழ்நாட்டுக்கு ரூ.300 கோடி நிதிச்சுமை ஏறியுள்ளது. மேல் வரியின் மூலமே (சர்-சார்ஜ்) வருவாய் தேடும் 'வல்லவராக' யஸ்வந்த் சின்ஹா இருப்பதால், அவரைப் பத்திரிகைகள் 'சர்-சார்ஜ் சின்ஹா' என்று கேலி செய்கின்றன. கச்சா எண்ணெய்க்கு கூடுதல் மேல்வரி, நிறுவனத் தீர்வைக்கும், வருமான வரிக்கும் 15% மேல் வரி என்று இந்த வரவு செலவுத் திட்டத்திலும் இதே வழியைக் கையாண்டிருக்கிறார் சின்ஹா. மேல் வரியில் 'மாநில'ங்களுக்கு பங்கு கிடையாது என்பதே அரசமைப்புச் சட்டப்படியான நிலைமை.

ஏற்கெனவே மாநிலங்களுக்கு அளிக்கப்படும் மானிய விகிதம் குறைந்து கொண்டே வருவதை அரசின் பொருளாதார ஆய்வறிக்கை எடுத்துக் காட்டுகிறது. (வரைபடம் காண்க)

இந்த ஆண்டிலிருந்து மாநிலங்களுக்கு தில்லி அரசின் வரி வருமானத்திலிருந்து 29% அளிக்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. நிறுவனவரி, சுங்கத்தீர்வை, உற்பத்தி வரி ஆகியவற்றில் இந்த பங்கீடு உண்டென்றாலும், மேல் வரிக்கோ, நேரடி கட்டண உயர்வு மூலம் வரும் வருமானத்துக்கோ இது பொருந்தாது. அந்த வகையில் தில்லி அரசின் வரி வருமானத்தில் 50% அளவு இன்னும் பங்கிட முடியாத வருவாயாகவே நீடிக்கிறது.

தில்லி அரசின் பிரிபடும் மொத்த வரி வருமானத்தில் 29% மாநிலங்களுக்கு அளிக்க வேண்டும் என்பதே பத்தாவது நிதி ஆணையத்தின் பரிந்துரை. ஆனால், வாஜ்பாய் அரசு 'மொத்த வரி' வருவாய்க்குப் பதிலாக 'நிகர வரி' (Net tax revenue) வருவாயில் 29% என மாற்றி அமல்படுத்த முனைந்துள்ளது. இதன் மூலம் மாநிலங்களின் பங்கு மறுக்கப்படுகிறது.

இரண்டாவதுகட்ட பொருளாதார சீர்திருத்தம் என்ற பெயரில் 'மாநில'ங்கள் தமது வளர்ச்சித் திட்டங்களைக் குறைக்குமாறு இந்த வரவு- செலவுத்திட்டம் வற்புறுத்துகிறது.

ஏற்கெனவே, சம்பளம் மற்றும் நிர்வாகச் செலவுகளுக்கே வருமானம் போதாமல் பல்வேறு மாநில அரசுகள் திண்டாடுகின்றன. ஜம்மு- காஷ்மீர், பீகார், கேரளா போன்றவை இதற்கு சில எடுத்துக் காட்டுகள். தமிழ்நாடு உள்ளிட்ட பெரும்பாலான 'மாநில'ங்கள் தமது வருவாயில் பெரும்பகுதியை சம்பளம் மற்றும் நிர்வாகச் செலவுகளுக்கே இழந்து வருகின்றன. இந்த நிலையில் 'மாநில' அரசுகள் கடன் வாங்கி காலம் தள்ளுகின்றன. இவ்வாறான கடன்கள் ரூ.20,000 கோடி என்று பொருளாதார ஆய்வறிக்கை கூறுகிறது.



இந்த அரசுகள் செலவைக் குறைப்பது என்ற பெயரால் மருத்துவம், கல்வி ஆகியவற்றுக்கான செலவிலேயே கை வைக்கின்றன. இதனால் மருத்துவம், கல்வி ஆகிய துறைகளில் தனியார் ஆதிக்கம் வளர்ந்து, இவை ஏழை மக்களுக்கு எட்டாததாக்கப்படுகிறது. சேதுக் கால்வாய்த் திட்டத்தை உடனே செயலாக்குவோம் என்று வாஜ்பாயும், பெர்னாண்டசும் அறிவித்து, அதற்கு ம.தி.மு.க. படாடோபமாக வெற்றிவிழா - நன்றி அறிவிப்பு சுவரொட்டிகளும் ஒட்டிக் களித்தாகிவிட்டது. இந்த வரவு-செலவுத் திட்டத்தில் சேதுக் கால்வாய் திட்டத்தின் சாத்தியப்பாடு பற்றி அறிய ரூ.4.80 கோடி நிதி ஒதுக்கியுள்ளது தில்லி அரசு. இனிமேல்தான் இத்திட்டம் சாத்தியமானதா என்று ஆராயப் போகிறார்களாம்!

இது வரை ஆறு முறை சேதுக் கால்வாய்த் திட்டத்தின் சாத்தியப்பாடு குறித்து ஆய்வு செய்து (Feasibility study), சாத்தியம்தான் என்று வல்லுனர் குழுக்கள் அரசுக்கு அறிக்கை அளித்து விட்டன. வெள்ளையர் ஆட்சிக் காலத்திலேயே 1921 -ஆம் ஆண்டு சர் ராபர் பிரிஸ்லோ என்ற பொறியாளர் இத்திட்டம் சாத்தியமானதே என்று அறிக்கை கொடுத்தார். அதன் பிறகு 1955 ல் இராமசாமி முதலியார் குழு ஆய்வு செய்து சேதுக் கால்வாய்த்திட்டம் தொழில் நுட்பஅளவில் சரியானது; பொருளாதார ரீதியில் சாத்தியமானது என்று அறிக்கை அளித்தது. அதன் பிறகு பல ஆய்வுக்குழுக்கள் மீண்டும் மீண்டும் உறுதி செய்த பின்னர் கடைசியில் 1994- ல் பல்லவன் போக்குவரத்துக் கழக ஆலோசனை முகவாண்மை என்ற அமைப்பு இத்திட்டம் சாத்தியமானதே என்று அறிக்கை அளித்தது.

எனவே, இதனை மீண்டும் ஆய்வு செய்ய வேண்டிய அவசியமில்லை. "ஓரிரு மாதங்களில் நிதி ஒதுக்கி பணிகளைத் தொடங்குவோம்" என்று 1999 சனவரியில் அறிவித்த தில்லி அரசு, தனது வாக்குறுதியிலிருந்து பின் வாங்கியுள்ளது. நிதியமைச்சர் சின்ஹாவின் அறிவிப்பு, சேதுக் கால்வாய்த் திட்டத்தை மீண்டும் கிடப்பில் போடும் முயற்சியாகும்.


இந்த வரவு-செலவுத் திட்டத்தில் முன்னெப்போதும்



படிப்பகம்

www.padippakam.com

இல்லாத அளவுக்கு ரூ.58,587 கோடி இராணுவச் செலவுக்கு ஒதுக்கப்பட்டுள்ளது. இது சென்ற ஆண்டை விட 21% அதிகம். இது தவிர மத்திய காவல் படைகளுக்கு சென்ற ஆண்டை விட 16% கூடுதலாக - ரூ.8000 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. கார்கில் போரையோ, மதக் கலவரங்களையோ இதற்குக் காரணமாகக் காட்டினால், அதற்கு முதல் பொறுப்பேற்க வேண்டியவை பா.ஜ.க.வும், அதன் குடும்ப அமைப்புகளுமே ஆகும். உண்மையில் கார்கில் போரில் செலவாகி இருப்பது ரூ.2800 கோடிதான் என்று சின்ஹா கூறுகிறார். அப்படியானால் இவ்வளவு தொகை ஒதுக்க வேண்டிய தேவை என்ன? அரிசி, சர்க்கரை, மண்ணெண்ணெய் விலையை உயர்த்தி, திட்டச் செலவுகளை வெட்டி, இராணுவத்திற்கு இவ்வளவு தொகையை ஒதுக்குவது ஏன் என்று கேள்வி எழுப்பினால், அது தேசவிரோதம் என்று முத்திரை குத்தப்படும்.




நடாளுமன்றத்திற்கே வெளி உலகத்துக்கோ தெரியாத ஆயுத பேரத்தில் பல்லாயிரம் கோடி ஊழல் நடப்பதற்கே இது பயன்படும்.

இன்னொருபுறம் இது தெற்காசியாவில் ஆயுதப் போட்டியை தீவிரப்படுத்தும்.

"நாடு பெரும் நெருக்கடியில் இருக்கிறது. மக்கள் தேசபக்தியோடு சுமைகளை ஏற்க முன்வர வேண்டும்" என்று கடந்த மூன்று மாதங்களாகவே யஸ்வந்த் சின்ஹா பேசி வந்தார்.

இந்த 'தேசபக்தர்கள்' மக்கள் மீது சுமையை ஏற்றிவிட்டு, பன்னாட்டு நிறுவனங்களுக்கு பல்வேறு வரிச் சலுகைகளை அறிவித்துள்ளனர்.

வெளிநாட்டிலிருந்து இறக்குமதியாகும் பொருட்களுக்கு ரூ.1400 கோடிக்கு சுங்கத் தீர்வையைக் குறைத்துவிட்டு, உள்நாட்டில் உற்பத்தி வரியை ரூ.4000 கோடி உயர்த்தியுள்ளது. வெளிநாட்டிலிருந்து இறக்குமதியாகும் கணிப்பொறி மென் பொருட்களுக்கும், உதிரிபாகங்களுக்கும் வரிச்சலுகைகளை வாரி வழங்கியுள்ளது தில்லி அரசு. யூரியா விலையை உயர்த்தியுள்ள வாஜ்பாய் அரசு செல்லுலர் தொலை பேசியின் மீதும், வைரத்தின் மீதும் வரியைக் குறைத்துள்ளது.

அதே நேரம் கண்ணை மூடிக் கொண்டு அனைத்துப் பொருட்களுக்கும் ஏற்றுமதி வருமானத்தின் மீது 20% வரி விதித்துள்ளார் நிதியமைச்சர் சின்ஹா. இது தமிழ்நாட்டிலிருந்து செல்லும் ஆயத்த ஆடைகள், உள்ளாடைகள், தோல் பொருட்கள் ஏற்றுமதியைக் கடுமையாக பாதிக்கும்.

தில்லி அரசின் இந்த அறிவிப்பு உலக வர்த்தக அமைப்பின் நிபந்தனைப்படி, அமெரிக்க நலனுக்கு ஏற்ற நடவடிக்கை ஆகும். இந்தியாவுக்கு வருகை தரும் கிளிண்டனுக்கு வாஜ்பாய் அரசின் பரிசாகும் இது. இதற்கு தமிழ்நாட்டு நலன் பலியாகி இருக்கிறது.

இவ்வளவுக்குப் பிறகும் 2000-01 ஆம் ஆண்டின் நிதிப் பற்றாக்குறை ரூ.1,11,275 கோடியாக இருக்கும் என யஸ்வந்த் சின்ஹா அறிவித்துள்ளார். உண்மையில் இது இன்னும் கூடுதலாகும். ஏனெனில் சென்ற நிதியாண்டில் ரூ.79,955 கோடியாக இருக்கும் என்று மதிப்பிடப்பட்ட நிதிப்பற்றாக்குறை ரூ.1,08,898 கோடி என்று - அதாவது பட்ஜெட் மதிப்பீட்டை விட 40% அதிகம் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. இதே போக்கு இந்த ஆண்டும் நீடிக்கும்.

திட்ட மதிப்பீட்டை விட இவ்வளவு கூடுதலாக நிதிப்பற்றாக்குறை அதிகரிக்கிறது என்றால், நிதித்திறனற்ற நிதியமைச்சர் ஆட்சி செய்கிறார் என்று பொருள். வேறு நாடாக இருந்தால் நிதியமைச்சர் தமது தோல்வியை ஒத்துக் கொண்டு பதவி விலகியிருப்பார்.

மொத்தத்தில் பா.ஜ.க. அரசின் 2000-01 ஆம் ஆண்டு வரவு- செலவுத் திட்டம் மக்களை வதைப்பது. விவசாயிகளுக்கு விரோதமானது, 'மாநில'ங்களை ஒடுக்குவது, தமிழ்நாட்டை வஞ்சிப்பது, பன்னாட்டு முதலாளிகளுக்கு ஆதரவானது❖

## தஞ்சை நகர கட்டடத் தொழிலாளர் சங்கக் கொடியேற்று விழா

*19/3/2000* அன்று தஞ்சை மருத்துவக் கல்லூரி முதல்வாயில் அருகில் தஞ்சை நகர கட்டடத் தொழிலாளர் சங்க கொடியேற்றுவிழா பொதுக்கூட்டம் மிகச் சிறப்பாக நடைபெற்றது. தோழர் அ. கருப்புசாமி (தலைவர், தஞ்சை நகர கட்டடத் தொழிலாளர் சங்கம்) தலைமை தாங்கினார்.

தோழர் பெ. மணியரசன் சங்கத்தின் கொடியினை ஏற்றி வைத்து சிறப்புரையாற்றினார். மற்றும் தோழர்கள் த.கா. பரமசிவம், பழ. இராசேந்திரன், நா.வைகறை, எம். கே. பால சுப்ரமணியன் ஆகியோர் உரையாற்றினர்.


தோழர் கோவிந்த சாமி நன்றி கூறினார்.


படிப்பகம்

www.padippakam.com

# தஞ்சை தி.மு.க. நகராட்சியில் சாலை வசதி கோரிய மக்களின் மண்டையைப் பிளந்தது காவல் துறை

தஞ்சை நகர 44 வட்டத்தைச் சேர்ந்த கோரிகுளம், கருப்பாயி அம்பலகாரத் தெரு, தென் வெட்டுகாரத்தெரு, வண்டிக்காரத்தெரு, முதலிய பகுதி மக்களின் போக்குவரத்திற்கு இன்றியமையா தேவையாக உள்ள கோரிகுளம் ரயில்வே கீழ்பாலம் சாக்கடை நீரும், வாய்க்கால் நீரும் கலந்து நிரந்தர சாக்கடை குளமாக மாறிவிட்டது. இதனால் போக்குவரத்திற்கு வேறுவழியில்லாமல் மக்கள் பெரிதும் அவதிப்படுகின்றனர். அதே போல் கோரிகுளம் மற்றும் தென்வெட்டுக்காரத் தெரு ஆகியவற்றிற்கு முப்பதாண்டுகளுக்கு முன் போடப்பட்ட சாலைகள் இன்று வரை புதுப்பிக்கப்படாமல் ஒற்றையடி பாதையாக மாறியுள்ளது.



போராடும் மக்கள்

இக்குறைகளை நிவர்த்தி செய்யக் கோரி பலமுறை நகராட்சியில் நகர் மன்றத் தலைவர் மற்றும் ஆணையருக்கு மனுக்கள் கொடுத்தும் எந்த பயனும் இல்லை. எனவே தங்கள் கோரிக்கைகளை வலியுறுத்த நகராட்சியில் முற்றுகைப் போராட்டம் நடத்துவது என இப்பகுதி மக்கள் முடிவு செய்தனர். இப்போராட்டத்திற்கான அமைப்புப் பணிகளை தமிழ்த் தேசப் பொதுவுடைமைக் கட்சியும், தமிழக இளைஞர் முன்னணியும் செய்தன.

27/3/2000 அன்று காலை சுமார் 9.00 மணிக்கு ஆண்களும், பெண்களுமாக சுமார் 500 பேர்கள் நகராட்சியை முற்றுகையிட்டனர். அப்போது காவல் துறையினர் காட்டுமிராண்டித்தனமாக தடியால் அடித்து பலரின் மண்டையைப் பிளந்தனர். சிலருக்கு கைகள் முறிந்தன. பெண்களும் இரத்த காயத்திற்குள்ளாயினர்.

கருப்பையன், கிருட்டிணமூர்த்தி மாது, சாந்தி, மகாலிங்கம், பிரபாகரன், வீரய்யா, காந்தி, காளிமுத்து மற்றும் கைக்குழந்தைகளுடன் வந்த பெண்களும் தடியடியில் படுகாயம் அடைந்து தஞ்சை மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் சிகிச்சை பெற்றார்கள்.

ஆத்திரம் அடைந்த மக்கள் நகராட்சிக்கு எதிரே சாலை மறியலில் ஈடுபட்டனர். சுமார் மூன்று மணி நேரம் போக்குவரத்து பாதிக்கப்பட்டது. அதன் பிறகு 108 பெண்கள் உள்ளிட்டு 293 பேரை காவல் துறையினர் கைது செய்தார்கள். மாலை 6 மணி அளவில், முற்றுகை போராட்டத்திற்கு தலைமை தாங்கிய கி.க. ரெங்கசாமி உட்பட 20 பேர்கள் மீது பொது சொத்து சேத குற்றத்தின் கீழ் வழக்கு பதிவு செய்து அவர்களை சிறையிலடைத்தனர் மற்றவர்களை விடுதலை செய்தனர்.

கண்டனக் கூட்டம்

தஞ்சை நகராட்சி திமுக பொறுப்பில் உள்ளது. நகராட்சித் தலைவர் இறைவன், கோரிக்கையை எழுப்பிய மக்கள் பிரதிநிதிகளுடன் பேச்சு வார்த்தை நடத்தாமல் முதல் நாளே காவல் துறையினருடன் சதி ஆலோசனை செய்து அடிப்படை வசதி கோரி முற்றுகை நடத்தும் மக்களை அடித்து நொறுக்கும்படி தூண்டியுள்ளார். இறைவன் பதவி விலகும் படியும் மக்களை தாக்கிய காவல் துறையின் மீது நடவடிக்கை எடுக்கும்படியும் கோரிக்கை வைத்து , அனைத்துக் கட்சி கண்டனக் கூட்டம் 31/03/2000 அன்று வண்டிக்காரத்தெருவில் தோழர் ஆ.வேலாயுதம் (த.தே.பொ.க.) தலைமையில் நடைபெற்றது. இதில் திருவாளர்கள் பெ. மணியரசன், பழ. இராசேந்திரன், த.கா.பரமசிவம்(த.தே.பொ.க.) விருத்தாசலம் (அஇஅதிமுக நகர செயலாளர்) அதிரடி அன்பழகன் (தி.க.) ஞான மாணிக்கம் (சி.பி.எம்., நகரச் செயலர்) ஆர். பொன்னுசாமி (மாவட்டப் பொருளாளர், இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி) ஜெ.ஜெயபாலன்(பொதுச் செயலாளர், தமிழர் பூமி) கலைமணி (மாவட்டச் செயலர், தமிழர் பூமி) விஜய ராஜா, (பா.ம.க. நகரச் செயலர்) ஆகியோர் உரையாற்றினர். உணர்ச்சி கொந்தளிப்போடு திரளான மக்கள் கலந்து கொண்டனர்.



படிப்பகம்

www.padippakam.com

# பெரியாறு மட்டுமல்ல, பீர்மேடு தேவிகுளமும் நமதே

மேற்குத் தொடர்ச்சி மலையில் 3500 அடி உயரத்தில் அடர்ந்த காடு. அங்கே ஓடிவரும் இரண்டு ஆறுகள்; ஒன்று பெரியாறு, இன்னொன்று முல்லையாறு. இவ்விரண்டு ஆறுகளுக்கு இடையே அங்கு கட்டப்பட்டதுதான் பெரியாறு அணை.

சிலப்பதிகாரத்தில் பேர்யாறு என்று இளங்கோவடிகள் இதைக் குறிப்பிடுகிறார். மதுரையை விட்டகன்ற கண்ணகி பதினான்கு நாட்கள் கண்ணீரும் கம்பளையுமாய், பசியும் பட்டினியுமாய், ஆவேசமும் சோகமுமாய் நடந்து நடந்து இந்த பேர்யாற்றங்கரை அருகே உள்ள மலைக்கு வந்து சேர்ந்தாள். அங்குதான் அவள் இறுதி நிலை அடைந்தாள். மலைவளம் காணவந்த சேரன் செங்குட்டுவன், மலைகளுக்குக் குறுக்கே மாலைபோல் ஓடும் பேர்யாற்றங்கரை அருகே அமர்ந்தான்.

"நெடியோன் மார்பி லாரம் போன்று
பெருமலை விலக்கிய பேரியாற் றடை கரை"

தேனி மாவட்டம் குமுளியை அடுத்துள்ள தேக்கடிக்கு அருகே இருக்கிறது பெரியாறு அணை.

ஆங்கிலேயர் ஆட்சிக்காலத்தில் 1081 தொடங்கி 1840 வரை அடிக்கடி பருவமழை பொய்த்து பஞ்சம் தமிழ்நாட்டில் படர்ந்தது. குடும்பம் குடும்பமாக பிழைப்புத்தேடி பிற தேசங்களுக்கு மக்கள் சென்றனர். வெள்ளை அரசுக்குக் கிடைக்க வேண்டிய வரி வசூலிலும் பாதிப்பு ஏற்பட்டது. அப்போதுதான் நீர் வளங்களைப் பெருக்கும்படி பொறியாளர்களுக்கு ஆணையிட்டது வெள்ளை அரசு.

கம்பம் பள்ளத்தாக்கு பகுதியில் ஆறுகள் ஓடுவதை ஆங்கிலேயப் பொறியாளர்கள் கண்டறிந்தனர். 1815ல் இந்தப் பகுதியில் அணை கட்ட கேப்டன் வார்ட்ஸ் முதல் ஆய்வினை மேற்கொண்டார், சென்னை மாகாணத்தின் ரெவின்யூ போர்டு உறுப்பினர் காட்சன் 1827-ல் அணைக்கட்டு தொடர்பான திட்டப்பணிகள் குறித்த அறிக்கையை அரசுக்குக் கொடுத்தார். இந்த அறிக்கையை 23 ஆண்டு கழித்து அரசு பரிசீலித்தது. அப்போது பெரியாறு அணை கட்ட திட்டமிட்ட காட்டுப்பகுதி சென்னை மாகாணத்தில் தான் இருந்தது, இப்போது பெரியார் அணை அமைந்துள்ள இடத்திலிருந்து, 62 கிலோமீட்டர் தள்ளியிருக்கும் கொட்டாரக்கரை, அடூர் என்ற ஊர்களில் இருந்து தான் கேரள எல்லை அதாவது அன்றைய திருவிதாங்கூர் சமஸ்தான எல்லை தொடங்கியது.

**பெ.மணியரசன்**

1862-இல் ஆங்கிலேய அரசு அந்த இடம் திருவிதாங்கூர் சமஸ்தான பகுதி என்று தவறாக நினைத்து அங்கு அணைகட்ட திருவிதாங்கூர் அரசுக்குக் கடிதம் போட்டது. தனது இடம் இல்லை என்ற நினைப்பில் திருவாங்கூர் மகாராசா பதில் கடிதம் போடாமல் இருந்து விட்டார்.

மறுபடியும் 1863 மார்ச் மற்றும் செப்டம்பர் மாதங்களில் சென்னை ஆளுநர் மகாராசாவுக்கு அனுமதிகோரி கடிதம் எழுதவே, ஆங்கில அரசு முன் வந்து கொடுக்கும் நிலப் பகுதியை நாம் ஏன் மறுக்க வேண்டும் என்று திருவாங்கூர் அரசர் அணைகட்ட அனுமதி வழங்கினார்.

இந்த கட்டத்தில்தான் பெரியார் அணையின் தந்தை என்றும், பெரியார் அணையின் புரவலர் என்றும் கருதப்படும் ஆங்கிலேயப் பொறியாளர் **பென்னி குக்** களத்திற்கு வருகிறார். பெரியாறு அணைகட்டும் பொறுப்பு பென்னி குக் அவர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. மேற்குத் தொடர்ச்சி மலையில் உற்பத்தியாகி மேற்கு நோக்கி ஓடி கடலில் கலந்த பெரியாறு முல்லை ஆறுகளுக்கு இடையே அணைகட்டும் பணியை 1874 ஆம் ஆண்டு பென்னி குக் தொடங்கினார். 1890 ஆம் ஆண்டு ஏற்பட்ட பெரும் வெள்ளத்தில் கட்டிய அணையின் பெரும்பகுதி வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்டது.

இனிமேல் அணை கட்ட கூடுதல்பணம் செலவிடமுடியாது என்று கூறி அத்திட்டத்தை கைவிடும் மாறு சொல்லிவிட்டது ஆங்கிலேய அரசு. இதனால் மனமுடைந்த பென்னிகுக் இங்கிலாந்து சென்று அங்கிருந்த தன் சொத்துக்களை விற்றுப் பணம் கொண்டு வந்து அதனை வைத்து அணை கட்டும் பணியை மறுபடியும் தொடங்கினார்.

அணையின் அடித்தளம் 144 அடி 6 அங்குலம் அகலம் கொண்டது. இதன் உயரம் 177 அடி. உயரத்தில் அணைச் சுவரின் அகலம் 12 அடி, அணையின் நீளம் 1241 அடி, நீர்த் தேக்க உயரம் 155 அடி, அலைகள் ஏற்படும்போது பாதிப்பு ஏற்படக் கூடாது என்பதற்காக நீர் மட்டம் 152 அடியாக குறைக்கப்பட்டது.

152 அடி நீர் நின்றால் அணையின் உட்பகுதியில் 26,44 சதுர கிலோமீட்டர் பரப்பில் நீர் தேங்கி நிற்கும் இதன் மொத்த தண்ணீர் 15.7 டி.எம்.சி அதாவது 15 ஆயிரத்து 700 மில்லியன் கன அடி. அதிகப்படியான நீரை வெளியேற்ற அணையின் வலப்புறத்தில் 136 அடி உயரத்தில் பத்து நீர் வழிந்தோடிகள் கட்டப்பட்டன, இவற்றின் வழியாக நொடிக்கு 82 ஆயிரம் கனஅடி தண்ணீரை வெளியேற்றலாம்.


படிப்பகம்

www.padippakam.com

அணையில் 15,700 மில்லியன் கன அடி தண்ணீர் தேங்கினாலும் அதனை முழுமையாக பயன்படுத்திக் கொள்ள முடியாது. 104 அடி உயரம் வரை கிடக்கும் தண்ணீரை பயன்படுத்த முடியாது. அது தேங்கி கிடக்கும் . அதன் அளவு 7620 மில்லியன் கன அடி. இதற்கு மேல் தேங்கக் கூடிய 8880 கன அடி தண்ணீரை மட்டுமே பயன்படுத்தமுடியும். 152 அடி உயரத்திற்கு தண்ணீரை தேக்கினால்தான் தமிழகம் 8800 மில்லியன் கன அடி தண்ணீரை அதாவது 8.8 டி.எம்.சி. தண்ணீரை பயன்படுத்த முடியும்.

அணையின் கட்டுமான பணி முடியும் வரை நீர் வழிந்து செல்வதற்காக இடதுபுறம் வெட்டப்பட்ட கால்வாயினை மறித்து பேபி டேம் 240 அடி நீளத்தில் கட்டப்பட்டது. தேங்கிய நீரை எதிர் திசையில் கொண்டு சென்று தமிழகத்திற்குள் கொண்டு வருவதற்காக அணை உள்ள இடத்தில் இருந்து14 கி.மீ. நீர்த்தேக்க பரப்பினை அடுத்து கிழக்குப் பக்கமாக 2. கி.மீ. தூரம் திறவை வாய்க்கால் வெட்டப்பட்டது, அணையில் 104 அடிக்கு மேல் உள்ள தண்ணீர் முழுவதும் இந்தத் திறவை வாய்க்கால் வழியாக செல்லும் வகையில் திறவை வாய்க்கால் வெட்டப்பட்டது.

இந்த நீர் பெரியாறு கால்வாய் வழியாக வைகை நதியில் இணைகிறது. இது பேரணை வழியாக மேலூர், சோழவந்தான், நிலக்கோட்டை, செக்கானூரணி, திருமங்கலம், திருப்புத்தூர், திருமங்கலம், திருபுவனம், சிவகங்கை, இராமநாதபுரம் ஆகியப் பகுதிகளுக்கு செல்கிறது.

இனிமேல் அணை கட்ட கூடுதல்பணம் செலவிடமுடியாது என்று கூறி அத்திட்டத்தை கைவிடும் மாறு சொல்லிவிட்டது ஆங்கிலேய அரசு. இதனால் மனமுடைந்த பென்னி குக் இங்கிலாந்து சென்று அங்கிருந்த தன் சொத்துக்களை விற்றுப் பணம் கொண்டு வந்து அதனை வைத்து அணை கட்டும் பணியை மறுபடியும் தொடங்கினார்.

இந்தப் பகுதிகளில் மூன்று லட்சத்து ஆறாயிரம் ஏக்கர் நிலங்கள் பெரியாறு, வைகை நீரினால் பாசன வசதிபெற்றன. சுமார் ஒரு கோடி மக்களுக்கு நேர் முகமாகவும் மறைமுகமாகவும் பயன் அளித்தது.

இப்பெரியாறு அணை 1895 அக்டோபர் 10ம் தேதி திறக்கப்பட்டது. அன்று முதல் 999 ஆண்டுகளுக்கு பெரியாறு அணையை தமிழகம் பயன்படுத்திக் கொள்ள உரிமை தரும் ஒப்பந்தம் தமிழக அரசுக்கும் திருவாங்கூர் சமஸ்தானத்துக்கும் இடையே ஏற்பட்டது. இந்த ஒப்பந்தத்தில் 1886 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 21ம் தேதி திருவாங்கூர் மகாராஜா சார்பில் வெண்கம் ராமையங்கார் என்பவரும் சென்னை மாகாணம் சார்பில் ஜான் கைட்டு ஹாம்மில்டனும் கையெழுத்திட்டனர்.

சாட்சிகளாக திருவாங்கூர் மராமத்து செயலாளர் குருவில்லாவும், சமஸ்தான செயலாளர் பிரின்சும் கையெழுத்திட்டனர்.

ஒப்பந்தத்திற்கு உட்பட்ட நிலத்தில் தமிழக அரசு நீர்ப் பாசனம் மற்றும் மின்சார உற்பத்திக்கான செயல்பாடுகள் செய்து கொள்ளலாம். அணையின் பராமரிப்பு பணிகளை செய்வதற்கான பொருட்களை எடுத்துச் செல்வதற்கு தமிழக அரசுக்கு முழு உரிமை உண்டு. இதற்கு வரி எதுவும் கிடையாது. அணையின் உள் அடங்கும், மரம் மற்றும் மரக்கட்டைகளை அணையின் நலம் கருதி எவ்விதக் கட்டணமும் இன்றி பயன்படுத்திக்கொள்ளலாம். அணைக்கு சென்றுவர தமிழகத்திற்கு முழு உரிமை உண்டு. போக்குவரத்திற்குப் படகு உள்ளிட்ட வாகனங்களை தமிழக அரசு சொந்தமாக வைத்துக்கொள்ளலாம்.

597,77 சதுர கிலோமீட்டர் நீர்ப் பிடிப்பு நிலப்பரப்புக்கு வாடகையாக தமிழக அரசு கேரள அரசிற்கு ஆண்டிற்கு இரண்டு லட்சத்து நாட்பதாயிரம் ரூபாய் செலுத்தி வருகிறது.

இவ்வாறு வலுவாக உருவாக்கப்பட்ட பெரியாறு அணை ஒப்பந்தத்தை நடை முறையில் செயலற்றதாக்கி வருகிறது கேரள அரசு. தமிழக ஆட்சியாளர்களும் வெள்ளையன் உறுதி செய்து கொடுத்த உரிமைகளை நழுவவிட்டு தமிழக மக்களை வஞ்சித்து விட்டனர்.

மொழிவாரி மாநிலங்கள் உருவாகத் தொடங்கிய 1952ல் தான் பெரியார் அணை சிக்கல் தொடங்கியது. பீர்மேடு, தேவிகுளம், வட்டங்களில் 90 விழுக்காடு தமிழர்கள் வசித்தனர். இரண்டு வட்டங்களும் மொழிவாரி பிரிவினை அளவுகோல் படி தமிழகத்தில் சேர்ந்திருக்க வேண்டும், ஆனால் மலையாளிகள் பீர்மேடு, தேவிகுளம், தாலுக்காக்களையும் நாகர்கோயில், கன்னியாகுமரி பகுதிகளையும் கேரளத்துடன் இணைக்க வேண்டும் என்று போராடினார்.

தேவிகுளம் பீர்மேடு வட்டங்களில் உள்ள தமிழர்களின் எண்ணிக்கையுடன் மலையாளிகள் எண்ணிக்கையை சமன்படுத்த திட்டமிட்டு அப்போதைய கேரளமுதல்வர் பட்டம் தாணுப் பிள்ளை 119 சிறைகளில் இருந்த மலையாள கைதிகளை விடுதலை செய்து அப்பகுதிகளில் குடி அமர்த்தினார்.

அவ்வாறு குடி அமர்த்தப்பட்ட அவர்களுக்கு ஒரு குடும்பத்திற்கு 5 ஏக்கர் நிலமும் ஐந்தாயிரம் ரூபாய் பணமும் கேரள அரசு வழங்கியது. எவ்வளவுதான் செயற்கையாக மலையாளிகளை குடியேற்றினாலும் இன்றும் தேவிகுளம் பீர்மேடு வட்டங்களில் 60 விழுக்காடு தமிழர்களே வசித்து வருகின்றனர்.



படிப்பகம்

www.padippakam.com

தமிழகத்தைச் சேர்ந்த தேவி குளம் பீர்மேடு பகுதிகளை நாம் இழந்தோம்.

1956 ஆம் ஆண்டு தமிழக அரசு பெரியாறு நீர் மின் நிலையத்தை கட்டியது. அதன் உற்பத்தி திறன் 140 மெகாவாட்.

1976-ம் ஆண்டு கேரள அரசு மிகப்பெரிய அளவில் இடுக்கி அணையினை கட்டியது. இவ்வணையின் உயரம் 555 அடி(பெரியார் அணையின் உயரம் 152 அடி) இடுக்கியின் நீர்த்தேக்கப்பரப்பு 649.3 சதுர கிலோ மீட்டர்.

இடுக்கி நீர் மின் நிலையம் 800 மெகாவாட் மின் உற்பத்தித் திறன் கொண்டது. (பெரியார் மின் நிலையத்தின் திறன் 140 மெகாவாட்)

பெரியாறு அணையின் நீர்பிடிப்பு பகுதியில் தென்மேற்கு பருவக்காற்று வீசும் ஜுன், ஜுலை, ஆகஸ்ட் மாதங்களிலும் வடகிழக்குப் பருவக்காற்று வீசும். அக்டோபர், நவம்பர், டிசம்பர் மாதங்களிலும் பலத்த மழை பெய்யும். இதனால் பெரியாறு அணைக்கு ஆண்டு முழுவதும் நீர் வரத்து உண்டு. ஆனால் இடுக்கி அணையின் நீர் பிடிப்பு பகுதிகளில் தென்மேற்கு பருவக்காற்று மாதங்களில் மட்டும் மழை பெய்கிறது.. இதனால் பெரிய அணையான இடுக்கி அணைக்கு எதிர்பார்த்த அளவு தண்ணீர் வரத்து இல்லை. தண்ணீர் வரத்தின் அளவை கணக்கில் எடுக்காமல் ஆசையை அளவாகக் கொண்டு நிறுவப்பட்ட மிகப்பெரிய இடுக்கி நீர் மின் நிலையத்தில் உற்பத்திக் குறைவு ஏற்பட்டது.

> 1886 முதல் 1980 வரை பெரியாறு அணைப்பகுதியில் 30 நில நடுக்கங்கள் ஏற்பட்டன. கூடுதல் அதிர்வான 3-7 டெசிபல் அளவு நில நடுக்கம் ஏற்பட்டபோது கூட அணைக்கு எந்த வித பாதிப்பும் இல்லை என்று வல்லுநர்கள் கூறுகின்றனர்.

இ ந் நி லை யி ல் தா ன் மலையாளிகளின் கண் பெரியாறு அணையின் மீது பாய்ந்தது. பெரியாற்றில் தேங்கும் தண்ணீரின் அளவைக் குறைத்து அந்நீரை இடுக்கி நீர் தேக்கத்திற்கு கொண்டு போகத் திட்டமிட்டனர்.

1979ம் ஆண்டு கேரள மின்வாரியத் தலைமைப் பொறியாளராக பரமேஸ்வரன் நாயர் என்பவர் இருந்தார். அவர் பெரியாறு அணையின் நீர் மட்ட அளவின்ன 136 அடியாகக் குறைத்து 16 அடி பெரியாறு அணை நீரை இடுக்கி அணைக்கு கொண்டு வரவேண்டும் என்று திட்டம் கொடுத்தார். ஆனால் பெரியாறு அணையின் மீது தமிழக அரசுக்கு உள்ள உரிமையே தொளாயிரம் ஆண்டுகளுக்கு மேல் உள்ளது. என்ன செய்வது என்று யோசித்தார்கள். சதித்திட்டம் ஒன்று உருவானது.

1979 ம் ஆண்டு பீர் மேடு தொகுதி சட்டபேரவை உறுப்பினர் சி. எ. குரியன் என்பவர், பெரியார் அணை பலவீனம் அடைந்து விட்டது. அணையில் நீர்க் கசிவு ஏற்பட்டு உள்ளது. அணை உடையும் அபாயம் உள்ளது என்று அபாயச் சங்கு ஊதி போராட்டம் நடத்தினார். கேரள அரசின் மறைமுக ஆதரவோடு இப்போராட்டம் நடந்தது. அணை உடைந்தால் கேரளாவில் உள்ள வல்லக்கடவு, வண்டிப் பெரியார், மஞ்சுமலை, மிளரி மலை, தேக்கங்கால், கருங்குளம், கருந்தருவி, சப்பாத்து, உப்புதுளை, மேழிக்குளம், ஆலடி, இடுக்கி போன்ற பகுதிகள் வெள்ளத்தில் அடித்து செல்லப்படும் என்று பீதி கிளப்பப்பட்டது.

ஆனால் 1930ம் ஆண்டு ஒரு முறையும் 1960 ம் ஆண்டு மறுமுறையும் சிமெண்ட் கிரவுட் செய்யப்பட்டு பெரியாறு அணை வலுப்படுத்தப்பட்டு இருந்தது. நீர் கசிவு ஏற்பட வில்லை. பொய்யாக அபாய சங்கு ஊதினர் மலையாளிகள்.

பெரியாறு அணையின் கடல் மட்ட உயரம் 2869 அடி. அந்த அணை உடைந்தால் பாதிக்கப்படும் பகுதிகள் என்று கூறப்படும் இடங்கள் 3500 அடிமுதல் 4750 அடி வரை உயரம் கொண்டவை. இதனால் அணை உடைந்தாலும் அந்த பகுதிகளுக்கு எந்த பாதிப்பும் ஏற்படாது என்று தமிழக அரசு எடுத்துக் கூறியது. இன்னும் பல நூறு ஆண்டுகளுக்கு அணை உடைய வாய்ப்பு இல்லை என்றும் தமிழக வல்லுநர்கள் ஆதாரத்துடன் கூறினர்.

1886 முதல் 1980 வரை பெரியாறு அணைப்பகுதியில் 30 நில நடுக்கங்கள் ஏற்பட்டன. கூடுதல் அதிர்வான 3-7 டெசிபல் அளவு நில நடுக்கம் ஏற்பட்டபோது கூட அணைக்கு எந்த வித பாதிப்பும் இல்லை என்று வல்லுநர்கள் கூறுகின்றனர்.

ஒரு வாதத்திற்காக வைத்துக்கொண்டால் அணை உடைந்தாலும் அதிலிருந்து 15 டி.எம்.சி தண்ணீர்தான் வெளியேற முடியும். இந்த நீரும் 200 கிலோ மீட்டர் தூரம் காட்டு வழியாக இடுக்கி அணைக்கு சென்று விடும். 71 டி.எம்.சி கொள்ளளவு கொண்ட பெரிய இடுக்கி அணைக்கு இந்த நீரினால் எந்த பாதிப்பும் ஏற்பட போவதில்லை என்ற உண்மையை தமிழகப் பொறியாளர்கள் எடுத்துக் கூறியனர்.

பின்னர் 152 அடி நீர் தேக்கினால் குமுளி மூழ்கி விடும் என்று புது பீதியை கிளப்பியது கேரளம். பெரியாறு அணைக்கு நீர் ஓடிவரும் எதிர்த்திசையில் கடல் மட்டத்திலிருந்து 3120 அடி உயரத்தில் உள்ளது குமுளி. நீர் எதிர் திசையில் எப்போதும் பாயாது. மேலும் உயரத்தில் உள்ள பகுதிகளுக்கு பாதிப்பு ஏற்படுத்தாது.

பெரியார் அணைக்கு எதிரான போராட்டத்தை கேரள அரசு சாதகமாக பயன்படுத்திக் கொண்டது. அது நடுவண் நீர் வள ஆணையம் அணையை பார்வையிடுமாறு கோரியது. அப்போது நடுவண் நீர் வள ஆணையத்தின் தலைவராக இருந்தவர் தாமஸ் என்ற மலையாளி. அவர் 1979 அணையை


படிப்பகம்

www.padippakam.com

பார்வையிட்டார். பின்னர் அவர் முன்னிலையில் திருவனந்தபுரத்தில் தமிழக கேரள அரசுகள் பேச்சுவார்த்தை நடத்தின.

தமிழக அரசு சார்பில் அப்போதைய பொதுப்பணித்துறை அமைச்சர் ராஜா முகமது தலைமையில் கலந்துகொண்ட தலைமைப் பொறியாளர் ஜார்ஜ் மாத்யு மலையாளி, பொதுப்பணி துறை பொறியாளர் உன்னிக்கிருஷ்ணன் மலையாளி, பொதுப்பணி துறை செயலாளர் பத்பநாபன் மலையாளி, அப்போதைய மதுரை மாவட்ட ஆட்சியர் சிரியாக் மலையாளி. ராஜா முகமது மட்டுமே தமிழர். நீர் தேக்கும் உயரத்தை 136 அடியாகக் குறைக்க வேண்டும் என்றும் பெரியார் அணையை ரூபாய் பன்னிரண்டு கோடியே 51 லட்சம் செலவில் வலுப்படுத்த வேண்டும் என்றும் ஒப்பந்தம் கூறியது. இதில் ராஜா முகமது கையெழுத்து போடாமல் திரும்பிவிட்டார்.

இருந்தாலும் அணையை வலுப்படுத்தும் வரை 136 அடி உயரத்திற்குத்தான் தண்ணீர் தேக்க வேண்டும் என்றும் அணையை வலுப்படுத்திய பிறகு 152 உயரத்திற்கு தேக்கிக் கொள்ளலாம் என்றும் நீர் வள ஆணையம் பரிந்துரைத்ததை தமிழக அரசு ஏற்றுக்கொண்டு செயல்படுத்தியது.

இதனால் திருப்புவனம், திருப்புத்தூர் பகுதிகளில் 38 ஆயிரம் ஏக்கர் நிலங்கள் தரிசு நிலங்களாயின. 86 ஆயிரம் ஏக்கர் நிலங்கள் ஒரு போக சாகுபடிக்கு மாறின. நீர் வசதி குறைந்ததால் 53 ஆயிரம் ஏக்கர் நிலங்கள் கரும்பு சாகுபடிக்கு மாறின. பெரியாறு மின் நிலையத்தின் மின் உற்பத்தி பாதியாக குறைந்ததுமின்றி ஆண்டில் மூன்று மாதம் மின் உற்பத்தி செய்ய முடியாமல் போனது. மானாமதுரை பரமக்குடி பகுதிகளில் முழுமையாக சாகுபடி பாதிக்கப்பட்டது.

கீழ்வரும் விவரப்படி தமிழக அரசு பெரியாறு அணையை வலுப்படுத்தியது.

### கான்கிரீட் தொட்டி அமைத்தல்

பிரதான அணையின் நீளம் ஆயிரத்து 200 அடி. அதன் மேலே முழு நீளத்திற்கும் 3 அடி அகலம் முற்பகுதியிலும் 6 அடி அகலம் பிற்பகுதியிலும், ஒரு மீட்டர் உயரத்திலும் கான்கிரீட் தொட்டி போன்று அமைத்து 12 அடி அகலமுள்ள அணையின் மேல்பாகம் 21 அடிக்கு அகலப்படுத்தப்பட்டு அணையின் கனபரிமாணம் அதிகரிக்கப்பட்டுள்ளது. இந்த கான்கிரீட் கட்டுமானம் உரிய கம்பிகள் மூலம் பழைய அணைக்கட்டுமானத்துடன் பிணைக்கப்பட்டுள்ளது. இந்த பணிகள் ரூ. ஒரு கோடியே 31 லட்சம் செலவில் முடிக்கப்பட்டது.

### கேபிள் ஆங்கரிங் செய்தல்

அணையின் மேல்மட்டத்தில் இருந்து அடித்தள பாறையினுள் 4 அங்குல விட்டம் உள்ள துளைகளை போட்டு அதனுள் 34 அதிக இழுவிசைத்திறன் உள்ள 7 மி.மீ. அளவுள்ள இரும்பு கம்பிகளை பாறையினுள் செருகி பிணைக்கப்பட்ட பின் 120 டன் இழுவிசை கம்பிகளுக்கு கொடுக்கப்பட்டது. இதே போல் அணையின் நீளவாக்கில் 9 அடி இடைவெளியில் 95 கேபிள் ஆங்கர்கள் பொருத்தப்பட்டன. இழுவிசை கம்பிகள் பொருத்தப்பட்டபின் சிமின்ட் கிரவுட் செய்யப்பட்டது. ஒவ்வொரு துளைமூலமும் 120 டன் இழுவிசையுடன் அணைக்கட்டு பாறையுடன் இணைக்கப்படுவதால் அணை மேலும் வலிமை மிக்கதானது. இந்த பணிகள் ரூ.48 லட்சம் செலவில் முடிக்கப்பட்டது.

### கைபிடி சுவரை உயர்த்துதல்

பெரியாறு பிரதான அணையின் கைப்பிடி சுவரின் மேல்மட்ட உயரம் 158 அடியாகும். இந்தச் சுவரில் மோதும் நீரின் அலைகளை தடுக்க மேலும் 2 அடி உயர்த்தப்பட்டு மேல்மட்டம் 160 அடியாக உயர்த்தப்பட்டது. கருங்கல்லினால் கட்டப்பட்ட இந்த சுவர் பிரதான அணையை அடுத்த சிற்றணைவரை நீடிக்கப்பட்டது. பிரதான மற்றும் சிற்றணைக்கு இடைப்பட்ட பகுதியும் 160 அடி மட்டம் வரை கல்பதிப்பு செய்யப்பட்டது.

### மூன்று கூடுதல் நீர்போக்கி அமைத்தல்

பெரியாறு அணையின் பழைய 10 நீர்போக்கிகளின் வெளிபோக்குத் திறன் வினாடிக்கு 82 ஆயிரம் கன அடியாகும். ஆனால் எதிர்பார்க்கப்படும் உச்சநிலை வெள்ளவரத்து விநாடிக்கு 1 இலட்சத்து 22 ஆயிரம் கனஅடியாக இருப்பதால் கூடுதல் நீரை வெளியேற்ற மூன்று கூடுதல் நீர்போக்கிகள் அமைப்பது அவசியம் என்று தீர்மானிக்கப்பட்டது.

அதன்படி பழைய நீர்போக்கிகளின் இடதுபுறம் இருந்த மண், பாறை அகற்றப்பட்டு 40 அடிக்கு 16 அடி என்ற அளவு வீதத்தில் மூன்று நீர்போக்கிகள் கருங்கல்லால் கட்டப்பட்டன. கான்கிரீட்டிலான மற்றொரு வழிந்தோடியும் கட்டப்பட்டது. புதிய மற்றும் பழைய நீர்போக்கிகளின் முன்பகுதியில் இருந்த தடங்கல்கள் அனைத்தும் அகற்றப்பட்டு புதியதாக வடிவமைக்கப்பட்டன. மூன்று நீர்போக்கிகளிலும் மின் வசதியால் இயங்கக்கூடிய ரேடியல் அடைப்பு சட்டர்கள் பொருத்தப்பட்டன. பழைய வெளிபோக்கிகளின் அடைப்பு சட்டர்களும் பழுதுபார்க்கப்பட்டு மின் வசதியுடன் இயங்க கூடியதாய் மாற்றப்பட்டன. இப்பணிக்கு ரூ.3 கோடியே 52 லட்சம் செலவு செய்யப்பட்டது.

### கான்கிரீட் முட்டுச்சுவர் எழுப்புதல்

இந்தப்பணிதான் பெரியாறு அணைக்கு நிரந்தர பலம் கொடுக்கக் கூடியதாகும். அணையை ஒட்டி பின்புறமாக அடித்தளத்தில் இருந்து 34 அடி அகலத்திற்கு கான்கிரீட் முட்டுச் சுவர் எழுப்பி அதை நடு உயரத்தில் 27.36 அடி அகலத்திற்கு கொண்டு



படிப்பகம்

www.padippakam.com

வந்து பின் அணையின் 145 அடி மட்டத்தில் இணையுமாறு கட்டப்பட்டது. முட்டுச்சுவரின் அடித்தளம் கடின பாறைமேல் அமைக்கப்பட்டு தேவையான இடங்களில் துளையிடப்பட்டு பிணைப்பு கம்பி பொருத்தி சிமிண்ட் கிரவுட் செய்யப்பட்டது.

முட்டுச்சுவர் கட்டுமானத்தினுள் 10 அடி மற்றும் 45 அடி மட்டங்களில் ஆய்வு செய்வதற்காக வடிகால் கேலரிகள் அமைக்கப்பட்டன. அணையிலிருந்து கசியும் நீர் மற்றும் மேல்விசை நீர் இக்கேலரிகளில் சேகரிக்கப்பட்டு 'வி' நாட்ச் எனும் அளவுகோல் மூலம் கணக்கிடப்படுகிறது. இந்தப் பணிக்கு ரூபாய் 8 லட்சத்து 43 ஆயிரம் செலவானது.

## சிற்றணை மற்றும் மண் அணைபலப்படுத்துதல்

பிரதான அணையை கான்கிரீட் முட்டு கொடுத்து பலப்படுத்தியது போல் 240 அடி நீளமுள்ள சிற்றணையும் பலப்படுத்தப்பட்டது. அணை பாதுகாப்பு மற்றும் புனரமைப்புத் திட்டத்தின் கீழ் உலக வங்கி மூலம் கடனுதவி பெற்று ரூ.6 கோடி செலவில் புதிய மூன்று நீர்போக்கிகளில் நீரின் வேகத்தை குறைக்க கான்கிரீட் படிகள் கட்டி நீரை பழைய ஆற்றுப் போக்கில் கலக்க பணிகள் தற்போது நடந்து வருகின்றன. ஏற்கெனவே கருவிதளம் அமைத்தலும், மேல்விசை குறைப்பு துளையும் முடிந்துவிட்டன. மீதம் உள்ள தற்போது நடந்துவரும் ஒருசதவீத பணியும் முடிந்து விட்டால் பெரியாறு அணை தற்போது நவீன தொழில்நுட்ப உத்திகளுடன் பலத்துடன் விளங்கும்.

பெரியாறு அணையை வலுப்படுத்தும் வேலைகள் முடிவடைந்து நடுவண் நீர்வள ஆணையம் பார்வையிட்டு முதல் கட்டமாக 145 அடி உயரம் தண்ணீர் தேக்கலாம் என்றும் பின்னர் 152 அடி உயரத்திற்குத் தண்ணீர் தேக்கலாம் என்றும் சான்று அளித்தது. ஆனால் கேரள அரசு 136 அடிக்கு மேல் தண்ணீர் உயர்த்தக் கூடாது என்று முரட்டுத்தனமாக மறுக்கிறது.

கடந்த 5.4.2000 அன்று திருவனந்தபுரத்தில் தமிழக முதல்வர் கலைஞர் கருணாநிதிக்கும் கேரள முதல்வர் ஈ.கே. நாயனார்க்கும் இடையில் நடந்த பேச்சுவார்த்தை தோல்வி அடைந்தது. 136 அடிக்கு மேல் தண்ணீர் தேக்கக் கூடாது என்று பிடிவாதமாக மறுத்துவிட்டார் ஈ.கே. நாயனார்.

அதுமட்டுமல்ல, பேபி டேம் என்று அழைக்கப்படுகின்ற சிற்றணையில் கைப்பிடிச்சுவர் கட்டுதல் போன்ற எஞ்சியுள்ள சிறு சிறு வேலைகளை முடிக்கவும் தமிழக அரசுக்குக் கேரள அரசு ஒப்புதல் தெரிவிக்கவில்லை.

நாயனார், போகாத ஊருக்கு வழி காட்டும் வகையில், தமிழக வல்லுநர்களும் கேரள வல்லுநர்களும் கொண்ட கூட்டுக்குழு அமைக்கலாம் என்றும் அந்தக்குழு, எத்தனை அடி உயரத்திற்குத் தண்ணீர் தேக்கச் சொல்கிறதோ அத்தனை அடி உயரத்திற்குத் தேக்க அனுமதிக்கலாம் என்றும் ஜனநாயகம் போல் தோன்றுகின்ற ஆனால் எந்த முடிவுக்கும் வரமுடியாத குழு அமைப்பது பற்றி யோசனை கூறினார்.

அதாவது கேரள வல்லுநர்கள், தமிழக வல்லுநர்களின் கருத்தை ஏற்காமல், அணை பலவீனமாக இருக்கிறது என்று ஒவ்வொரு குழுக் கூட்டத்திலும் ஓலம் இட, அக்கமிட்டி எந்த முடிவும் எடுக்க முடியாத நிலை தோன்றும். 136 அடியிலேயே நீர் மட்டத்தை நிலைப்படுத்திக் கொள்ளலாம் என்பது நாயனாரின் உள்நோக்கம்.

> நாயனார், போகாத ஊருக்கு வழி காட்டும் வகையில், தமிழக வல்லுநர்களும் கேரள வல்லுநர்களும் கொண்ட கூட்டுக்குழு அமைக்கலாம் என்றும் அந்தக்குழு, எத்தனை அடி உயரத்திற்குத் தண்ணீர் தேக்கச் சொல்கிறதோ அத்தனை அடி உயரத்திற்குத் தேக்க அனுமதிக்கலாம் என்றும் ஜனநாயகம் போல் தோன்றுகின்ற ஆனால் எந்த முடிவுக்கும் வரமுடியாத குழு அமைப்பது பற்றி யோசனை கூறினார்.

கம்யூனிஸ்ட் கட்சிக்காரர் என்று மட்டும் இல்லை காங்கிரஸ் கட்சிக்காரர் முதல்வராக இருந்தாலும் பெரியாறு அணையில் ஒப்பந்தப்படி தமிழகம் நீர் தேக்கிக் கொள்ள அனுமதிக்கமாட்டார். தமிழனுக்கு இந்திய தேசியம் என்ற கானல் நீர் தான் காட்டப்படுமே தவிர உண்மையான நீரைக் காட்டமாட்டார்கள்.

இந்திய தேசியம் கூட எங்களுக்கு இடுப்புத் துண்டுதான் சர்வதேசியமே எங்களின் முழுப் போர்வை என்று பீற்றிக்கொள்ளும் சி.பி.எம்., சி.பி.ஐ. கட்சிகள் கேரளத்தில், மலையாள தேசிய வெறியின் பக்கம் நின்று கொண்டு தமிழனின் கோவணத் துணியையும் பறிக்க முயல்கின்றன.

இந்த நிலையில் தான் தமிழன் தன் எதிர்காலம் பற்றி சிந்திக்க வேண்டும். கர்நாடகம் காவிரி நீரைத் தடுக்கிறது. ஆந்திரப்பிரதேசம் பணத்தையும் வாங்கிக் கொண்டு தமிழகத்திற்குக் கிருஷ்ணா ஆற்று நீர் தர மனமின்றி இழுத்தடிக்கிறது. கேரளாவோ 999 ஆண்டு ஒப்பந்தத்தைக் காலில் போட்டு மிதித்து, பெரியாறு நீரை மறுக்கிறது.

"என்ன செய்வது இவைகள் தான் தமிழகத்திற்குப் பக்கத்து மாநிலங்களாக இருக்கின்றன" என்று கையைப் பிசைகிறார் கருணாநிதி. இவை பக்கத்து மாநிலங்கள் மட்டும் அல்ல, கருணாநிதியின் அரசியல் பூர்வீகப்படி இவைகள் தாம் இன்பத் திராவிடத்தின் தூண்கள்! மொழியால் தமிழன், இனத்தால் திராவிடன், நாட்டால் இந்தியன் என்று பசப்பி


படிப்பகம்

www.padippakam.com

இன்றைக்கும் இயற்கையான தமிழ்த் தேசியத்திற்குத் துரோகம் செய்யும் 'திராவிட தேசியத்தின்' கிளைகள்தாம் ஆந்திர, கேரள, கர்நாடக மாநிலங்கள்.

எல்லோராலும் வஞ்சிக்கப்பட்ட தமிழனே, இப்பொழுதாவது எண்ணிப்பார்!

உனக்கு நீயே துணை! உன்தமிழ்த் தேசிய இனமே உனக்குத்துணை! காவிரியை இழந்து நிற்கும் தேர்தல் கட்சிகளா பெரியாறு உரிமையை மீட்டுத் தரப்போகின்றன ? கூட்டணி வசதிக்காகக் காவிரி உரிமையைப் பலிகொடுத்து துரோக ஒப்பந்தம் போட்ட கருணாநிதியா பெரியாறு ஒப்பந்தத்தைப் பாதுகாக்கப் போகின்றார்?

ஊழல் புரிவதையும் சந்திர மண்டலத்தில் இடம் கிடைத்தாலும் சசிகலா குடும்பத்திற்கு வாங்கித் தருவதையும் பிறவிக் கடனாகக் கொண்டிருக்கும் ஜெயலலிதாவா, தமிழனின் உரிமைகளை மீட்டுத் தரும் நபர் ? இல்லையில்லை.

பட்டம் பதவிகள் மீது பணத்தின் மீது கண்வைக்காத தமிழர் பட்டாளம் ஒன்று அணிவகுக்க வேண்டும். தேர்தல் பாதை அல்ல; தெருவில் இறங்கும் புரட்சிப் பாதையே நமது பாதை என்று தெளிவு பெறவேண்டும்.

நம்மை வஞ்சிப்பவர்களுக்குத் தக்க பதிலடி கொடுக்கும் தக்க தமிழ்த் தேசிய எழுச்சி பீறிட்டுப் பெருகினால், துரோகங்கள் அதிலே அடித்துச் செல்லப்படும்.

பெரியார்அணை உரிமைமையை மீட்பது மட்டும்அல்ல, தேவிகுளம் பீர்மேடு, நெய்யாற்றங்கரை கொச்சின சித்தூர் போன்ற தமிழக எல்லைகளை மீட்பதும் நமது பணியாகும்!

தமிழ் மக்களுக்கு நமது தாழ் நிலையின் காரணங்களை விறக்குவோம். மூர்க்கர்களை ஒடுக்க மூக்கணாங்கயிரற்ற காளை களாய்ப் பாய்வோம். பெரியாறு அணையில் 152 அடி நீர் தேக்கி தென்மவாட்ட மக்களின்வயிற்றில் பால்வார்க்க உறுதியேற்போம்!

புள்ளிவிவரங்கள்: தினமீலர்

**நிருபர்:** உங்க கூட்டணி கட்சி மூணு எடத்துலேயும் தோல்வி அடைஞ்சதுக்கு தேர்தல் கமிசன் தான் காரணம்னு ஏன் சொல்றீங்க?

**சங்கரய்யா:** சமத்துவமா, நேர்மையா இல்லாம ஆளுங்கட்சிகாரங்கள மட்டும் கள்ள வோட்டு போட அனுமதிச்சதுதான் காரணம்.

கு. இராமகிருட்டினன்.

## உப்பு விற்பனையில் திறந்த சந்தை: தமிழ்நாட்டு உப்புக்கு ஆபத்து

உப்பு விற்பனையைப் பொறுத்தவரை இந்தியா பல்வேறு மண்டலங்களாகப் பிரிக்கப்பட்டு, ஒவ்வொரு மண்டலத்திலும் உள்ள உப்பு அந்தந்த மண்டலத்திற்குள்ளேயே விற்பனையாவது என்று வரம்பு கட்டப்பட்டிருந்தது. அதன்படி சென்னை மண்டலத்தில் தமிழ்நாடு, ஆந்திரா, கேரளா, கர்நாடகா, ஒரிசா, பீகார் ஆகியவை அடங்கும்.

குஜராத்திற்கு அடுத்த நிலையில் தமிழ்நாடு உப்பு உற்பத்தியில் இரண்டாம் இடத்தில் உள்ளது. சென்னை மண்டலத்தில் குஜராத் உப்பு வரமுடியாது என்பதால், இம்மண்டலத்திலுள்ள மாநிலங்களில் தமிழ்நாட்டு உப்பே அதிகம் விற்பனையாகி வந்தது.

இப்போது மார்ச் மாதத்திலிருந்து இந்த மண்டல முறை கைவிடப்பட்டு, இந்தியா முழுவதும் ஒரே மண்டலமாக - திறந்த சந்தையாக மாற்றப்படும் என தில்லி அரசு அறிவித்துள்ளது.

ஏற்கெனவே தமிழ்நாட்டில் அயோடின் கலக்கும் ஆலையை வைத்து அதன் மூலம் தமிழ்நாட்டு உப்பு என்ற பெயரில் சேட்டுக்களும், வெள்ளைக்காரர்களும் உப்புத் தொழிலை ஆக்கிரமித்து விட்டனர். இப்போது திறந்த சந்தை என்று வந்தால் குஜராத் உப்பு தங்குத் தடையின்றி நுழையும். இதனால் தமிழ்நாட்டில் தமிழர்களின் உப்புத் தொழில் மேலும் நலிவடையும் ஆபத்து நெருங்கியுள்ளது.

## தீண்டாமைக் குற்றவாளியைக் கைது செய்!

### த.தே.பொ.க. ஆர்ப்பாட்டம்

பூதலூர் ஒன்றியம் முத்து வீரக் கண்டியன் பட்டியில் தமிழக மாணவர் முன்னணித் தோழர் சுரேஷ் கண்ணனையும் மற்றும் பானுமதி என்பவரையும் ஆவாரம்பட்டி பா. ரவிச்சந்திரன் தலைமையில் சாதிவெறிக் கும்பல் அடித்ததுடன் அவர்களின் சாதியைச் சொல்லி திட்டி இழிவுபடுத்தினார்கள்.

இது தொடர்பாக வன்கொடுமைத் தடுப்புச் சட்டத்தின்கிழ் வழக்குப் பதிவு செய்திருந்தாலும் முக்கியக் குற்றவாளிகளைக் காவல் துறையினர் கைது செய்யவில்லை.

ரவிச்சந்திரனையும் மற்றும் குற்றவாளிகளையும் கைது செய்யக் கோரி பூதலூரில் 7.3.2000 அன்று த.தே.பொ.க. சார்பில் மாபெரும் கண்டன ஊர்வலமும் ஆர்ப்பாட்டமும் நடந்தது.

இறுதியில் தோழர்கள் பெ. மணியரசன் க.பழநிமாணிக்கம், குழ.பால்ராசு ரெ.கருணாநிதி வழக்குரைஞர் முருகேசன், அருள்தாஸ் ஆகியோர் கண்டன உரையாற்றினர்.

கண்டன ஊர்வலம் முடிந்த சில நாட்களுக்குப் பிறகு மேற்படி ரவிச்சந்திரனைக் காவல் துறையினர் கைது செய்து சிறையிலடைத்தனர்.



படிப்பகம்

www.padippakam.com

ஓவியம்

# வண்ணப் பூச்சு அல்ல! வண்ண வீச்சு!

உணர்ச்சிக் கவிஞர் காசி ஆனந்தன்

அன்று வாழ்ந்த ஓவியனைப் போல், இந்த உலகத்தில் சிலவற்றை தீட்ட, இன்றுள்ள ஓவியர்களுக்கு உரிமையில்லை. அழகான மலர்கள்,பறவைகள், மரங்கள், அழகான இயற்கைக் காட்சிகள், ஆகியவற்றைக் கொண்ட உலகம் இன்று இல்லை, மரங்கள் எல்லாம் வெட்டிச் சாய்க்கப்படுகின்றன. உட்கார கிளைகள் இல்லாமல் வானத்தை அண்ணாந்து பார்த்து ஏக்கத்தோடு வட்டமிடுகின்றன பறவைகள்.

நல்ல கொழுத்த சதைப்பிடிப்புள்ள மோனலிசாவை அன்று லியனார்டோ டாவின் சி வரைந்து விட்டுப் போயிருக்கலாம். இன்று அப்படிக் கொழுத்த சதைப்பிடிப்புள்ள பெண்ணை வரைய ஓவியனுக்கு உரிமையில்லை. இன்று பார்க்கிறீர்கள், சோமாலியாவில் எலும்பும் தோலுமாக, பிள்ளைக்குப் பால் கொடுக்கக் கூட முடியாமல், வற்றிப்போன மார்போடு இருக்கிறாள் அந்தப் பெண். அவள் வாழுகின்ற காலத்தில் மோனலிசாவை வரைய ஓவியனுக்கு உரிமையில்லை. அப்படி வரைகிறவன் ஓவியனாக இருக்க முடியாது.

உலகத்தில் பெண்கள், வன்முறையாளர்களால், பாலியல் வன்முறைக்குட்படுத்தப்பட்டு, வீதிகளில் வீசப்படுகின்ற, எரியூட்டப்படுகின்ற, காலத்தில் அருமையான அழகான பெண்களின் ஓவியங்களை தீட்டிக் கொண்டிருக்க முடியாது. அப்படிப்பட்ட அழகிய ஓவியங்களுக்கு இன்று தேவையில்லை.



இந்த அடிப்படையில் தான் நான் ஓவியர் புகழேந்தியைப் பார்க்கிறேன். அவரது தூரிகையில் வடிவெடுத்த இருபதாம் நூற்றாண்டைப் பார்க்கிறேன்.

நல்ல கொழுத்த சதைப்பிடிப்புள்ள மோனலிசாவை அன்று லியனார்டோடாவின்சி வரைந்து விட்டுப் போயிருக்கலாம். இன்று அப்படிக் கொழுத்த சதைப்பிடிப்புள்ள பெண்ணை வரைய ஓவியனுக்கு உரிமையில்லை. இன்று பார்க்கிறீர்கள், சோமாலியாவில் எலும்பும் தோலுமாக, பிள்ளைக்குப் பால் கொடுக்கக் கூட முடியாமல், வற்றிப்போன மார்போடு இருக்கிறாள் அந்த பெண்.

ஒடுக்குமுறைகளின் நூற்றாண்டாக, ஒடுக்குமுறைகளை எதிர்த்து மிதிக்கின்ற நூற்றாண்டாக, இருபதாம் நூற்றாண்டைப் புகழேந்தி பார்க்கிறார்.

வல்லாண்மை மிக்க நாடுகள் தங்களுக்குள் மோதிக் கொண்ட நிகழ்வுகள், அவை சின்னஞ்சிறு நாடுகள் மீது பாய்ந்து அந்த மக்களை ஒடுக்கிய நேரத்தில் வெடித்த உணர்வுகள், வியட்நாமின் மைலாய் காட்சிகள், புகழேந்தியின் மனத் திரையில் விரிகின்றன.

அடிமைப்படுத்தப்பட்ட நாட்டு மக்கள் விடுதலைக்காய் மூர்க்கமாய் எழுந்த காட்சியைக் காட்ட சுபாஸ் சந்திரபோஸ், காந்தி போன்றவர்களை அவர் படைத்திருக்கிறார். அதே போன்று ஒரு தேசிய இனம், இன்னொரு தேசிய இனத்தை ஒடுக்கும் போது அதை எதிர்த்துப் போரிடுகின்ற குர்திஷ் மக்கள் போராட்டம், சிங்கள தேசிய இன வெறியின் கொலை வெறியை எதிர்த்து, களத்தில் நிமிர்ந்து நின்று வீர நடை போடுகின்ற மாவீரன் தலைவர் பிரபாகரனின் ஓவியம், சிந்தையைக் கவர்கின்றன.

கருப்பல், வெள்ளையன் என்ற நிற ஒடுக்குமுறை 20 ஆம் நூற்றாண்டில் தலை விரித்தாடிற்று. அதைக் காலடியில் போட்டு மிதித்து, அதை உடைத்து வெளியே வந்த கருப்பு



படிப்பகம்

www.padippakam.com

வெளிச்சமாக நெல்சன் மண்டேலாவை வரைந்திருக்கிறார்.

அதே போன்று, தனித்தனி நாடுகளில் அல்லாமல் உலகம் அனைத்திலும் ஒடுக்கப்பட்டு ஆண்களின் கால்களில் மிதிபட்ட பெண்களின் எழுச்சியை ஒரு ஓவியத்தில் காட்டியிருக்கிறார்.

**எல்லோரும் வண்ணத்தைப் பூசுகிறார்கள். புகழேந்தி வண்ணத்தை வீசுகிறார்.**

ஓவியர் புகழேந்தியின் 20 ஆம் நூற்றாண்டு ஒடுக்குமுறைகளை எதிர்த்து நிமிர்ந்த நூற்றாண்டு. இங்கே நாம் கலைஞனைப் பார்க்க முடிகிறது. ஒரு கலைஞன் அப்படித்தான் இருப்பான். இன்று இருக்கிற உலகத்தில் நிலவை ஓவியம் தீட்ட எந்த ஓவியனுக்கும் உரிமையில்லை. ஆம்ஸ்ட்ராங்கின் பாதச் சுவட்டை படமாக்குவதற்காக நிலவையும் பதிவு செய்ய நேர்ந்தது புகழேந்திக்கு. பூவை படமாக்க எந்த ஓவியனுக்கும் இன்று உரிமையில்லை. சிங்கள இனவெறிக்கு பலியாகி புதைக்கப்பட்ட மனிதர்கள் விதைக்கப்பட்ட விதையாக முளைத்து செடியாகிப் பூத்துள்ள மனிதப் பூக்களை வரைந்திருக்கிறார் புகழேந்தி.

போர்க்குணம் என்றைக்கும் பாதுகாக்கப் படவேண்டிய ஒன்றாகும். உலகம் தோன்றிய காலம் முதல் அறத்திற்கு எதிராக கயமைகள் தலைவிரித்து ஆடுகின்றன. அவற்றை எதிர்நோக்கும் போர்க்குணம் மாந்தனுக்கு தேவைப்படுகிறது. தமிழகத்தில் ஓவியர்கள் காலம்காலமாக, சங்க காலம் தொடங்கி இந்தப் போர்க்குணத்தை ஓவியங்களிலும், சிற்பங்களிலும் பாதுகாத்து வந்தார்கள். குறிஞ்சி நிலத் தெய்வமான முருகன் கையில் வேலைக் கொடுத்தார்கள். அது பின்னர் நடுத்தர மற்றும் மேல்மட்ட மக்களின் தெய்வமாயிற்று. ஆனால் கீழே கிடந்தானே, ஒடுக்கப்பட்டு மிதிக்கப்பட்டு கிடந்தானே ஒரு தமிழன், உண்மைத் தமிழன், பழைய தமிழன், அந்த வழிவழி வந்த பண்பாடு கெடாமல் அவனுடைய திருத்தெய்வங்கள் சினத்தை கொப்பளிக்கின்ற நீண்ட கண்களோடு காட்சியளிக்கின்றன. அவனுடைய பெண் தெய்வம் கோபக் கனல்கக்கும் பெரிய கண்களுடன் முண்டகக்கண்ணி அம்மனாக காட்சியளிக்கிறாள். டாலி என்றும் பிக்காஸோ என்றும் நவீன ஓவியங்கள் குறித்து அவை அங்கே தோன்றியதாக பேசுகிறார்களே. அவை எல்லாம் நம்முடன் தோன்றியவைதான்.

ஒன்றை மிகைப்படுத்துவது மிகையியல்பியல் (**Surrealism**). ஒரு விலங்குத் தலையோடு மனித உருவம், பத்து கைகளோடு காளி, என வரையப்பட்ட கடவுளர்களின் ஓவியங்கள் இந்த வகைப்பட்டவை. இத்தனை கைகள் எதற்கு என்று கேட்கலாம். கொடுமைகளை ஒழிக்க அத்தனை வலிமை தேவை என்பதற்கான குறியீடு அது. நான் இங்கு கடவுள் பற்றியும் சமயம் பற்றியும் பேச வரவில்லை. ஒரு ஓவியன் ஒரு கருவை கொடுக்கும்போது என்ன சிந்தித்தான் என்று சொல்ல வருகிறேன். ஒரு கருப்பனுக்கு சாமி வடிவம் கொடுத்து அவன் கையில் ஒரு கத்தியைக் கொடுத்து வைத்தார்கள். அந்த போர்க்குணம் காலம் காலமாக இந்த மண்ணில் இருந்து வருகிறது.

புகழேந்தியின் ஓவியங்களில் வேல் போன்ற ஆயுதங்களைப் பார்க்காவிட்டாலும் அவற்றில் போர்க்குணத்தைப் பார்க்கிறீர்கள். தஞ்சையில் உட்கார்ந்து கொண்டு தமிழகத்தை மட்டுமல்லாமல் உலகம் முழுவதையும் உற்றுப்பார்த்திருக்கிறார். பக்கத்தில் ஈழத்தில் 70,000 தமிழர்கள் சிங்களர்களால் கொல்லப்பட்டு புதையுண்டு போயிருக்கிறார்கள். 2000 பெண்களுக்கு மேல் கற்பழிக்கப்பட்டு வீசி எறியப்பட்டிருக்கிறார்கள். தமிழர் இரத்தம் நீரோடையாகப் பாய்கிறது. புகழேந்தி, வெளியுலக கொடுமைகளைப் பார்த்து வரைந்ததைப் போல, வெளியுலகில் இருந்து ஈழக் கொடுமையைப் பார்த்து யாராவது வரைந்திருக்கிறார்களா? இதை நான் எண்ணிப் பார்த்ததுண்டு; பெருமூச்சு விட்டதுண்டு.

ஆனால் ஒரு ஆறுதல். அமெரிக்காவில் இருந்து வருகிற 'டைம்' இதழ், இன்று பிரபாகரன் அவர்களைப் போல்பாட் என்றும் காட்டுமிராண்டி என்றும் பயங்கரவாதி என்றும் வக்கிரமாக வர்ணித்து வருகின்ற 'இந்து' பத்திரிக்கையை விட உலக செல்வாக்கில் குறையாத ஒரு இதழ். அந்த இதழை நான் ஆதரிக்கிறவன் அல்ல. அது அமெரிக்காவின் ஏடு. அதன் கொள்கைகள் வேறு என்பது எனக்குத் தெரியும்.

இருந்தாலும் அந்த 'டைம்' இதழ் 20 ஆம் நூற்றாண்டைப் பற்றி சிந்தித்துப் பார்த்து; கிழக்காசியாவின் தலைசிறந்த தலைவர்கள் வரிசையில் காந்தி, சுபாஷ் சந்திரபோஸ், ஹோச்சிமின், மாசேதுங் என்று அடுக்கிக் கொண்டே வந்து பிரபாகரன் பெயரையும் அவர்கள் வரிசையில் சேர்த்துக் கிழக்காசியாவின் மிகப் பெரும் தலைவன் என்று பிரபாகரனை அறிவித்துள்ளது. உண்மையிலேயே நெஞ்சில் பெருமை பூக்கிறது.

அமெரிக்க நாடு விடுதலைப் புலிகளைப் பயங்கரவாதிகள் என்று கூறி அவர்கள் அமைப்பைத் தடை செய்துள்ளது. ஆனால் அந்த நாட்டில் இருந்து வரும் ஒரு இதழ் புலிகளின் தலைவரை கிழக்காசியாவின் மிகப்பெரிய தலைவர் என்று அறிவித்திருக்கிறது. நூறு ஆண்டுகளுக்குப் பிறகு ஒரு தமிழன் உலகத்தின் கண்ணில் பட்டிருக்கிறான். அது நமக்கு பெருமை. அந்தத் தலைவனை - பிரபாகரனை ஓவியர் புகழேந்தி வரைந்திருக்கிறார். அவரை மனமாரப் பாராட்டுகிறேன்.

வண்ணங்களை தேர்ந்தெடுப்பதில் கூட ஒரு போர்க்குணம் தெரிகிறது புகழேந்தியிடம். பலரையும் கவரும் பச்சை வண்ணத்தை, மனோரம்மியமான நீல வண்ணத்தை அதிகம் பயன்படுத்தவில்லை அவர். சோகத்தை வெளிப்படுத்தும் கருப்பு, போர்க்குணத்தை வெளிப்படுத்தும் சிவப்பு ஆகிய வண்ணங்களே அதிகம் பயன்படுத்தப்பட்டிருக்கின்றன.

**எல்லோரும் வண்ணத்தைப் பூசுகிறார்கள். புகழேந்தி வண்ணத்தை வீசுகிறார்.**

**(தஞ்சையில் 25.3.2000 அன்று ஓவியர் புகழேந்தியின் "உறங்கா நிறங்கள்" ஓவியக் கண்காட்சித் திறப்பு விழாவில் ஆற்றிய உரை)**

தொகுப்பு கு.லெனின்



படிப்பகம்

www.padippakam.com



# "சாதி குறித்த சமூகவியல் பார்வை..."

- கி.வெ.

தோழர் ஏபி. வள்ளிநாயகம் எழுதியுள்ள இந்நூல் 'அம்பேத்கர் சிந்தனை' வெளிச்சத்தில் இந்திய வரலாற்றை விளக்குகிற நூலாகும். "புரட்சியாளர் அம்பேத்கர் பிறந்தநாள் வெளியீடாக" கடந்த 1999, ஏப்ரல் 14 அன்று இந்நூல் வெளியிடப்பட்டுள்ளது.

இந்தியத் துணைக் கண்ட வரலாற்றில் பார்ப்பன சூழ்ச்சியால் விளைந்த கேடுகளையும், பார்ப்பனியத்தால் நேர்ந்த பேரழிவுகளையும் ஆதாரத்தோடும், ஆவேசத்தோடும் எடுத்துக் காட்டுகிறது இந்நூல். இதற்கு எதிரான - மனித உரிமைக்குப் போராடிய சிந்தனை மரபாக புத்தர், புலே, அம்பேத்கர், அயோத்தி தாசப்பண்டிதர், இரட்டைமலை சீனிவாசனார், பெரியார் ஆகியோர் சிந்தனைகளை முன் வைக்கிறார் ஆசிரியர்.

விலங்கிலிருந்து மனிதகுலம் தோன்றியதையும் அதன் வரலாற்று வளர்ச்சியையும் வரலாற்றியல் பொருள்முதல்வாத வழிநின்று விளக்குவதோடு இந்நூல் தொடங்குகிறது. இந்தியத் துணைக் கண்டம் முழுதும் ஒரு காலத்தில் திராவிடர்கள் - நாகர்கள் - தாசர்கள் என்றழைக்கப்பட்ட இந்த மண்ணின் மைந்தர்களின் ஆளுகையில் இருந்தது என்று விளக்குகிறார் வள்ளிநாயகம்.

இங்கு வேளாண்மை செய்து, சுட்ட செங்கற்களால் கட்டப்பட்ட வீடுகளில் நிலைத்த சமூகமாக வாழ்ந்த திராவிடர்களை, வெளியிலிருந்து படையெடுத்து வந்த ஆரியர்கள் தமது ஆயுத வலிமையாலும், சூழ்ச்சித் திறனாலும் வீழ்த்தியதை இந்நூல் விளக்குகிறது. ஆரியர்கள் அணைக்கட்டுகளை உடைத்து ஊர்களை மூழ்கடித்தார்கள், வேளாண்மையை அழித்தார்கள். (பக்கம் 49)

மனு தர்மம் எப்படி வர்ண அநீதியை போதிக்கிறது என்பது ஆதாரத்தோடு விளக்கப்படுகிறது..

"உயிரோடு தழைத்து வளர்ந்துள்ள மரங்களை அக்னி தனது அதிகமான எரி சக்தியால் சுட்டெரித்து உட்கொள்வது போல், வேதம் அறிந்த பிராமணன் தனது சொந்த பாவங்களை சுட்டெரித்துக் கொண்டு விடுகிறான்." (மனு - XII 10)
சத்திரியன் தனது தொழிலைப் பின்பற்றத் தவறினால், பிணம் தின்னும் "கதபுதானா" வாக மாறிவிடுவான். வைசியன் தனது தொழிலைப் பின்பற்றத் தவறினால் புண்ணின் சீழ்களைத் தின்னும் 'மைத்ராக்ஷாஜயாதிகா' வாக மாறிவிடுவான். சூத்திரன் தனது அடிமைத் தொழிலை செய்யத் தவறினால் பேன்களைத் தின்னும் 'சைலா ஷகா' வாக மாறிவிடுவான் (மனு XII 70-71).

"சண்டாளர்களின் குடியிருப்புகள் கிராமத்திற்கு வெளியேதான் இருக்க வேண்டும். அவர்கள் இரந்து உண்பவர்களாக ஆக்கப்படவேண்டும்" (X-51). செத்தவர்களின் ஆடைகளையே அவர்கள் உடுத்த வேண்டும். உணவினை உடைந்த சட்டிகளிலேயே சாப்பிட வேண்டும். துருபிடித்த இரும்பு ஆபரணங்களையே அணிதல் வேண்டும் (X-52) (நூல் பக்கம் 59)

இவ்வளவு கொடுமையான மனித விரோத மதம் உலகில் வேறெதுவும் இருக்குமா என்பது ஐயமே.

பண்டைய கூட்டுச் சமூகம், அடிமை உடைமைச் சமூகம், நிலக்கிழமை சமூகம், முதலாளிய சமூகம், சோசலிச சமூகம் என்ற மனித சமூக வளர்ச்சி நிலைகளை மார்க்சியம் கண்டறிந்துள்ளது. இதே படிநிலை வழிகளில் இந்தியத் துணைக் கண்ட சமுதாயம் வளர வில்லை என மார்க்சிய அறிஞர் டி.டி. கோசாம்பி கூறுவதை நூலாசிரியர் எடுத்துக்காட்டுகிறார். அதே நேரத்தில் இதனை "ஆசிய சமூகம்" என்று காரல் மார்க்ஸ் வரையறுப்பதும் சரியல்ல; இது "பார்ப்பனிய சமுதாயம்" என்பதே சரி என்று வள்ளிநாயகம் வாதாடுகிறார். (பக்கம் 86) இதனால்தான் "சமுதாயத்தேக்கம் ஏற்பட்டு, அதன் காரணமாக முதலாளியம் இங்கு உருவாகாமல் செய்தது. எனவே, முதலாளிய சமுதாயத்தை தேசங்களாக மாற்றி அமைக்கும் வரலாற்றுப் பணி இத்துணைக் கண்டத்தில் நடைபெறவில்லை" என்கிறார். (பக்87)

இந்தப் பார்ப்பனிய சமூக அமைப்புக்கு சவாலாக புத்த மதம் எழுச்சி பெற்றதை இந்நூல் விளக்குகிறது.

"வேத ஆட்சியில் ஒரு சூத்திரன் பார்ப்பனனாக ஒருபோதும் ஆசைப்பட முடியாது. ஆனால் பிக்குவாக மாறிப் பார்ப்பனரின் அந்தஸ்து மற்றும் மதிப்பு மட்டத்தை அடைய முடியும். பார்ப்பனர்களின் அடிப்படையான ஒழுங்கு சூத்திரர்களுக்கு மூடப்பட்டு இருந்த போது, அவர்கள் பவுத்தத்தில் பிக்குகளாக மாறியதன் மூலம் தாங்கள் விரும்பியதை அடைந்தார்கள். பெண்கள் விசயத்திலும் இதைப்போன்று மாற்றம் ஏற்பட்டது. பவுத்த ஆட்சியில் பெண் ஒரு சுதந்திரமானவள். திருமணம் அவளை அடிமைப்படுத்துவதில்லை (பக்101).

புத்தமதத்தை வீழ்த்தும் நோக்கோடு பார்ப்பனர்கள் தாவர உண்ணிகளாக மாறியதையும், 'பசு வணக்கம்' என்பதை முன் வைத்ததையும் நூல் விளக்குகிறது. மாட்டிறைச்சி உண்ணும் இந்த மண்ணின் மைந்தர்களை தூய்மையற்றவர்கள் என்று தீண்டாமைக்குள் தள்ளவும் இது பயன்பட்டது.

தீண்டாமை என்பது வரையறுக்கப்பட்ட வடிவில் வேரூன்றியது கி.பி.7-ஆம் நூற்றாண்டில்தான் என்பது நூலாசிரியரின் முடிவு. இதற்கு ஆதாரமாக சீனப் பயணி யுவான்-சுவாங் கி.பி. 629ல் எழுதிய குறிப்பை எடுத்துக் காட்டுகிறார். இறைச்சிக் கடைக்காரர், மீனவர், பொதுப்பணியாளா, தூக்கிலிடுவோர், நகரசுத்தித் தொழிலாளா ஆகியோரின் வாழிடங்கள் நகரத்திற்கு வெளியே தனித்து வைக்கப்பட்டிருந்ததை யுவான்-சுவாங் குறிப்பிடுகிறார்.



படிப்பகம்

www.padippakam.com

பெரும்பான்மை மக்களுக்கு விரோதமான- இறுக்கமான இந்துமதம் / பார்ப்பனியம் எல்லா மாற்றங்களையும் தனக்கேற்ப மாற்றி உட்கொண்டு இன்றுவரையில் தனது ஆதிக்கத்தை நீடித்து வைத்திருப்பது ஒரு வகையில் வியப்பாகவே இருக்கும்.

பார்ப்பனியம் இன்று வரை மீண்டும் மீண்டும் புத்துயிர் பெறுவதற்கு "புலால் மறுத்தல், அகமண முறை, பெண்ணடிமைத்தனம், உழைப்பை வெறுப்பது, சிறு தெய்வங்களை மறந்து, புரோகிதத்தில் பார்ப்பனரை அழைப்பது, ஆதிக்க வர்க்கத்திடம் அடிபணிந்து போவது, மொழி - இனப் பற்றில்லாமல் இருப்பது" ஆகியவற்றைக் காணரங்களாக வள்ளி நாயகம் வரையறுக்கிறார். (பக் 154)

பெண்ணடிமைத்தனத்திற்கும் பார்ப்பனியத்திற்கும் இருக்கும் உறவுக்கு ஆதாரமாக மனு ஸ்மிருதியிலிருந்து பலவற்றை எடுத்துக் காட்டுகிறது இந்நூல் (பக் 168,169) பெண்களை சலன புத்தியுள்ளவர்கள் என்றும் நேர்மையற்ற தீய நடத்தை உள்ளவர்கள் என்றும், மகள், மனைவி, தாய் ஆகிய அனைத்து நிலைகளிலும் அவர்கள் ஆணுக்குக் கட்டுப்பட்டவர்கள் என்றும் மனு தர்மம் கூறுகிறது.

உடல் அசைவுகள் மூலம் கூட அடிமைத்தனத்தை நிலை நிறுத்துவதில் மனுசாஸ்திரம் கவனமாக இருந்திருப்பதை நூலாசிரியர் சுட்டிக் காட்டுகிறார். "தீண்டத்தகாதோர் மற்றவர்கள் காலில் விழ வேண்டும் என்றும், துண்டை இடுப்பில் கட்டக் கூடாது என்றும், நெஞ்சை நிமிர்த்தி நேராக நிற்கக் கூடாது என்றும் உயர்சாதிக் காரனிடமிருந்து தூரத்தில் நிற்க வேண்டும் என்றும்" வலியுறுத்துகிறது மனுவாதம்.

தீண்டாமையைக் கடைபிடிப்பதில் இடைநிலை சாதிகள் தீவிரம் காட்டுவதை நூலாசிரியர் கண்டிக்கிறார். "பிறபடுத்தப்பட்டவர்களின் சாதி வெறியின் முன்னே புரட்சியாளர்கள் புத்தரும், புலேவும், பெரியாரும் தோல்வியாளர்களாகவே முடிந்து போயிருக்கிறார்கள்" என்று அங்கலாய்க்கிறார்.

சமூகம் அடுத்தக் கட்டத்திற்குப் பாய்ந்து முன்னேறுவதற்கு எல்லாவகையிலும் தடையாக பார்ப்பனியம் இருப்பதை இந்நூல் தெளிவுபடுத்துகிறது. பார்ப்பனியத்திற்கும் பெண்ணடிமைத்தனத்திற்கும், பார்ப்பனியத்திற்கும் வர்க்கச் சுரண்டலுக்கும் உள்ள உறவுகளை இந்நூல் சுட்டிக் காட்டுகிறது என்றாலும், பால் ஒடுக்குமுறை, வர்க்கச் சுரண்டல் ஆகியனபற்றி பன்முகப் பார்வை இதிலே வெளிப்படவில்லை.

பார்ப்பனியத்தின் நவீனமுகம் அரசியல் முகம் "இந்திய தேசியம்" என்பதை நூலாசிரியர் சுட்டிக்காட்டக் கூட இல்லை.

பால் ஒடுக்குமுறை, வர்க்கச் சுரண்டல், தேசிய இன ஒடுக்குமுறை ஆகியவற்றிற்கு பார்ப்பனியம் தாண்டிய வேறு சில காரணிகளும் இருக்கவே செய்கின்றன. அவற்றை தோழர் வள்ளி நாயகம் கணக்கிலெடுத்துக் கொண்டதாகத் தெரியவில்லை.

பொருளாதார விடுதலை, பெண் விடுதலை, தேசிய இன விடுதலை ஆகியவற்றுக்கு சாதி ஒழிப்பே மையமானது (பக்69) என்று அவர் கூறுகிறார். இது ஒருவகை 'சாதிச் சுருக்கவாத'மாகும். சமூக இயங்கியலை ஒரு கோணத்திலிருந்து மட்டுமே பார்ப்பதாக இது அமைந்து விடுகிறது.

இந்நூலில் சில இடங்களில் மொழி நடை நெருடுகிறது. எடுத்துக்காட்டாக, "அவளது பாலியலை ஆண் எதிர்கொண்டு, பெண்ணைத் தனது ஆன்ம சக்தி விரிப்புக்குரிய யோக அப்பியாசப் பொருளாக உபாசனை செய்வது வலியுறுத்தப்பட்டது" ( பக் 167)

இப்படி சிற்சில குறைபாடுகள் இருந்தாலும் இந்நூல் பார்ப்பனிய எதிர்ப்பு முகாமிற்கு கிடைத்துள்ள நல்லதொரு நூலாகும். நூலாசிரியர் தோழர் வள்ளி நாயகத்திற்கு நமது பாராட்டுகள்.

| | |
|---|---|
| நூல் : | "மானுடத்தில் அழகானவர்கள் தீண்டத்தகாதவர்கள்...." |
| ஆசிரியர் : | ஏபி. வள்ளி நாயகம் |
| வெளியீடு: | ஜீவசகாப்தன் பதிப்பகம்<br>11-13/124, ஜீவா இல்லம்<br>அலமேலு நகர், ச. ஆலங்குளம்<br>மதுரை - 625 014. |
| விலை : | ரூ.68/- |

## தமிழக இளைஞர்களின் எதிர்காலம்....!

மார்ச் 23, பகத்தசிங் நினைவு நாளை முன்னிட்டு பண்பாடு, விவசாயம், தொழில், மற்றும் அரசியல் துறைகளில் தமிழக இளைஞர்களின் எதிர்காலம் குறித்து தமிழக இளைஞர் முன்னணி சார்பில் தஞ்சையில் தமிழக இளைஞர்களின் எதிர்காலம் என்ற பொருளில் சிறப்பான கருத்தரங்கம் நடைபெற்றது. தோழர் நா. வைகறை (பொதுச் செயலாளர், த.இ.மு) தலைமை தாங்கினார். தோழர் ச. மணிவண்ணன் (மையக்குழு, த.இ.மு) பண்பாடு குறித்தும், வழக்குரைஞர் இரா. பாண்7டியன் விவசாயம் குறித்தும், தோழர் ரெ. சிவராசு (மாவட்டத் தலைவர், த.இ.மு.) தொழில் மற்றும் வேலைவாய்ப்பு குறித்தும் தோழர் சா. பேகன் (மாவட்டக் குழு, த.தே.பொ.க.) அரசியல் குறித்தும் கருத்துரையாற்றினர்.

தோழர் பெ. மணியரசன் (பொதுச் செயலாளர், த.தே.பொ.க) சிறப்புரையாற்றினார். முன்னதாக தோழர் ப.சந்திரசேகர் (மாவட்டக்குழு த.இ.மு.) வரவேற்புரையாற்ற, இறுதியில் தோழர் த. திலகர் (மாவட்டக் குழு, த.இ.மு) நன்றி கூறினார்.

நிகழ்ச்சியில் தொடக்கமாக தோழர்கள் கோவி.கணேசன், அருள் முருகானந்தம் ஆகியோர் கிராமியப் பாடல்களைப் பாடினர்.



படிப்பகம்

www.padippakam.com

# பெரிய வெள்ளி ஒப்பந்தம் திரிசங்கு சொர்க்க நிலையில்!

**சுரேஸ் தர்மா**

நார்வேயின் சமாதான முயற்சிபற்றி நாம் மூச்சுக்கு மூச்சு பேசிக் கொண்டிருக்கும் இந்நேரம் சுமார் இரண்டு வருடங்களுக்கு முன் செய்யப்பட்ட வட அயர்லாந்து ஒப்பந்தம் தனது மூச்சை முற்றாக நிறுத்துகின்ற நிலையை அடைந்துள்ளது.

தமிழீழத்தை ஒத்த சில அம்சங்களையுடைய வட அயர்லாந்தின், பெரிய வெள்ளி ஒப்பந்தமானது மூர்ச்சையாகி போயிருக்கும் நிலையானது எமக்கு ஏதோ ஒரு செய்தியை சொல்லாமல் சொல்கிறது. அதாவது சிறீலங்கா அரசுடனான எமது சமாதானப் பேச்சுவார்த்தை மிக அவதானமாகக் கையாளப்பட வேண்டிய ஒரு விடயம் என்பதே அது.

சரி, அப்பிராந்தியத்தில் என்ன தான் நடந்தது? என்ன நடந்து கொண்டிருக்கிறது என்பதைப் பார்ப்போம்.

கடந்த மாதம் 27ம் திகதி வட அயர்லாந்தின் டப்ளின் நகர பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற சின்பெய்ன் சிறப்பு மாநாட்டில் உரையாற்றிய சின்பெய்ன் தலைவர் ஜெரி அடாம்ஸ் பெரிய வெள்ளி **(Good Friday Peace Agreement)** ஒப்பந்தம் கிழித்தெறியப்பட்ட அல்லது சிதிலமாக்கப்பட்ட நிலையை அடைந்து விட்டதென்றும், மீள் ஒப்பந்தம் ஒன்று செய்யப்பட வேண்டிய நிலை ஏற்படலாம் என்றும் கூறியுள்ளார்.

ஒப்பந்த சரத்துக்களுக்கு மைய அயர்லாந்துக் குடியரசு இராணுவம் **(IRA)** தெளிவான காலவரையறையொன்றைத் தெரிவிக்காது ஆயுதக் கையளிப்பு விவகாரத்தில் காலம் கடத்துவதாகவும், ஆயுதக் கையளிப்பு சமாதான ஒப்பந்தத்திற்கான ஒரு முன்நிபந்தனையே என்ற புரட்டஸ்தாந்து கட்சியினரின் கூற்றை ஏற்று பிரித்தானியா கடந்த பெப்ரவரி 11ம் திகதி வட அயர்லாந்தின் தன்னாட்சி அமைப்பின் செயற்பாட்டை இடை நிறுத்தியதையடுத்து ஒப்பந்தம் திரிசங்கு சொர்க்கத்தில் விடப்பட்டுள்ளது.

ஏழு தசாப்தங்களுக்கு மேலாக புரையோடிப்போயிருக்கும் வட அயர்லாந்துப் பிரச்சினை கடந்த 1998ம் ஆண்டு ஏப்ரல் 10ம் திகதி கைச்சாத்திடப்பட்ட 'பெரிய வெள்ளி ஒப்பந்தம்' ஓர் நிரந்தரத்தீர்வாக அமையும் என அனைவரும் எண்ணினர். எனினும் தற்போது ஏற்பட்டுள்ள முடங்கல் நிலையானது அயர்லாந்துக் குடியரசு இராணுவத்தை மீண்டும் போராட்டப்பாதையை நாட வைத்து விடுமோ என்ற சந்தேகத்தை எழுப்பியுள்ளது.

பிரித்தானியரின் நடவடிக்கைகளால் வட அயர்லாந்தின் பெரும்பான்மை புரட்டஸ்தாந்து மதத்தினருக்கும் சிறுபான்மை கத்தோலிக்க மதத்தினருக்கும் இடையேயான பிரச்சினை போல் தோற்றமளித்தாலும், அயர்லாந்துப் பிரச்சினையானது வரலாற்று ரீதியாக மாறுபட்ட தோற்றத்தைக் கொண்டதுடன் பிரித்தானியாவை இருதலைக் கொள்ளி எறும்பின் நிலைக்கு இட்டு சென்று அவர்களது சமூக, பொருளாதார வளர்ச்சிக்கு பாரிய தடைக்கல்லாகவும் இருந்து வந்தது.

1169 ல் நடைபெற்ற நோர்மன் படையெடுப்பையடுத்து பிரித்தானியாவின் ஆதிக்கத்திற்குள் வந்த அயர்லாந்தின் மக்கள் 99.9 விழுக்காட்டினா கத்தோலிக்கராகவே இருந்தனர். எனினும் பிரித்தானியரின் ஆதிக்கத்தில் குடியேற்றங்கள் காரணமாக புரட்டஸ்தாந்து மதத்தினரின் எண்ணிக்கை பெருமளவு அதிகரித்தது. அதன் விளைவே அயர்லாந்துக் குடியரசு மற்றும் வட அயர்லாந்தின் தற்போதைய மொத்த சனத் தொகையில் 20 விதமானவர்கள் புரட்டஸ்தாந்து மத்தினர் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

பிரித்தானிய ஆதிக்கத்திலிருந்த அயர்லாந்தை விடுவிப்பதற்கான போராட்டம் 1850 க்களில் அயர்லாந்திலும், அமெரிக்காவிலும் பிரபல்யமாக இயங்கிவந்த பெனியன் இயக்கத்தால் **(Fenian Movement)** முன்வைக்கப்பட்ட போதும் அந்த நூற்றாண்டின் இறுதியிலேயே அது மங்கிப் போய்விட்டது.

தற்போது வட அயர்லாந்தை, அயர்லாந்துடன் இணைக்கக் கோரிப் போராடும் சின் பெய்ன் **(Sinn Fein)** இயக்கமானது 1900த்தின் ஆரம்பங்களில் ஆரம்பிக்கப்பட்டு 1917ம் ஆண்டு அரசியற்கட்சியாக அங்கீகரிக்கப்பட்டது. சின் பெய்ன் என்பதன் பொருள் "எங்களுக்கு நாங்கள்" **(We Ourselves)** ஆகும்.

பிரித்தானிய ஆதிக்கத்தின் கீழ் 1918-ல் நடைபெற்ற பொதுத் தேர்தலில் பெரும்பான்மை வெற்றி பெற்ற இக்கட்சி டெய்ல் எரியன் என அழைக்கப்படும் அயர்லாந்து பாராளுமன்றத்தை **(Assembly of Ireland)** அமைத்தது. எனினும் அடுத்தடுத்த ஆண்டுகளில் அயர்லாந்தின் விடுதலைக்கான இரகசியக் கெரில்லாப் போர் ஒன்றினை


படிப்பகம்

www.padippakam.com

நடத்தியதன் மூலம் 1922ம் ஆண்டு சமாதான ஒப்பந்தம் ஏற்பட வழிவகுத்ததாயினும், அதுவே அயர்லாந்து இரண்டு படவும், அயர்லாந்துக் குடியரசுக் கட்சியாகப் பரிணமித்த சின் பெய்னின் பிரிவுக்கும் வழி வகுத்தது.

ஐரோப்பிய கண்டத்தின் மேற்கு மூலையில் 84,421 சதுர மைல் பரப்பளவில் அமைந்துள்ள அயர்லாந்துத் தீவானது 32 ஆட்சிப்பிரிவுகளைக் **(County)** கொண்டது. 1922ம் ஆண்டு ஏற்படுத்தப்பட்ட சமாதான ஒப்பந்தத்தின் பிரகாரம், 26 ஆட்சிப் பிரதேசங்களை உள்ளடக்கியதாக அயர்லாந்து குடியரசாகவும், மிகுதி ஆறு ஆட்சிப்பிரிவுகள் வட அயர்லாந்துப் பிரதேசமாக பிரித்தானியாவின் ஆட்சியின் கீழ் மாகாணமாகவும் அமைந்திருந்தது.

இம் முடிவானது அயர்லாந்தின் பெரும்பான்மை இனமான கத்தோலிக்கரால் விரும்பப்படாத ஒரு முடிவாகவே இருந்தது. குறிப்பாக அவ் ஆறு ஆட்சிப் பிரதேசத்திலும் வாழ்ந்த கத்தோலிக்க மதத்தினருக்கு **(Nationalist)** தலையிடி கொடுக்கும் ஓர் முடிவாகவே இது அமைந்தது. ஏனெனில் மேற்படி ஆறு ஆட்சிப் பிரிவுகளிலும் புரட்டஸ்தாந்து மக்கள் தொகை அதிகமாக இருப்பதும், அது பிரித்தானியரின் ஆட்சியின் கீழ் செல்வதால் தமது உரிமைகள் மறுக்கப்படும் என்பதுமே காரணமாகும். ஒப்பந்த பேச்சுக்களின் போது, **Ulster** மாகாணம் என அழைக்கப்பட்ட 9 ஆட்சிப் பிரிவுகளுமே வட அயர்லாந்தாக முன்மொழியப்பட்டாலும், இவ்வளவு விரிவான பிரதேசத்தில் பெரும்பான்மையைத் தக்க வைப்பது இயலாத காரியம் என்பதால் புரட்டஸ்தாந்து மதத்தினரால் **(Unionist)** அது நிராகரிக்கப்பட்டது.

எதிர்பார்த்தது போலவே, 1922ம் ஆண்டு ஒப்பந்தத்தையடுத்து பிரித்தானியாவின் ஆளுகைக் குட்பட்ட மாகாணமாகப் பரிணமித்த வட அயர்லாந்தில் பெரும்பான்மை புரட்டஸ்தாந்து மதத்தினருக்கும் சிறுபான்மை கத்தோலிக்க மதத்தினருக்கும் இடையேயான பிரிவு அதிகமான போதும், குடியரசுக்கட்சியாகவும், அயர்லாந்து குடியரசு இராணுவமாகவும் செயற்பட்ட சின் பெய்னின் செயற்பாடுகள் அப் பகுதியில் மந்தமடையத்தொடங்கின.

தொடர்ந்து வந்த இரண்டு, மூன்று தசாப்தங்களாக ஒரு சாதாரண சிறுகட்சியாகத் தனது செயற்பாட்டைக் கொண்டிருந்த சின்பெய்ன், 1950களின் முடிவிலும் 1960களின் ஆரம்பத்திலும் அரசியலில் பிரகாசிக்கத் தொடங்கியதுடன் 1960களின் இறுதிப் பகுதியில் வட அயர்லாந்து பிரதேசத்தை அயர்லாந்துடன் இணைக்கக் கோரி பெரும்பான்மை புரட்டஸ்தாந்து மதத்தினரின் ஆட்சிக்கெதிராகவும், பிரித்தானியாவுக்கெதிராகவும் கெரில்லாப் போரை மீண்டும் ஆரம்பித்தது.

இக்கெரில்லாப் போரை முறியடிப்பதற்காக வட அயர்லாந்தின் **Royal Ulster Constabulary (RUC)**ம் பிரித்தானிய இராணுவமும் கள நடவடிக்கைகளிலிறங்கியது. எனினும் 1970களில் அயர்லாந்து குடியரசு இராணுவத்தின் **Ireland Republic Army (IRA)** செயற்பாடுகள் வலுவடைந்ததுடன், சூரியன் அஸ்தமிக்காத சாம்ராஜ்யம் என வர்ணிக்கப்பட்ட பிரித்தானியாவை சற்று ஈடாடவும் செய்தன.

இக் கால கட்டத்தில் ஜனநாயக வழியிலான போராட்டங்கள் கூட வன் முறையால் அடக்கப்பட்டன. அவற்றில் வட அயர்லாந்தின் டெறி நகரில் 1972 ஜனவரி 30ம் திகதி ஞாயிற்றுக் கிழமை ஆர்ப்பாட்டக்காரர்கள் மீது பிரித்தானிய இராணுவம் நடத்திய துப்பாக்கிச் சூட்டில் 14 பொது மக்கள் கொல்லப்பட்டது குறிப்பிட்டுக் கூறக்கூடிய ஒரு திருப்புமுனையாகும். இதுவே இரத்த ஞாயிறு என்று தற்போது அழைக்கப்படுகிறது.

இதைப்போன்றே 1981ம் ஆண்டு சிறையிலிருந்த அயர்லாந்து குடியரசு இராணுவப் போராளிகளால் மேற்கொள்ளப்பட்ட உண்ணாவிரதப் போராட்டமும் உலகின் கவனத்தை இப்போராட்டத்தின் பால் திருப்பியது. இப்போராட்டத்தில் 10 போராளிகள் உண்ணாவிரத மரணத்தைத் தம்மிடம் அழைத்துக் கொண்டனர். இதில் பொபி சான்ட்ஸ் (இவரே 1981ம் ஆண்டு உண்ணாவிரதப் போராட்டத்தையும் ஆரம்பித்த முதலாவது உண்ணாவிரதி) என்ற போராளியின் மரணத்திற்கு சர்வதேச செய்தி ஊடகங்களனைத்திலும் முக்கியத்துவம் கொடுக்கப்பட்டிருந்தது. இவர் சிறையிலிருந்தவாரே ஏப்ரல் 09,1981-ல் நடைபெற்ற இடைத்தேர்தலொன்றில் பங்கு பற்றி பாராளுமன்ற உறுப்பினராகத் தெரிவு செய்யப்பட்டார். எனினும் மே 5,1981 உண்ணாவிரதத்தின் 65ம் நாள் சிறைச்சாலையிலேயே மரணமடைந்தார்.

வலுவடைந்த வட அயர்லாந்துப் போராட்டமானது பிரித்தானியாவிற்கு பொருளாதார ரீதியில் பெரிய பளுவாக சுமத்தியது. தற்போதைய பெரிய வெள்ளி ஒப்பந்தம் ஏற்படுவதற்கு முன்னர் நாளொன்றுக்கு 9 மில்லியன் பவுன்களை இராணுவ நடவடிக்கைக்கு செலவழித்தது. அதாவது வருடமொன்றிற்கு அண்ணளவாக 3.28 பில்லியன் பவுன்ஸ் ($6.56 பில்லியன் அமெரிக்க டாலர்கள்) செலவழிக்கப்பட்டது.

இப் போராட்டத்தின் தாக்கமே பிரித்தானியாவை ஐரோப்பிய ஒன்றியத்தில் இணைவதைத் தடுத்தது என்ற ஒரு கருத்தும் உண்டு. ஏனெனில் ஐரோப்பிய ஒன்றியத்தை அமைப்பதற்கான பூர்வாங்கப் பேச்சுக்கள் இடம் பெற்றுக் கொண்டிருந்த சமயம், பிரித்தானியாவின் ஆள்வீத வருமானமானது ஐரோப்பாவிலுள்ள 15 நாடுகளில் 11வது இடத்திலிருந்தது. இந்நிலையில் அது ஐரோப்பிய ஒன்றியத்தில் இணைந்தால் அதன் பொருளாதாரம் மேலும் பின்னடையலாம் என்றே அது ஒன்றியத்தில் இணைவதைத் தவிர்த்துக் கொண்டது.

இவ்வாறு தொடர்ந்த வட அயர்லாந்துப் போராட்டமானது, 1990களின் ஆரம்பத்திலிருந்தே ஒரு தீர்வுக்கான அழுத்தத்தை பிரித்தானியாவிற்குக்


படிப்பகம்

www.padippakam.com

கொடுத்து வந்ததுடன், IRA யையும் அதன் அரசியற் பிரிவான சின் பெய்னையும் தீர்வு பற்றிச் சிந்திக்க வைத்ததுடன், 1994ல் யுதத நிறுத்தம் ஒன்று ஏற்படுவதற்கும் வழி வகுத்தது. எனினும், ஜோன் மேயர் தலைமையிலான அரசு தீர்வு முயற்சியில் அக்கறை எடுக்கவில்லை எனக் காரணம் காட்டி IRA இந்த யுத்த நிறுத்தத்தை 1996ல் முறித்துக் கொண்டது.

1997ல் ரொனி பிளேயர் தலைமையிலான அரசு பதவியேற்ற இரண்டு மாதங்களில் அதாவது 1997 யூலையில் IRA மீண்டும் யுத்த நிறுத்தத்தை அறிவித்தது. அதன் பின் சுமார் ஆறு வாரங்களில் முதற்தடவையாக சின் பெய்ன் பேச்சுவார்த்தைகளில் கலந்து கொண்டது. இப்பேச்சுவார்த்தை பெரிய வெள்ளி ஒப்பந்தத்திற்கு வழிவகுத்தது. இச் சமாதான முயற்சியில் பிரித்தானிய அரசு, அயர்லாந்துக் குடியரசு மற்றும் வட அயர்லாந்தின் 18 அரசியற்கட்சிகள் சம்பந்தப்பட்டிருந்தன. இவ் ஒப்பந்தத்தை ஆதரித்து வட அயர்லாந்தில் 71 வீதமான மக்களும், அயர்லாந்துக் குடியரசில் 94 வீதமான மக்களும் வாக்களித்திருந்தனர் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

அண்ணளவாக 8,400 சதுர கிலோ மீற்றர் பரப்பளவைக் கொண்ட வட அயர்லாந்தின் தற்போதைய மக்கள் தொகை1,509,892 ஆகும். இதில் 60 விழுக்காடு புரட்டஸ்தாந்து மதத்தினர், 40 வீதம் கத்தோலிக்க மதத்தவராவர். இதே வேளை அயர்லாந்துக் குடியரசின் மக்கள் தொகை 3,443,405 ஆகும். இதில் 98 விழுக்காடு மக்கள் கத்தோலிக்க மக்களாவர்.

பெரிய வெள்ளி ஒப்பந்தத்தின் பிரகாரம் வட அயர்லாந்துக்கென 108 உறுப்பினர்களை உள்ளடக்கிய சகல அதிகாரங்களையுங் கொண்ட ஒரு சட்ட சபையும் அதற்குள் ஒரு அமைச்சரவையும் அமைக்கப்பட்டது. வட அயர்லாந்தின் வடக்கு தெற்குப் பகுதிகளுக்கான Ministerial Council லும் அமைக்கப்பட்டது. உள்ளூராட்சி அமைப்புக்களுக்கான அதிகாரப் பங்கீடும் ஓரளவு ஒப்பந்தத்திற்கு சாதகமாக கையாளப்பட்ட நிலையிலேயே, அயர்லாந்துக் குடியரசு இராணுவம் (IRA) தெளிவான காலவரையறையொன்றைத் தெரிவிக்காது ஆயுதக் கையளிப்பு விவகாரத்தில் காலம் கடத்துகிறது என்ற புரட்டஸ்தாந்து கட்சிகளின் குற்றச்சாட்டை ஏற்ற பிரித்தானியா, கடந்த பெப்ரவரி 11ம் திகதி வட அயர்லாந்தின் தன்னாட்சி அமைப்புக்களின் செயற்பாட்டை இடை நிறுத்தியுள்ளது. தன்னாட்சி அமைப்புக்களின் செயற்பாட்டை இடை நிறுத்தாவிட்டால் தான் பதவி விலகப் போவதாக வட அயர்லாந்தின் முதல்வரும் அல்ஸ்ரர் புரட்டஸ்தாந்து கட்சியின் தலைவருமான டேவிட் றிம்பிள் கொடுத்த அழுத்தம் காரணமாகவே தாம் இந்த முடிவை எடுதததாகவும் பிரித்தானியா தெரிவித்துள்ளது.

எனினும், ஆயுதக் கையளிப்பு விவகாரத்தில் ஒரு இணக்கப்பாடு காணப்பட்டால் தன்னாட்சி அமைப்பான வட அயர்லாந்துச் சட்டசபையின் (Northern Ireland Assembly) செயற்பாடு உடனடியாக ஆரம்பிக்கப்படும் என பிரித்தானியா தெரிவித்துள்ளது. அதே வேளை, இது பற்றிக் கருத்துத் தெரிவித்த அயர்லாந்தின் பிரதமர் பேர்டி அஹென் தன்னாட்சி அமைப்பின் மீள் செயற்பாடு ஆரம்பிக்கப்பட்டாலே சமாதான ஒப்பந்தத்திலேற்பட்டுள்ள தடையை அகற்ற முடியும் எனவும், ஆயுதக் கையளிப்புக்குரிய அடிப்படைகளை விவாதிக்கலாம் எனவும் தெரிவித்துள்ளார்.

இரண்டு ஆண்டுகால முயற்சியில் பிரசவமான இச் சமாதான ஒப்பந்தம் தனது இரண்டாவது வயதிலேயே திரிசங்கு சொர்க்க நிலையை அடைந்துள்ளதானது, பரஸ்பர புரிந்துணர்வுக்கு இடமளிக்காமல் இவ் ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டதா என்ற கேள்வியை எழுப்புகின்ற போதும் சம்பந்தப்பட்ட தரப்புக்கள் அவதானமாக தற்போது ஏற்பட்டுள்ள முறுகல் நிலையை தீர்க்க முயற்சிப்பார்கள் என நம்பலாம். அதற்கு அவர்களின் கடந்த காலப் படிப்பினைகளும், அனுபவங்களும் உதவி செய்யும்




## பாவலரேறு தமிழ்க்களம் எழுகிறது

## நன்கொடை அனுப்புங்கள்

சென்னை மேடவாக்கம் பாவலரேறு பெருஞ்சித்திரனார் நினைவிடத்தில் பாவலரேறு தமிழ்க்களம் கட்டடப் பணி தொடர்ந்து நடந்து வருகிறது.

இப்பெரும் முயற்சி தமிழ்த் தேசிய எழுச்சிக்கான அடித்தள முயற்சிகளுள் ஒன்று.

தொடங்கப்பெற்ற இம்முயற்சி இடையில் நின்று போகாமல் தொடர்ந்து நடைபெற வேண்டிய சூழல் நம் அனைவரின் முயற்சியிலேயே அடங்கியிருக்கிறது.

தமிழன்பர்களும், தமிழ்த் தேசிய உணர்வாளர்களும் அருள் கூர்ந்து உடன் நன்கொடை தொகை அனுப்பி வைக்குமாறு வேண்டுகிறோம்.

– ஆசிரியர், தமிழர் கண்ணோட்டம்

நன்கொடை அனுப்ப வேண்டிய முகவரி

திருவாட்டி தாமரை பெருஞ்சித்திரனார்
செந்தமிழ் அடுக்ககம்,
மேடவாக்கம் கூட்டுச் சாலை,
மேடவாக்கம், சென்னை - 601 302.




படிப்பகம்

www.padippakam.com

## இராசிபுரத்தில் தமிழ்க்காப்பு ஊர்வலம்

தமிழ் வழிக் கல்வியை எதிர்த்து ஆங்கிலவழிக் கல்வியை வைத்து கொள்ளை லாபம் அடிக்கும்




மெட்ரிக்குலேசன் முதலாளிகளைக் கண்டித்தும், தமிழக அரசின் தமிழ் வழிக் கல்வி ஆணையை எதிர்க்கும் செயலலிதாவை கண்டித்தும் இராசிபுரத்தில் தமிழர் நற்பணி மன்றம் சார்பில் 25/2/2000 அன்று மாபெரும் கண்டன ஊர்வலம் நடைபெற்றது.

ஊர்வலம் முடிவில் திரு பெ.குழந்தைசாமி தலைமையில் நடந்த கூட்டத்தில் தமிழ்ச்சான்றோர் பேரவையின் மாவட்ட ஒருங்கிணைப்பாளர், மருத்துவர் பழ. பாலகிருட்டினன், பேராசிரியர் சி. இரத்தினம் மற்றும் பலர் சிறப்புரையாற்றினர்.

## இளைஞர்எழுச்சிக் கருத்தரங்கம்

26/3/2000 அன்று சத்தி பகத்சிங் நினைவரங்கத்தில் த.இ.மு. சார்பில் தமிழக இளைஞர்களின் எதிர்காலம் என்ற பொருளில் இளைஞர் எழுச்சிக் கருத்தரங்கம் மிகச் சிறப்பாக நடைபெற்றது.

தோழர் நல்.கு. தமிழ் நாடன் (தமிழக துணைத் தலைவர், த.இ.மு.) தலைமை தாங்கினார். அரசியல், பண்பாடு, கல்வி, விவசாய துறைகளில் தமிழக இளைஞர்களின் எதிர்காலம் குறித்து முறையே தோழர்கள் ச. யோகநாதன்(தமிழகத் தலைவர், த.இ.மு.) ம. செந்தமிழன் (பொதுச் செயலாளர், தமிழக மாணவர் முன்னணி) இளமுருகன் (ஈரோடு, தாய்த் தமிழ்ப் பள்ளி) மு. கோவிந்தராசு (தமிழ் தமிழர் இயக்கம்) ஆகியோர் கருத்துரை வழங்கினர்.

நிகழ்ச்சியினை வாழ்த்தி மொழிப்போர் மறவர் இரா. காவிலண்ணல், தோழர் ச. அர மணிபாரதி(பொதுக்குழு த.தே.பொ.க.), எழில் சி. பழனிச்சாமி(இ.க.) பெ. கிருட்டிணசாமி( தாய்த் தமிழ்ப் பள்ளி, கோபி) ஆகியோர் உரையாற்றினர்.

## தோழர் அ. பத்மநாபனுக்கு பிரியா விடை விழா

சென்னை ஒமேகா கேபிள் தொழிற்சாலையில் நீண்ட காலமாய் பணியாற்றி அவ்வாலை தொழிற் சங்கத் தலைவராக இரண்டு, மூன்று முறை தேர்ந்து எடுக்கப்பட்ட த.தே.பொ.க. வின் பொதுக் குழு உறுப்பினர் தோழர் அ. பத்மநாபன் 06/03/2000 அன்று பணி ஓய்வு பெற்றார்.



அன்று மாலை 3.00 மணிக்கு ஆலை வளாகத்தில் நடைபெற்ற பிரியா விடை நிகழ்ச்சியில் தொழிலாளர்கள் அனைவரும் கலந்து கொண்டனர். சங்கத் துணைத் தலைவர் சே. பன்னீர் செல்வம் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் ஆலை இயக்குநர் திரு என்.சி. இராமசாமி, பணியாளர் - மேலாளர் திரு பெ.முருகேசன் சங்கப் பொதுச் செயலாளர் மு. மருதன் உள்ளிட்டோர் உரையாற்றினார்கள். தோழர் அ. பத்மநாபன் ஏற்புரை ஆற்றினார்.

அன்று மாலை 6.00 மணிக்கு அம்பத்தூர் தொழிற்பேட்டை யமுனா உணவகத்தில் தோழர் அ.ப. அவர்களுக்கு நடைபெற்ற பாராட்டு விழாவில் தோழர் வேணி(பாரதி பள்ளி தாளாளர்) தலைமை தாங்கினார். அப்ரோச் சென்னை கிளைச் செயலாளர் திரு. ச. இராமசாமி வரவேற்புரை நிகழ்த்தினார். பல்வேறு சிந்தனையாளர்களும் நண்பர்களுகம் அ.ப.வை பாராட்டினார்கள்.


படிப்பகம்

www.padippakam.com

## சேதுக் கால்வாய்த்திட்டம் 140 ஆண்டுகளுக்குப் பிறகு ஏழாவது முறையாக சாத்தியப்பாட்டு அறிக்கைக்கு ஏற்பாடு

நிதி நிலை அறிக்கையில் சேதுக் கால்வாய்த் திட்டம் சாத்தியப்பாட்டு ஆய்வு மற்றும் சுற்றுச்சூழல் தாக்கம் குறித்து மதிப்பீடு செய்வதற்கு என்று ரூ.4.8 கோடியை ஒதுக்கியுள்ளது பா.ஜ.க. அரசு.

இரண்டு ஆண்டுகளுக்கு முன்னால் ம.தி.மு.க. மாநாட்டில் கலந்து கொண்ட பிரதமர் வாஜ்பாய் சேதுக்கால்வாய்த் திட்டம் உடனே செயல்படுத்தப்படும் என்றார். 1999, சனவரியில் இராமேஸ்வரத்திற்கு வந்த இந்திய பாதுகாப்பு அமைச்சர் ஜார்ஜ்பெர்னான்டசும் இதே வாக்குறுதி அளித்தார்.

ஆனால் யஸ்வந்த் சின்ஹாவின் நிதி நிலை அறிக்கை இத்திட்டம் சாத்தியமா என்று ஆய்வு செய்யப்படவிருப்பதாகக் கூறுகிறது, இந்தவித ஆய்வு இது ஏழாவது முறை.

வெள்ளைக் காரர்கள் ஆட்சிக் காலத்தில் - 1860 - ஆம் ஆண்டு இந்தியக் கப்பல் கழகத் தலைமை மாலுமி ஏ.டி. டெய்லர் என்பவர் சேதுக் கால்வாய்த் திட்டம் பற்றி முதன் முதலில் ஆய்வு செய்து அரசுக்கு அறிக்கை அளித்தார். டெய்லர் இத்திட்டத்திற்கு 'காங்கேசன் துறைத் திட்டம்' என்று பெயர் சூட்டியிருந்தார். இத்திட்டம் சாத்தியமானது என்று அவர் கூறியிருந்தார்.

இத்திட்டம் சிற்சில மாறுதல்கள் செய்யப்பட்டு, அதனடிப்படையில் 1921-ல் மீண்டும் ஒரு சாத்தியப்பாட்டு ஆய்வு செய்யப்பட்டது. இந்திய அரசின் துறைமுகப் பொறியாளர் சர். ராபர்ட் பிரிஸ்லோ என்பவர் செய்த ஆய்வறிக்கை சேதுக் கால்வாய்த் திட்டம் சாத்தியமானதே என்று உறுதி செய்தது.

'சுதந்திர' இந்தியாவிலும் இதேவித ஆய்வு மீண்டும் மேற்கொள்ளப்பட்டது. 1955ல் டாக்டர் ஏ. இராமசாமி முதலியார் தலைமையில் ஐந்து நபர் ஆய்வுக் குழுவை இந்திய அரசு நியமித்தது. சேதுக்கால்வாய் திட்டம் தொழில் நுட்ப வழியில் சரியானது; பொருளாதார ரீதியில் சாத்தியமானது என்று அக்குழு பரிந்துரைத்தது. மீண்டும் 1968 ல் டாக்டர் நாகேந்திர சிங் குழு நியமிக்கப்பட்டது. இக்குழுவும் இத்திட்டம் சாத்தியமானதே என்று உறுதி செய்தது.

1980 - ஆம் ஆண்டு வாக்கில் சேதுத் திட்டத்தைக் கைவிடலாம் என்று கருதி தூத்துக்குடி துறைமுகத் தலைமைப் பொறியாளரை ஆய்வு செய்யச் சொன்னது.

ஜேம்ஸ் ஐசக் கோயில்பிள்ளை என்ற அந்தப் பொறியாளர், இத்திட்டம் 'பொருளாதார ரீதியில் சாத்தியமானதே' என்று அரசுக்கு அறிக்கை அளித்தார்.

அதன்பிறகு இந்திய அரசு நியமித்த எச்.ஆர். லெட்சுமி நாராயணன் குழு சேதுத் திட்டத்திற்குப் பரிந்துரைத்து 1983-ல் அரசுக்கு அறிக்கை அளித்தது. இறுதியில் 1994-ல் பல்லவன் போக்குவரத்து ஆலோசனை ஆய்வு மையம் சேதுக் கால்வாய்த் திட்டம் சாத்தியமே என்று உறுதியளித்தது. மக்களவையின் செலவு ஆய்வுக் குழுவும் 'சேதுக் கால்வாய்த் திட்டம் எல்லா வகையிலும் சாத்தியமானது. தேச நலன் கருதி உடனே அத்திட்டத்தை நிறைவேற்ற வேண்டும்' என்று இந்திய அரசை வலியுறுத்தியது.

இப்படி ஆறு முறை ஆய்வு செய்து, உறுதி செய்த பின் மீண்டும் ஒரு முறை சாத்தியப் பாட்டை ஆய்வு செய்ய வேண்டிய அவசியம் என்ன? தேவையில்லை. இத்திட்டத்தைக் கிடப்பில் போட செய்யப்படும் சூழ்ச்சியே இது.

சேதுக் கால்வாய்த் திட்டம் நிறைவேறினால், தூத்துக்குடித் துறைமுகத்திற்கு வர்த்தக முக்கியத்துவம் அதிகரிக்கும். தென் மாவட்டங்களில் தொழில் வளர்ச்சியடைய வழி ஏற்படும்.

தமிழ்நாட்டின் வளர்ச்சியைவிட சிங்களனின் கொழும்பு துறைமுகத்தின் முக்கியத்துவம் குறைந்து விடக் கூடாது என்பதே தில்லி அரசின் கவலை.

(செய்திகளுக்கு ஆதாரம் : மதுரை சிறப்புச் செய்தியாளர் கட்டுரை The Hindu 4.3.2000)

**தமிழர் கண்ணோட்டம்**

| | | |
|---|---|---|
| தனி இதழ் | : | ரூ.5.00 |
| ஆண்டுக் கட்டணம் | : | ரூ.60.00 |
| வாழ்நாள் கட்டணம் | : | ரூ.600.00 |

கிடைக்குமிடம்:
53(அ) சமீன்தார் குடியிருப்பு,
புது ஆற்றுச் சாலை,
தஞ்சாவூர் - 613 001.
தொலைபேசி : 32994

படிப்பகம்

www.padippakam.com



# புதியதோர் உலகம் செய்வோம்!

உலகம் வாழ வேண்டி
உயிர்களைப் படைத்து
உலகை நிரப்பியவள் பெண்

சுமைகளைத் தாங்கியவள் - பின்
சுமையாகிப் போனவள் பெண்

உலகைப் படைத்தவளை
ஒதுக்கியவர் யார்?
அண்ட சராசரத்தில்
எட்டாத உயரத்தில் - அதாவது
உயரத்தில் இயங்குபவை
ஆண்வர்க்கம் என்றனர்.

சுட்டெரிக்கும் சூரியனை
ஆண வர்க்கத்தில் சேர்த்தவர் யார்?
எரிக்கும் சக்தியை -அன்றே
பெண் அடைந்திருந்தால்
புதிய உலகம் அப்போதே பிறந்திருக்கும்!

புவியையும், நதியையும்
பெண்ணாய் கண்டதால்தான் - இன்று
பேன மறுக்கிறார்கள்!
தாய் - தன் மகளுக்காக
தாய்ப்பாலை விட
கண்ணீரையே அதிகம் சுரக்கிறாள்!
புதிய உலகம் அவ்வப்போது பிறக்காமல் இல்லை
**ஆனாலும்**
பழுப்பேறிய பக்கங்களைச் செப்பனிட்டு
மீண்டும்.... மீண்டும்
நியாயப்படுத்துகின்றனர்
பகிர்ந்தளிக்கப்பட்ட பாஞ்சாலியின் கற்பும்
தீக்குளித்து மீண்ட சீதையின் கண்ணீரும்
புராணப் பெண்களுக்கும்
இதிகாசப் பெண்களுக்கும் நேர்ந்த
துயரங்களுக்கு மாற்றாய்
தெய்வக் கதைகளைப்
பொய்யாய்ப் புனைந்து
பெண்மைக்கு ஈந்த
அடிமை நிலையை அகலாமல்
காக்கின்றோம்!

அடுப்படி அனலைவிட்டு வெளிவந்து
வானத்துச் சூரியனின் உக்கிரத்தை
உணரத் தொடங்கிவிட்டாள் பெண்!

ஆகாயத்தில் பறக்கின்றாள்!
அலைகடலில் பயணிக்கின்றாள்!
புவியெங்கும் திரிகிறாள் பெண்
அவளுக்கிட்ட விலங்குகள் - இன்னும்
அகற்றப்படவில்லையென்பதை அறியாமலேயே!
தளைகள் உடைபட்டதாய் எண்ணி கர்வம் கொள்கிறாள்!



அ. சுபாஷினி


உன் நிலையின்... நிறம் மாறியிருக்கிறது பெண்ணே
நிலை இன்றும் மாறவில்லை

சிறகு முளைத்துவிட்டது
பறக்கவும் கற்றுக்கொண்டாய்
ஆனால்
உன் திசைகளை உன்னால்
தீர்மானிக்க முடியவில்லை.

பறக்கக் கொடுத்த சிறகுகளை
விரித்துப் பறக்கும் விந்தை தெரியாமல்
பறிகொடுக்கிறாய்
மீண்டும்... மீண்டும்
அரையாடை அணிந்து
அந்நிய மொழி பேசி
அங்கிங்கெனாதபடி
எங்கும் அலைந்து
புரட்சி செய்வதாய் பூரிக்கிறாய்!
இது நாகரிக வளர்ச்சியில்லை
பண்பாட்டு வீழ்ச்சி என்பதை
பகுத்தறிவு கொண்டு
சிந்தித்துப் பார்!
உன்னை மீட்க
இன்னொரு பாரதியும்
பெரியாரும்... இனி....
பிறக்கப்போவதில்லை.

புதியதோர் உலகம் செய்யப் புறப்படுமுன்
புதுமைப் பெண்ணுக்கும்
புரட்சிப் பெண்ணுக்கும்
இலக்கணம் என்னவென்று தேடு!

அறிவில் உயர்ந்து
கல்வியில் தேர்ந்து
அச்சம் தவிர்த்து
ஒழுக்கம் காத்து- உன்
தரத்தை உயர்த்து!



படிப்பகம்